

கல்கி

KALKI 18-3-79 75 காசு











LIGHT AND HOOT TORCH LIGHT

ஒரு JOY TOY தயாரிப்பு

வாங்கப்போனால் ரூ. 50 கிரயமுள்ள, ஜாய்டாய் தயாரிப்பான இந்த டார்ச் லைட்டை நீங்கள் முற்றிலும் இலவசமாகப் பெறலாம்!

மூன்று டார்ச் செல்களைக் கொண்டு பிரகாசமான ஒளியை நீண்ட தூரத்துக்குப் பாய்ச்ச வல்லதும், பித்தானை அழுத்தினால் ஸைரன் ஒலி எழுப்பி அக்கம் பக்கத்தாரைக் கூட்ட வல்லதும், மிக அழகான நவீன தோற்றம் உடையதும், உறுதியானதுமான இந்தப் பெரிய டார்ச் லைட்டை நீங்கள் இலவசமாகப் பெறலாம்.

நீங்கள் கல்கிக்குச் சந்தாதாரராகச் சேர்ந்து மூன்று ஆண்டு சந்தாவாக ரூ. 114 அனுப்பி வைத்தால் போதும், உடனே இந்த டார்ச்லைட் உங்களை வந்து அடையும்.

அல்லது.

நீங்கள் ஏற்கெனவே கல்கி சந்தாதாரராக இருந்தால் மேலும் மூன்றாண்டுகளுக்குச் சந்தாவைப் புதுப்பித்துக் கொண்டு இலவசமாக டார்ச்லைட்டைப் பெறலாம்.

அல்லது.

உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு மூன்று ஓராண்டுச் சந்தாவோ அல்லது ஒரு மூன்றாண்டுச் சந்தாவோ பரிசாக வழங்கி டார்ச் லைட்டை நீங்கள் இலவசமாகப் பெறலாம். கல்கி அனுப்பப்பட வேண்டிய விலாசங்களையும் தொகையையும் எமக்கு அனுப்புவதுடன் உங்கள் விலாசத்தையும் மறவாமல் குறிப்பிடவும்.

அல்லது.

உங்கள் நண்பர்கள், உறவினர்களிடமிருந்து மூன்று ஓராண்டுச் சந்தாக்களைச் சேகரித்து எங்களுக்கு அனுப்பி வைப்பதன் மூலமும் இந்த இலவசப் பரிசினை நீங்கள் பெறமுடியும்.

முடிவு தேதி மே 15உ

நிர்வாகி, கல்கி காரியாலயம், சென்னை - 32

கல்கி ரேஸ்கோர்ஸ் ரோடு, கிண்டி, சென்னை-32



பி. வி. ஸ்ரீனிவாசன்



மாறுவேடத்தில்



டி. எஸ். மணி அல்லது அஷோக்



கண்ணன்



தமிழ்வாணன்

நக்ஸலைட்டுகள் எனும் நச்சுப் பாம்புகள்!

ஒரு கொலையைத் தொடர்ந்து மற்றொரு கொலை. கொலை நடந்த இடத்தைச் சுற்றி நக்ஸலைட் நடவடிக்கைகளைப் பற்றிய துண்டுப் பிரசுரங்கள். இதன் எதிரொலியாகத் தமிழ்நாட்டில் சுமார் நானூறு நக்ஸலைட்டுகள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். இது தொடர்பாகப் பல கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார் தமிழ்நாடு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு ஈ. எல். ஸ்டிரேஸி.

கே: நக்ஸலைட்டுகள் என்றால் யார்? இந்தப் பெயர் எப்படி வந்தது? அவர்களுடைய நடவடிக்கைகள் யாவை?

ப: 1967ம் ஆண்டில் மேற்கு வங்காளத்தில் உள்ள ஒரு சிறு கிராமமாகிய நக்சல்பாரியில் சில உழவர்கள் சாரு மஜூம்தார் என்பவர் தலைமையில் ஒருங்கிணைந்து சட்ட விரோதமாக மற்றவர்களது நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டனர். எந்தச் சட்டத்தை அவர்கள் புறக்கணித்தார்களோ, அதே சட்டத்தைக் கொண்டு அவர்களை அடக்க வேண்டியிருந்தது. ஆனால் குறுகிய காலத்தில் இச்சட்ட விரோதப் போக்கு மேற்கு வங்காளம் முழுதும் பரவி விட்டது. கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்) கட்சியிலிருந்து வெளியேறியவர்களும், மற்றும் சில கட்சிகளிலிருந்து வெளியேற்றப் பட்டவர்களும் இதில் தங்களை இணைத்துக் கொண்டார்கள். உதாரணமாக சாரு மஜூம்தார், பரிமல் தாஸ் குப்தா, பானி பாக்சி (Phani Bagchi) ஆகியோர் அதிகாரத்தைக் கைப்பற்ற அராஜகம் தான் துணை என்று நினைத்து இதில் சேர்ந்தார்கள். மாசேதுங்கின் வாக்கியம் ''Power flows from the barrel of the gun'' இவர்களது மூச்சாயிற்று. பின்னர் இவர்கள் இதையே ஒரு கட்சியாக்கி 22-4-1969 லெனின் 100வது பிறந்தநாள் அன்று ஆரம்பிக்கப்பட்டதாக அறிவித்தார்கள். Communist Party (Marxist Leninist) என்று பெயரிட்டு அழைத்தார்கள். ''ஜனநாயகம், தேர்தல் இவைகள் நம் நாட்டுக்குத் தேவை இல்லாதவை; அதிகாரத்தைக் கைப்பற்ற ஒரே வழி ஆயுதப் புரட்சிதான் - இவை தாம் இவர்களது கொள்கைகளாக அறிவிக்கப்பட்டன.

இந்தக் கட்சி மெல்ல மெல்ல ஆந்திரா, உத்தரப் பிரதேசம், பீகார், பஞ்சாப், ஒரிஸ்ஸா, கேரளம், தமிழ் நாடு ஆகிய மாநிலங்களுக்குப் பரவியது. இது இப்படிப் பரவுவதற்கு அநுகூலமான காரணங்கள் வேலையில்லாத் திண்டாட்டமும் நிலச் சொந்தக் காரர்கள் ஏழைப் பாட்டாளிகளை நடத்துகின்ற முறையும்தான்.

தமிழ்நாட்டில் இது தலைதூக்கியது 1968ம் ஆண்டுதான். சாரு மஜூம்தாரைப் பின்பற்றி எல். அப்பு, ஏ. எம். கோதண்டராமன், கலியபெருமாள் ஆகியோர் தங்களது கொள்கைகளைப் பாட்டாளிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர் தலைவர்கள் மத்தியில் பிரசாரம் செய்தார்கள். இது அதிகமாகக் காணப்பட்டது வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தர்மபுரி மாவட்டங்களில். காந்திஜியின் 'அஹிம்சா' வழியை இவர்கள் எதிர்ப்பதால் காந்தியின் சிலைகளை உடைத்தார்கள்.


28-7-1972ல் சாரு மஜூம்தார் இறந்தவுடன் இந்தக் கட்சியே இறந்தது போலாயிற்று. சிறிது காலத்துக்குப் பிறகு ஒன்றாக இருந்தது உடைந்து பல கட்சிகளாயிற்று.

தமிழ் நாட்டில் ஏ. எம். கோதண்டராமன் கைது செய்யப்பட்டவுடன் நக்சலைட் நடவடிக்கைகள் கலகலத்துப் போயின. ஆனால் இரண்டாம் அணித் தலைவர்கள் முன்னணிக்கு வந்து கட்சியை நடத்திச் சென்றார்கள். தமிழ் நாட்டில் உள்ள நக்சலைட்டுகளில் பெரும் பான்மையினர் படித்த இளைஞர்கள் என்பது கவனிக்கத் தக்கது. தற்சமயம் தமிழ் நாட்டில் மூன்று விதமான நக்ஸலைட் குழுக்கள் இருக்கின்றன. ஒன்று கோவையைச் சேர்ந்த ராகவன் தலைமையில் உள்ளது. இவர்கள் அராஜகத்தை எதிர்ப்பவர்கள். இரண்டாவது அணியின் தலைவர் ஏ. எம். கோதண்டராமன். இவர்கள் அராஜகம் செய்தால்தான் அதிகாரம் கிடைக்கும் என்று நினைப்பவர்கள். மற்றொரு அணியின் தலைவர் தமிழ்வாணன். ஆயுதத்தால் மட்டுமே எதையும் சாதிக்க முடியும் என்று நினைப்பவர்கள். இவர்கள் இதற்காக மக்களிடம் பாடங்களை நடத்து

இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸ்டிரேஸி பேட்டி


ராமன் அல்லது ஏலகிரி


ஏ. எம். கோதண்டராமன்


மாறுவேடத்தில்

இறார்கள். இந்தத் துர்ப்போதனைகள் நடக்கும் இடங்கள் மலைப் பிரதேசங்களான ஏலகிரி, ஜவ்வாது ஆகியவை.

சமீபத்தில் நடந்த இரு கொலைகள் 26-2-79: தஞ்சாவூர் மாவட்டத்தில் பாலையூரில். 3-3-79: மேற்கு ராமநாதபுரத்தில் உள்ள செய்தூரில். இவற்றை தமிழ் வாணன் அணியினர் செய்ததாகத்தான் எல்லோரும் நினைக்கின்றனர். இவர்கள் ஓர் இடத்தை, ஒரு மனிதனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். சில காலம் அந்த மனிதனைக் கண்காணிப்பார்கள். அவனது அன்றாடச் செயல்கள் தெரிந்தவுடன் இரவு நேரத்தில் யாரும் இல்லாத இடத்தில் தாக்குவார்கள். ''நாங்கள் தான் தாக்கினோம்'' என்று பறை அறிவிப்பது போல் தங்களது துண்டுப் பிரசுரங்களை உடல் அருகே விட்டுச் செல்வார்கள். தாக்குதலுக்குப் பிறகு எல்லோரும் பல்வேறு திசைகளில் பிரிந்து சென்று முன்கூட்டியே தீர்மானித்த இடங்களில் மறைந்து கொள்வார்கள்.

நெருக்கடி நிலைப் பிரகடனம் அமலில் இருந்த காலத்தில் இந்தக் கட்சித் தலைவர்கள் சிறையில் இருந்தார்கள். கட்சியும் தடை செய்யப்பட்டிருந்தது. நெருக்கடி நிலைப் பிரகடனம் நீக்கப்பட்டவுடன் திரும்பவும் கட்சி தலைதூக்கியுள்ளது.

கே: நக்ஸலைட்டுகள் இருக்கும் இடங்களைக் கண்டு பிடிப்பது கஷ்டமா?

ப: நக்ஸலைட்டுகள் ஓரிடத்தில் இருக்க மாட்டார்கள். பல்வேறு பெயர்களில், முக ஜாடைகளை மாற்றிக்கொண்டு திரிவார்கள். கடிதங்களைப் புதுப் புதுப் பெயர்களில் புதுப் புது விலாசங்களுக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்வார்கள்!

கே: இவர்களுக்கு அயல் நாட்டு உதவிகள் கிடைக்கின்றனவா?

ப: நக்ஸலைட் நடவடிக்கைகள் ஆரம்பமானதே அயல் நாடுகளில் நடப்பனவற்றைப் பார்த்து ஏற்பட்ட தூண்டுதலினால்தான். வெளிநாடுகளிலே கொலையும் களவும் சர்வ சாதாரணம். அதையேதான் இங்குள்ள நக்ஸலைட்களும் பின்பற்றுகிறார்கள். வெளிநாட்டிலிருந்து பல்வேறுவிதமான உதவிகள் வருவதாகச் சொல்கிறார்களே யொழியத் தமிழ் நாட்டைப் பொறுத்த வரைக்கும் இங்குள்ள நக்சலைட்டுகளுக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைப்பதாக இதுவரை எங்களுக்குத் தகவல் இல்லை.

கே: இரண்டு கொலைகள் நடந்துள்ளன. அதற்கு நானூறு பேர்களைக் கைது செய்திருக்கிறீர்களே?

ப: நீங்கள் கொலையையும், கைதாகியுள்ளவர்களின் எண்ணிக்கையையும் இணைத்துப் பார்ப்பதால் தான் இப்படி மலைத்துப் போய்க் கேள்வி கேட்கிறீர்கள். இவ்வளவு பேர் கைது செய்யப் பட்டதன் காரணம், ஒரு கொலையோ அல்லது இரு கொலைகளோ அல்ல. அவற்றைத் தொடர்ந்து மூன்றாவது நான்காவது கொலைகள் நடக்காமல் இருக்கத்தான் கைது செய்கிறோம். போதிய பாதுகாப்பினை நாங்கள் மக்களுக்குத் தர வேண்டாமா? அதற்காகத்தான் முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம். நாங்கள் யாரையுமே தேவையில்லாமல் கைது செய்வதில்லை. நிர்ப்பந்தம் ஏற்பட்டால் மிகக் குறைந்த பட்ச அளவில் தான் கைது செய்கிறோம்.

கே: நக்ஸலைட் அல்லாத கம்யூனிஸ்டுகள் பலரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சித் தலைவர்கள் கூறியுள்ளார்களே?

ப: அப்படி அவர்கள் கூறியிருந்தால் அது அவர்கள் தரப்பு வாதம். நக்ஸலைட்டுகள் யார், யார்? அவர்களுடன் தொடர்பு உள்ளவர்கள் யார், யார் என்று தெரியாமல் நாங்கள் யாரையும் கைது செய்வதில்லை. அவர்கள் எங்கெங்கே இருக்கிறார்கள்? எப்படி எல்லாம் அவர்கள் நடந்து கொள்வார்கள் என்று ஓரளவுக்குத் தெரிந்ததனால்தான் நாங்கள் அவர்களது செயல்களை முறியடிக்க முடிகிறது.

கே: நக்ஸலைட்கள் மிகவும் பெரிய சதித்திட்டம் ஒன்று தீட்டியுள்ளார்கள் என்று தமிழக முதல்வர் கூறியுள்ளாரே?

ப: குழப்பத்தை விளைவிக்க வேண்டும்; அந்தக் குழப்பத்தின் நடுவில் கொடூரமாகக்


திரு. ஸ்டிரேஸி

Special Report



நூறு பக்கத்துக்கு ஒரு இலட்சம்!

● இந்த ஆண்டு பாரதீய ஞான பீடத்தின் ஒரு லட்ச ரூபாய் பரிசுபெறும் 'கித்னீ நாவோன் மே கித்னீ பார்' (எத்தனை படகில் எத்தனை முறைகள்) என்ற கவிதை நூல் 93 பக்கமே கொண்டது. முன்னுரை உட்பட நூறு பக்கத்துக்கும் குறைவு. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாரதீய ஞான பீடமே பதிப்பித்த இந்த நூல் 'அக்ஞேய'வின் நாற்பத்து நான்கு கவிதைகளின் தொகுப்பு.

● அண்மையில் பிறந்த நாள் கொண்டாடிய (மார்ச்சு 7) 'அக்ஞேய'வின் இயற்பெயர் சச்சிதானந்த ஹீராானந்த வாத்ஸ்யாயன். வெளிநாட்டு விஜயங்களின் போது இவரைக் காமசாஸ்திர நூலின் ஆசிரியராகக் கருதிப் பாராட்டியவரும் உண்டு!

● அறுபத்தெட்டு வயதாகும் வாத்ஸ்யாயன் நாற்பது ஆண்டுகளுக்கு அதிகமாக ஹிந்தி இலக்கியத் துறையில் பெயர்பெற்றவர். இவரே தொடங்கிப் பத்திரிகைகள் இரண்டு உட்பட, ஐந்து ஹிந்தி பத்திரிகைகளுக்கும் இரண்டு ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் ஆசிரியராக விளங்கியவர். இப்போது டைம்ஸ் ஆப் இந்தியா நிறுவன ஹிந்தி தினசரியான 'நவ பாரத் டைம்ஸ்' ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

● கிழக்கு பஞ்சாபைச் சேர்ந்த வாத்ஸ்யாயனின் தாய்மொழி ஹிந்தியல்ல. அவரது தந்தையார் ஒரு சரித்திர வல்லுனர். தொல்பொருள் ஆராய்ச்சி நடத்த அவர் மலைகளிலும் காடுகளிலும் மேற்கொண்ட யாத்திரைகளில் சிறுவன் சச்சிதானந்த் உடன் சென்று அனுபவம் அடைந்தான். தந்தையாரிடம் இந்தியக் கலைகளைப் பற்றியும் சம்ஸ்கிருதத்திலும் அடைந்த பயிற்சி ஒருபுறம், விஞ்ஞானத்தில் பட்டக்கல்வி மறுபுறம். அரசியலில் பகத்சிங், சந்திரசேகர ஆஸாத் போன்ற தீவிரவாதிகளின் தொடர்பினால் நான்கு ஆண்டு கடும் சிறையும் ஓராண்டு வீட்டுக் காவலும் பரிசாகப் பெற்றவர்.

● சுதந்திர பாரதத்தில் பத்திரிகை ஆசிரியராகவும் அகராதி ஆசிரியராயும், ராணுவ காப்டனாகவும், வானொலித் தயாரிப்பாளராயும் அமெரிக்கப் பல்கலைக் கழகப் பேராசிரியராயும் பல்வேறு பதவிகளைப் பார்த்திருக்கும் வாத்ஸ்யாயனர் கவிஞராகவும் நாவலாசிரியராகவும் புகழ் பெற்றுள்ளார்.

● இவரது நாவல் 'சேகர்: ஏக் ஜீவனி' சேகரின் வாழ்க்கை ஓர் இளம் தேச பக்த தீவிரவாதியின் கதை. இவரது கவிதைகள் புதுக்கவிதைகளாகவும் பரிசோதனைக் கவிதைகளாகவும் போற்றப்படுகின்றன. இவரது கவிதைத் தொகுப்புக்கள் பதினைந்து. அவற்றுள் ஒன்றுக்கே 1964ம் ஆண்டு சாகித்திய அகாதமிப் பரிசு கிடைத்தது.

● உண்மை நாட்டமும், வாழ்க்கையின் ஆழமான அர்த்தத்தைக்காணும் விழைவும் இவரது எழுத்தில் உள்ளன. இளம் கவிஞர்களை ஊக்குவித்து, 16 கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டிருக்கிறார்! சிறுகதைத் தொகுப்பும் சில பதிப்பித்துள்ளார்.

● 1962 முதல் நான்கு ஆண்டு காலத்தில் சோதனை முயற்சியாக எழுதிய நாற்பத்து நான்கு கவிதைகளே இப்போது பரிசு பெற்றுள்ள நூல். 'உண்மை பல முகம் படைத்தது. அதனைப் பல கோணங்களில் அணுக முடிகிறது' என்ற தத்துவத்தை உணர்த்தும் வகையில் இவரது கவிதைகள் அமைந்துள்ளதாகப் பரிசு வழங்கும் பாரதீய ஞானபீடத்தார் கூறுகின்றனர்.

—டி. எஸ். வி.

கொலைகள் புரிய வேண்டும். இப்படிச் செய்தால் அதிகாரத்தைக் கைப்பற்றி விடலாம் என்று நக்ஸலைட்டுகள் நினைக்கிறார்கள். இவர்களுடைய தற்சமய இலக்குகள் அவர்களால் வர்க்க விரோதிகள் என்று சொல்லப்படுகிற நிலச் சொந்தக்காரர்கள், பெரும் பணக்காரர்கள், வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள், முக்கியமான அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் ஆகியோர். நிலைமைகளை நாங்கள் நன்றாகவே உணர்ந்துள்ளோம். எந்தப் பிரச்னையையும் சமாளிக்க நாங்கள் தயாராகவும் இருக்கிறோம். பல தடுப்பு நடவடிக்கைகளை நாங்கள் எடுத்தும் கண்காணித்தும் வருவதால்தான் இந்த அளவுக்கேனும் நக்சலைட் நடவடிக்கைகள் அடங்கி இருக்கின்றன.

கே: இவ்வளவு பேர் கைது செய்யப்பட்டபின் நிலைமை கட்டுக் கடங்கி விட்டது எனக் கருதலாமா? மக்கள் அச்சமடையலாமா?

ப: அதை எப்படிச் சொல்ல முடியும்? நூறு சதவிகிதம் அளவில் எல்லாமே அடங்கி விட்டது என்று யாருமே எப்போதுமே கூற முடியாது. காவல்துறை தன்னால் இயன்ற அளவு பாதுகாப்பளிக்க முழு முயற்சி செய்கிறது. பாதுகாப்பு அளித்தும் வருகிறது.

கே: நக்சலைட்டுகளின் எண்ணிக்கை அதிகரிக்காமல் இருக்க என்ன வழி?

ப: எதுவுமே மக்களின் கையில்தான் இருக்கிறது. நக்சலைட்டுகள் இருக்கும் இடங்கள், அவர்களுடைய செயல்கள், எல்லாமே அவர்களைச் சுற்றி உள்ள மக்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் அவர்கள் போலீசுக்குத் தகவல் தெரிவிப்பதில்லை. மக்கள் முழுமையான ஒத்துழைப்புத் தந்தால் நாங்கள் முழுமையான பாதுகாப்புத் தர முடியும். பூரண அமைதியை நிலைநாட்ட முடியும்.

பேட்டி: **அசோக்**



கல்கி

1979 மார்ச் 18

காளயுக்தி பங்குனி 4

மலர்: 37 இதழ்: 33

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

ரஜினிகாந்த்

ரஜினிகாந்த் கைதாகி ஜாமீனில் விடுதலை பெற்றிருக்கிறார்.

இதன் பின்னணியில் பரஸ்பரம் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி இன்று எல்லாருக்கும் தெரியும்.

'விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்' என்று போலீஸார் கூறியுள்ளனர்.

வழக்கின் முடிவு எதுவானாலும் இந்த விவகாரம் நம்மைப் பொதுவான, அடிப்படையான விஷயங்கள் குறித்துச் சிந்திக்க வைக்கிறது.

எழுத்து சுதந்திரம், அபிப்பிராய சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் எல்லாம் அதிர்ஷ்டவசமாக இன்று நமக்கு இருக்கின்றன. இவற்றை நாம் பொறுப்புணர்ச்சியின்றித் துஷ்பிரயோகம் செய்யும் போது உணர்ச்சிகள் கிளறி விடப்படுகின்றன. கோப தாபங்கள், காம இச்சைகள் முதலியன பொங்கி மேலெழுகின்றன. உணர்ச்சிகள் கட்டுமீறிப் பீறிடும்போது மனிதன் குற்றங்கள் புரியும் நிலைக்குத் தள்ளப்படுகிறான். சமூகம் சீரழிகிறது.

'நான் ஆபாசமாகத்தான் எழுதுகிறேன்; அதுதான் மக்களுக்குப் பிடிக்கிறது; எனக்கும் பணம் கிடைக்கிறது; அதற்காகத்தான் எழுதுகிறேன்' என்று சொல்லிக் கொள்வது இன்று சில எழுத்தாளர்களிடையே ஒரு ஃபாஷன் ஆகி விட்டது.

'நான் வியாபார நோக்கில்தான் பத்திரிகை நடத்துகிறேன்; அதற்காகத்தான் அதில் எழுத்திலும் படங்களிலும் ஸெக்ஸைக் கையாளுகிறேன்' என்று கூசாமல் பேட்டியில் கூறிப் பெருமைப்படுகிற பத்திரிகை அதிபர்கள் —ஆசிரியர்கள் இன்று இருக்கிறார்கள்.

தங்கள் கட்சிக்கும் தலைவருக்கும் பாதகமான செய்திகளைக் கூட சாதகம் போல் காட்டக் கூடிய தலைப்புக்களுடன் பிரசுரிக்கும் தினசரிகள் இன்று ஏராளம்.

பரபரப்பூட்டும்விதமாக எதையாவது செய்ய வேண்டும், எப்படியாவது மக்களைக் கவர வேண்டும் என்பதில் ஓர் ஆரோக்கியமற்ற போட்டி நிலவுகிறது.

சினிமா பற்றியோ, தரக் குறைவான பல சினிமாப் பத்திரிகைகள் பற்றியோ சொல்லவே வேண்டாம், தெரிந்த கதை.

ஒரு நடன மணியுடன் உரையாடும்போது அவரைப் புகழ்ந்து பேசும் விமர்சகர், அதே நேரத்தில் இன்னொரு நாட்டிய நங்கையைக் கேலி செய்கிறார். இதைப் பிரசுரிக்கும் பத்திரிகை, சுற்றிலுமிருந்தவர்கள் சிரித்தார்கள் என்றும் அடைப்புக் குறிக்குள் வெளியிடுகிறது. இது ரசனைக் குறைவு என்பதும் பத்திரிகைத் தர்மம் அல்ல என்பதும் சம்பந்தப் பட்டவர்களுக்கு மறந்து போகிறது.

இரு பிரபல சங்கீத விற்பன்னர்களுக்கு இடையில் ராகங்கள் பற்றி ஆரம்பமான சர்ச்சை, தெரு ஒர அசுத்தங்கள், பன்றி, நாய் என்று ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்கிற அளவில் தரம் தாழ்ந்து போகிறது. அவர்கள் எழுதினாலும் 'எடிட்' செய்து விடுகிற உரிமை ஆசிரியருக்கு உண்டு என்பது உணரப்படுவதில்லை. அல்லது வேண்டுமென்றே அப்படியே இருக்கட்டும் என்று விடப்படுகிறது.

கௌரவமான பத்திரிகைகள் என்று மக்கள் நம்பி ஏற்கும் பத்திரிகைகளிலேயே இந்த நிலை என்றால் மஞ்சள் பத்திரிகை என்று பெயரெடுத்து விட்டவை பற்றி நினைக்கவே உள்ளம் நடுங்குகிறது.

வியாபார நோக்கில் பத்திரிகை நடத்த வேண்டியதுதான். லாபநோக்கு இல்லையெனில் பத்திரிகையே இல்லை. அதற்காக எதை வேணுமானாலும் செய்வதா?

'வியாபார நோக்கில்தான் நான் பாலில் நீரைக் கலக்கிறேன்' என்று பால்காரரோ, 'வியாபார நோக்கில்தான் கலப்படம் பண்ணுகிறேன்' என்று மளிகைக் கடைக்காரரோ, கூறித் தப்ப முடியுமா? ஆனால் சில பத்திரிகை

களும் பல சினிமாக்களும் பாலுடன் விஷத்தையே கலந்து கொடுத்து விட்டு, 'வியாபார நோக்கு' என்று காரணம் கூறித் தப்பித்துக் கொள்கின்றனர்! காம உணர்வு என்பது பிரஜோற்பத்திக்காக இறைவன் மனிதனிடம் இயற்கையாகவே வைத்துள்ள பலஹீனம். இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்திப் பணம் பண்ணுவது பாதகம். முத்தத்தில் ஆரம்பித்து சம்போகத்தில் முடிகிற தொடர்கதைகளுக்கு இப்போது அவசியம் என்ன வந்தது? தேசத்தையும் மக்களையும் எதிர்நோக்கியுள்ள வேறு பிரச்னைகளா இல்லை?

உண்மைகள் வெளியிடப்பட வேண்டியதுதான். அது பத்திரிகை தர்மமே. விவாதங்கள் நிகழ வேண்டியதுதான். அப்போதுதான் தெளிவு பிறக்கும், சந்தேகமில்லை. விமர்சனங்கள் தேவைதான். அப்போதுதான் கலைகள் வளரும், ஐயமில்லை. ஆனால் இவையெல்லாம் ஓர் உயர்ந்த நிலையில் நடக்க வேண்டும். தரம் தாழ்ந்து போனால் சமுதாயத்துக்கு நன்மைகளை விடத் தீமைகளே சம்பவிக்கும்.

ரஜினிகாந்த் சம்பந்தப்பட்டது போன்ற சம்பவங்கள் ஒன்றல்ல, பல நிகழும்.

ரஜ்னிகாந்த் சம்பவம் நம் அனைவர் உள்ளங்களிலும் ஆத்ம பரிசோதனை நடக்க உதவினால் ஒரு தீமையிலிருந்தும் நன்மை விளைந்ததாகும்.

ஏகாதிபத்தியப் போக்கை எதிர்த்தே தீருவோம்!

பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் இருக்கும் திக்கு நோக்கித் தண்டம் சமர்ப்பிக்கிறோம்.

நமது தலையங்கம் ஒன்றினை மதித்து அதில் அவரது கருத்துக்கள் சரியாகப் பிரகரிக்கப்படாமல் இருப்பதாகக் கருதிப் பதிலளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

அவரது எண்ணங்களைத் தாங்கிக் கல்கி வெளிவர முடிந்ததில் (11.3.79 இதழ்) பெருமிதம் கொள்கிறோம்.

ஆனால் அவரது கருத்துக்கள் இந்தப் பத்திரிகையின் கருத்துக்கள் அல்ல என்பதையும் தெளிவு படுத்தி விட விரும்புகிறோம். ஆட்சி மொழி விஷயத்தில் இந்தப் பத்திரிகையின் கொள்கை, ராஜாஜி அவர்கள் ஐயம்திரிபுக்கு இடமின்றித் தெளிவாக வகுத்துக் கொடுத்த ஒன்றுதான்:

மாநிலங்களில் அந்தந்தப் பிராந்திய மொழி ஆட்சி மொழியாக இருக்கட்டும். மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையே தொடர்பு மொழியாக ஆங்கிலம் இந்நாள்வரை இருந்தது போலவே இனியும் நீடிக்கட்டும். அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவான மத்திய அரசின் நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் நடைபெறட்டும். மாநிலங்களுக்கு இடையே தொடர்பு மொழியாகவும் ஆங்கிலமே நீடிக்கட்டும்.

இது, தேசத்தின் ஒருமைப்பாட்டினைக் கருத்தில் கொண்டும், சிறுபான்மையினரான ஒரு பிராந்திய மொழியினர் மற்ற மொழிகள் பேசும் பெரும்பான்மை மக்கள் மீது மேலாதிக்கம் செலுத்தி, அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்குகிற அநீதியைத் தவிர்க்கவும் ராஜாஜி வகுத்துத் தந்த திட்டம். இந்தத் திட்டத்திலிருந்து மாறுபட்டால் தேசத்தில் குழப்பமும் தீமையும்தான் வளருமே தவிர நன்மை ஏதும் ஏற்படாது. இதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

பக்தவத்சலத்தின் விளக்கத்தைப் படிக்கும் போது ஹிந்தியுடன் ஆங்கிலமும் ஆட்சி மொழியாக, தொடர்பு மொழியாக இருக்கும் கொள்கையை அவர் ஏற்றுள்ளது தெரிகிறது. ஹிந்தியுடன் ஆங்கிலம் என்னும் போது மத்திய, மாநில அரசுகள் ஏராளமான மொழி பெயர்ப்பாளர்களை வேலைக்கு நியமித்து வரிப்பணத்தை வீணடிப்பதில்தான் முடியும். மொழி பெயர்ப்பில் தவறுகள் நேர்ந்து குழப்பங்கள் விளையும். இதுவே ராஜாஜியின் கருத்து. ஆகவே ஹிந்தியுடன் ஆங்கிலமும் நீடிக்கும் என்று பக்தவத்சலம் அவர்கள் பெற்ற Statutory Protection அதிகப் பலன் தரப் போவதில்லை. மாறாக, ஹிந்தியுடன் ஆங்கிலமும் நீடிக்கட்டும் என்ற அளவுக்கு 'நாம்' விட்டுக்கொடுக்கப் போய்த்தான் 'அவர்கள்' ஹிந்தி திணிப்பைத் தீவிரமாக்குகிறார்கள், ஆங்கிலத்தை அகற்றும் வேலையையும் துரிதப் படுத்துகிறார்கள்.

''பாரதத்தின் ஒற்றுமையைக் குலைத்துப் பிரிவினைக்கு அடிகோலும் எண்ணமுடையவர்கள்'' பற்றி பக்தவத்சலம் குறிப்பிடுகிறார். தி. மு. க. பிரிவினை வாதத்தைக் கைவிட்டு நீண்ட காலம் ஆகிவிட்டது. அப்படியே அது பிரிவினை வாதத்தை மறுபடியும் ஆரம்பிக்குமானால் அதனை எதிர்க்கும் ஏடுகளில் முன்னணியில் கல்கி நிற்கும். இன்றையச் சூழலில் ஹிந்தி திணிப்பை முடுக்கி விடுகிறவர்கள்தாம் பிரிவினை மனப்பான்மைக்கு அடிகோலுகிறார்கள். தி. மு. க.வோ அ. இ. அ. தி. மு. க. வோ அல்ல.

அரசியல் சட்டத்தைத் திருத்துவது சுலபமல்ல என்கிறார் பக்தவத்சலம். சுலபம் என்று யாரும் நினைக்கவில்லை. ஆனால் சுலபமல்ல என்பதால் ஒரு நல்ல காரியத்தைச் செய்ய முயலாமல் இருந்து விடக் கூடாது. பையன் படிக்காமல் ஊர் சுற்றினால் அவனைப் படிக்க வைப்பது சுலபமல்ல என்பதால் தந்தை பேசாமல் இருந்து விடுவாரா? ''பரீட்சை நெருங்குகிறது! படிடா!'' என்றுதான் திரும்பத் திரும்பச் சொல்வார். ராஜாஜியும் இப்படித்தான், 'எத்தனையோ வேண்டாத, தகாத விஷயங்களுக்கெல்லாம் அரசியல் சாசனத்தை மாற்றினீர்களே, ஆட்சி மொழி விஷயத்தில் ஒரு தர்ம நியாயமான காரியத்துக்காக மாற்றுங்களேன்' என்று திரும்பத் திரும்பச் சொன்னார். இந்த ஒரு விஷயத்தில் மட்டுமல்ல, வேறு எத்தனையோ பல விஷயங்களிலும் அவர் தமது கருத்துக்கள் ஏற்கப்படும் என்ற நிச்சயமில்லா விட்டாலும் கூடச் சொன்னார். அன்று ஏற்கப்படா விட்டாலும் பின்னால் அவரது கூற்றுக்கள் சரியானவை

என உணரப்பட்டன. இனியும் பல விஷயங்கள் குறித்து இவ்வாறே உணரப்படும்.

தமிழ் மக்கள் மீது ஹிந்தியை யாரும் திணிக்க முடியாது என்கிறார் பக்தவத்சலம். தமிழகத்தின் மீது மட்டுமல்ல, நாடு தழுவிய நோக்கிலே கூட ஹிந்தி எப்படியெல்லாம் திட்டமிட்டுத் திணிக்கப்படுகிறது என்பதை மாறனின் மாநிலங்களவைப் பேச்சு தெளிவு படுத்துகிறது. மறுக்க முடியாத சான்றுகளை எடுத்துக் காட்டி ஆணித்தரமான வாதங்களை சமர்ப்பித்திருக்கிறார். மார்ச்சு மாதம் 7,8 முரசொலி இதழ்களைத் தேடிப் பிடித்துப் படிக்க முடியாதவர்கள், அடுத்த வாரக் கல்கியில் வெளியாகவிருக்கும் அந்தப் பேச்சின் சுருக்கத்தையாவது படித்துப் பார்க்குமாறு வேண்டுகிறோம். இதனால் தி. மு. க. கட்சி ஏடாக கல்கி மாறிவிட்டது என்று யாரும் அசட்டுத்தனமாக அர்த்தம் பண்ணிக் கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறோம்.


மக்கள் வேலை தேடிப் பிற மாநிலங்களுக்குப் போக வேண்டாம் என்றால் ஹிந்தி படிக்க வேண்டாம் என்கிறார் பெரியவர் பக்தவத்சலம். பிற மாநிலங்களுக்கு வேலை வாய்ப்புக் கருதிப் போகிறவர்கள் ஹிந்தி கற்க வேண்டாம் என்று யார் சொன்னார்கள்? ராஜாஜி, கருணாநிதி, எம். ஜி. ஆர். யாருமே நமக்குத் தெரிந்து அப்படிக் கூறவில்லை. அதற்கென்ன, ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் வேலை நிமித்தமோ வியாபார நிமித்தமோ போகிறவர்கள் அந்தந்த தேச மொழிகளைக் கூடத் தான் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் பேசுவதெல்லாம் மத்திய அரசின் ஆட்சி மொழி விஷயமாக, மாநில அரசுகளுக்கிடையே தொடர்பு மொழி குறித்து — இவையன்றி வேறில்லை.

பக்தவத்சலம் அவர்களுடைய பதிலில் ஒரே ஒரு விஷயத்தில் நாம் அவருடன் ஒத்துப் போக முடிகிறது என்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். இரு காங்கிரஸ்களும் இணைந்து பலமான கட்சியாக விளங்க வேண்டும் என்று பக்தவத்சலம் விரும்புவதில் நமக்குக் கருத்து மாறுபாடே கிடையாது. அத்துடன் அந்த இணைப்பு கௌரவமான முறையில் நடக்க வேண்டும் என்று தாம் விரும்புவதாகவும் எந்த ஒரு தனி நபருக்காகவும் தாம் துடிக்க வில்லை என்றும் தெளிவு படுத்தியிருக்கிறாரே அதனை ரொம்ப மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். இந்திரா — சஞ்சையின் மேலாதிக்கம் நீங்கப் பெற்ற இரு காங்கிரஸ்களின் இணைப்பு, தேசத்துக்கு நிச்சயமான நன்மை பயக்க முடியும் என்பதில் நமக்குச் சிறிதளவும் ஐயப்பாடு இல்லை.

இதேபோன்று ஹிந்தி பேசுவோரின் மேலாதிக்கம் நீங்கப் பெற்ற ஆட்சி மொழிக் கொள்கையே தேசத்துக்கு நிச்சயமான, நிரந்தரமான பயன் தரும் என்பதிலும் நமக்குச் சந்தேகமில்லை.







கத்திரியும் ஊசியும்

ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா

புலன் அநுபவங்களை மனிதனால் தவிர்க்க முடியாது. இயற்கை அவனை அப்படிப் படைத்திருக்கிறது. இவற்றை தர்மப்படி முறைப்படுத்திக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதே முதலில் செய்ய வேண்டியது. ஒரேயடியாக இவற்றுக்கு ஆளாகாமல் முதலில் வகை தொகைப் படுத்த வேண்டும். பிறகுதான் இவற்றின் ஆளுகை சிறிது சிறிதாக நலியத் தொடங்கும். அதற்கப்புறமே புலன்களைக் கடந்த பேரின்பத்தின் அநுபவத்தில் சேர முடியும். தொடக்கத்திலேயே புலன் அநுபவங்களை வேரோடு களையப் பார்ப்பது சிரமம் என்பதைக் கருத்தில் கொண்டுதான் நம் வேத தர்மத்தில் கிருஹஸ்தாச்ரமத்தை அநுமதித்திருக்கிறது. அதேபோல் நான்கு புருஷார்த்தங்களில் நடு இரண்டாக அர்த்தம் (பொருள்), காமம் என்ற இரண்டிற்கும் இடம் கொடுத்திருக்கிறது.

ஆனால் மனம் போனபடி அர்த்த — காமங்களிலேயே மனிதன் முழுகிவிடக் கூடாதென்று தான் முதல் புருஷார்த்தமாக தர்மத்தை ரிஷிகள் வைத்திருக்கிறார்கள். தர்மம்தான் முதலில் சொன்னபடி புலன் வேகங்களை நிர்ப்பந்தமாகக் களையாமல், பக்குவமாகக் கட்டுப் படுத்தித் தரும் சாதனம். தர்மம் என்ற முதல் புருஷார்த்தப்படி அர்த்த — காமங்களை ஆண்டு அநுபவித்தால் சிறுகச் சிறுகப் பக்குவப்பட்டு, கடைசியில் நாலாவது புருஷார்த்தமான பேரின்பமாம் மோக்ஷத்தில் சேரலாம்.


அர்த்த — காமங்களுக்கு முன் தர்மம் இருப்பது போலவே கிருஹஸ்தாச்ரமத்துக்கு முன் பிரம்மசர்யம் விதிக்கப்பட்டிருக்கிறது. வேத வித்யா அப்பியாஸத்தால் தர்மங்களைக் கற்பித்து — குரு சுச்ருஷை முதலியவற்றால் முதலில் ஒருவனை நல்ல இளமைப் பருவத்தில் ஒழுக்கமுள்ளவனாகக் கட்டுப்படுத்துவது பிரம்மசரியம். தற்காலத்தில் கலியாணமாகாதவர்களையெல்லாம் பிரம்மசாரி என்கிறோம். வாஸ்தவத்தில் இப்படிச் சொல்வது கேலிக்கிடமாகும். பிரம்மம் என்றால் வேதம் என்றும் பரம்பொருள் என்றும் அர்த்தம். இவற்றில் சஞ்சரிப்பவன் தான் பிரம்மசாரி. வேதம் சொல்லும் தர்மங்களை பிரம்மசரியத்தில் தெரிந்து கொண்ட பிரம்மசாரி அவற்றால் கட்டுப்பாடு பெற்று அர்த்த — காமங்களை அநுபவிக்கும் கிருஹஸ்தனாகிறான். பிறகு வனத்துக்குச் சென்று வைதிக காரியங்களை மட்டும் செய்யும் வானப் பிரஸ்தனாகிறான். கடைசியில் எல்லாக் காரியங்களையும் விட்டு ஸந்நியாஸியாகி மோக்ஷம் என்ற புருஷார்த்தத்தைப் பெறுகிறான்.

வேத வித்தையோடு உலகியல் சாஸ்திரங்கள் உள்பட அனைத்தையும் ஒருவன் கற்பான். விஞ்ஞானம் கூட அதில் வந்து விடும். இவை யாவும் தனித்தனியாகப் பல விஷயங்களைப் பிரிவுபடுத்தி அவற்றில் அறிவூட்டுகின்றன. உலக வாழ்க்கை என்பது என்ன என்றே தெரியாமல் விஸ்தாரமாக இருக்கிறது. நம்மைக் குழப்புகிறது. விஞ்ஞானம் முதலான சாஸ்திரங்களும் கலைகளும் அதைப் பல பகுதிகளாகப் பிரித்துப் பிரித்து, இவை இவை இன்ன இன்ன என்று புரிந்து கொள்ளும்படி தருகின்றன.



மொரார்ஜி தேசாய்
நிறைய தோசை
சாப்பிட்டால் அவருக்கு
'மொரார்ஜி **தோசாய்**'
என்ற பெயரை வைத்துவிடலாம்!

•



தமிழக அரசின்
டில்லிப் பிரதிநிதி
ராஜாராம் லீவு எடுத்துக்
கொண்டால், அவரை
ரஜாராம் என்று குறிப்பிடலாம்!

•



ராஜ்நாராயணன்
தன் சண்டைப் போக்கை
மாற்றிக் கொண்டு
சமாதானமாகி விட்டால் அவரை
ராஜிநாராயணன் என்று
கூறலாம்!

ஆனாலும் இதிலும் ஒரே துறையை மட்டும் எடுத்துக் கொண்டு போனால் வாழ்க்கையின் முழுமை தெரியாது. ஒரு சின்ன வட்டத்துக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வருவதாகத்தான் ஆகும். தற்போது கல்வித் திட்டத்தில் எல்லாவற்றையும் specialised subjects ஆக்கியிருப்பது இப்படித்தான் செய்திருக்கிறது.

ஒரு 'பீஸ்' துணி இருக்கிறது. அதை உடம்புக்குப் பொருந்த அணிய முடிவதில்லை. கத்திரிக் கோலால் சட்டை, சராய் என்பவற்றுக்கான பல பகுதிகளாக அதை வெட்டுகிறோம். உலகியல் சாஸ்திரங்கள் இப்படியேதான் வாழ்க்கை என்ற விஸ்தாரப் புதிரை இனம் பிரித்துத் துறை துறையாகத் துண்டித்துக் காட்டுகிறது. ஆனால் வெட்டிய அத் துண்டங்களை வைத்துக் கொண்டு மட்டும் என்ன செய்வது? இது தெரியாமல்தான் இப்போது தவித்துக் கொண்டும் பாழாகிக் கொண்டும் இருக்கிறோம்.

ஆதி காலத்திலும் உலகியல் சாஸ்திரங்கள் இவ்வாறே ஒன்றேயான வாழ்க்கையைப் பிரித்துக் கொடுத்தன. ஆனால் துணியைத் துண்டாக வெட்டியதோடு அன்றைய கல்வி நின்று விடவில்லை. அனைத்து வாழ்க்கையும் ஒன்றேயான பரம்பொருளே என்பதாகத் துண்டுகளையெல்லாம் இணைத்துக் காட்டும் ஆத்மிக அறிவையும் அது ஊட்டியது. முதலில் துணியை அளவுபடுத்தி வெட்டித் தரும் லௌகிக தர்ம சாஸ்திரங்கள்; பிறகு அவற்றையெல்லாம் ஒன்றாக்கித் தைக்கும் வேதாந்த சாஸ்திரம். கத்தரிபோல், உலகியல் சாஸ்திரங்கள் பலவாக ஒழுங்குபடுத்தித் தனித்துண்டங்களாக்கித் தந்ததை வேதாந்தம் என்பது ஊசிபோல் பிரம்மம் என்ற ஒரே இழையில் சேர்த்துத் தைத்துக் கொடுத்தது.

வேதாந்தத்துக்கு ஆதாரமான பிரம்ம ஸூத்ரம் ''அதாதோ ப்ரஹ்ம ஜிக்ஞாஸா'' என்று தொடங்குகிறது. ''இதன் பின் பிரம்மத்தைப் பற்றிய ஆராய்ச்சி'' என்பது இதன் பொருள். எதன் பின்? ''தர்மத்தில் அமைந்த கர்மத்தைச் சொல்லும் உலகியல் போதனைக்குப் பின்'' என்பது உட்கிடை. இந்தப் போதனையால் வாழ்க்கையைப் பலவாகப் பகுத்துக் கொண்டபின், வேதாந்த போதனையால் எல்லாவற்றையும் ஒன்றாக இசைத்துக் காணவே ''ப்ரஹ்ம ஜிக்ஞாஸா'' மேற்கொள்ளப்படுகிறது.

தற்போதைய கல்வி முறையில் துணியைத் துண்டம் துண்டமாக வெட்டிவிடுகிற உலகியல் கத்திரியின் காரியத்தோடு நின்று விடுகிறோம்; துண்டங்களை அகண்ட இழையில் சேர்த்து உருப்படியாக இசைக்கும் ஊசியான ஆன்மிக அறிவைப் புகட்டாததால் வாழ்க்கையைப் பயனே தெரியாமல் வீண் செய்து விடுகிறோம். (சுருக்கம்: ரா. கணபதி)

மாமனிதர்கள் சங்கம்!

ரோட்டரி, லயன்ஸ், ஃபிரிமேஸன்ஸ் போன்ற பல சர்வதேசச் சங்கங்கள் பலவிதமாகவும் சமூகத்துக்கு நற்பணியாற்றி வருகின்றன. ஆனால் ஜயண்ட்ஸ் இன்டர்நேஷனல் ஒரு வகையில் வித்தியாசமானது. மற்றவை மேனாடுகளில் தோன்றி இந்தியாவிலும் பரவியவை. ஜயண்ட்ஸ், இந்தியாவில் தோன்றி மேனாடுகளில் விரைவாகப் பரவி வருகிறது.

இச்சங்கத்தின் திருச்சி கிளை அண்மையில் தொடங்கப் பெற்றது. நேஷனல் கல்லூரிப் பேராசிரியர் திரு எஸ். ராமச்சந்திரன் (இடது கோடி) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கல்கி ஆசிரியர் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

Generosity, Integrity, Action, Nobility, Truthfulness service என்ற வார்த்தைகளின் முதலெழுத்துக்களைச் சேர்த்து ஜயண்ட்ஸ் என்ற பெயரைச் சூடியுள்ள இச்சங்கத்தை ''மாமனிதர்கள் சங்கம்'' என வர்ணிக்கலாம் தானே!





தாளிப்பு

மிஸ்ஸை டிஸ்மிஸ் செய்தார்!

டென்மார்க் நாட்டுப் பிரதமர் அங்கர் ஜார்கென்சன் செய்த ஒரு காரியம் பலரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. தமது கல்வி அமைச்சர் மிஸ் ரிட் ஜொர்காரிடை டிஸ்மிஸ் செய்தார். என்ன காரணமாம்? இரண்டு சர்வதேச மகாநாடுகளில் கலந்து கொள்வதற்காக பாரீஸ் சென்றிருந்த மிஸ் ரிட், சொகுசு ஓட்டலில் தங்கிப் பெருந் தொகைக்குச் செலவு வைத்தாராம். ஹோட்டல் பில்லைப் பற்றி அறிந்த பிரதமர் அவரை டிஸ்மிஸ் செய்வதாக அறிவித்தார். பாரீஸில் 13 நாள் தங்கி அளவுக்கு மீறிய செலவு செய்த காரணத்தால் கல்வி அமைச்சரை டிஸ்மிஸ் செய்ததாக டி. வி. பேட்டியில் பிரதமர் தெரிவித்தார்!

பலே, டென்மார்க் பிரதமர்!

ரூ 26,000/= செலவில் அழைப்பிதழ்கள்!

மொரார்ஜி தேசாயின் உதவியுடன் திரைக்கதை அமைக்கப்படும் படம் யோகேஷ்வர் கிருஷ்ணா.

சஷிகபூர், தர்மேந்திரா, ராஜ்கபூர், ஹேமமாலினி, அம்ஜத்கான், ரிஷிகபூர் ஆகியோர் நடிக்கும் இப்பிரம்மாண்ட படத்துக்குச் சென்ற ஆண்டில் ஒருநாள் முகூர்த்தம் நடந்தது.

இந்த விழாவுக்கு அழைப்பிதழ் (4 பக்கங்கள் கொண்டவை) அச்சடிக்க மட்டும் 26000 ரூபாய் செலவாயிற்று. விழாவுக்கு ஒரு லட்ச ரூபாய் செலவாயிற்று.

இது தயாரிப்பாளர் பேட்டி ஒன்றில் தந்துள்ள தகவல்.

ஆதாரம்: ப்ரோப்



பிணமும் பணமும்!



பணம் என்றால் பிணம் வாயைத் திறக்குமோ இல்லையோ, மருத்துவக் கல்லூரிகள் வாயைத் திறக்கும்! (அங்கு 'பிணங்கள்' வைக்கப்பட்டிருப்பதாலா?) அதுவும் பீஹார் மாநிலக் கல்லூரிகள் பணம் என்றால் முதலையாக வாயைத் திறக்கின்றன.

இந்தியப் பல்கலைக் கழக சங்கத்தினரின் வெளியீடான, 'மெடிகல் எஜுகேஷன்' பற்றிய புத்தகத்திலிருந்து பீகாரின் பேராசை தெரிய வருகிறது. அங்குள்ள மருத்துவக் கல்லூரிகள் அட்மிஷனுக்குக் குறைந்தபட்சம் ஒட்டு மொத்தமாக 25,000 ரூபாய் வாங்குகின்றன. முஸப்பர்பூர் ஸ்ரீ கிருஷ்ணா மெடிகல் காலேஜ், மகத் மெடிகல் காலேஜ், நலந்தா மெடிகல் காலேஜ், பாட்னா, பாடலிபுத்ரா மெடிகல் காலேஜ், தன்பாத், இம்பூட்பூர் எம். ஜி. எம். மெடிகல் காலேஜ் எல்லாம் 25675-லிருந்து 28000 வரை ரூபாய் கேட்கின்றன. ரிகார்டை வைத்திருப்பது மணிபாலில் (கர்நாடகா) உள்ள கஸ்தூரிபா மெடிகல் காலேஜ். சம்பளம் இல்லாமல் கனிவாக 44,000 ரூபாய் தர வேண்டுமாம்!

— கருகு

சுயசரிதை பொதுவாக ஆசிரியரின் குறைகளை வெளியிடாது— அவரது ஞாபக சக்தியில் உள்ள குறையைத் தவிர!

— எஃப். பி. ஜோன்ஸ்

புகழ்பெற்ற 11 நாவலாசிரியர்-களின் புதிய படைப்புகள்

பூம்புகார்

வெளியீடுகள்

சாம்ராட் அசோகன்

கோவி. மணிசேகரன் எழுதியது.
சாம்ராட் அசோகன் பௌத்தத்
துறவியானது கலிங்கப் போரினால்
அல்ல, மகளின் காதல் விவகாரத்
தினால்தான் என்பதை விளக்கும்
ஒப்பற்ற சரித்திர நவீனம் ரூ. 9.90

பொன்னி

மலையாள நாவல்:
மலையாற்றூர் இராமகிருஷ்ணன்
தமிழில்: சி.ஏ. பாலன்
நீலகிரி மலைக்காட்டு முடுகர்குல
இளம் பெண்ணின் காதல் கதை
ரூ. 10.90

கனுக்கண்டேன் தோழி...!

ஜே.எம். சாலி எழுதியது.
இரு இளம் உள்ளங்களின்
உணர்ச்சி மோதல்களைச்
சித்திரிக்கும் நாவல் ரூ. 10.90

தனிப்பறவை

இனியவன் எழுதியது
கிராமீய மணம் கமழும் காதலும்,
தியாகமும் கலந்த ஒப்பற்ற நவீனம்
ரூ. 7.40

ராஜஸ்தானத்து அந்தப்புரங்கள்

ராகுல் சாங்கிருத்யாயன் எழுதியது
தமிழில்: சௌரி
ராஜஸ்தானத்து சமஸ்தான
அந்தப்புரப் பெண்களின் அந்தரங்க
வரலாறுகள். உண்மைக் கதை
ரூ. 8.90

தேய்பிறை

பி.சி. கணேசன் எழுதியது.
சினிமா உலக அவலங்களின்
படப்பிடிப்பு ரூ. 6.90

கடலில் கலக்காத நதி

புலவர் வேதா எழுதியது
வழி தவறிச் செல்லும் ஒருத்தியின்
மனப் போராட்டமும், காதல்
உணர்வும் கலந்த அற்புதக் கதை
ரூ. 8.90

திருவரங்கன் உலா

ஸ்ரீ வேணுகோபாலன் எழுதியது
தென்னகத்தில் மொகலாயப் படை
யெடுப்பின் போது ஸ்ரீரங்கத்தில்
திருவரங்கனுக்கு ஏற்பட்ட சோதனை
களையும் அப் பெருமானுக்காகப்
போராடி வெற்றிகண்ட பெருமக்களை
யும் பற்றிய சரித்திர நவீனம்
ரூ. 19.50

மறவர் குலத்து மலர்க்கொடி !

கே.ஜி. இராதா மணாளன் எழுதியது.
பாண்டியர் காலத்தைக் களனாகக்
கொண்டு படைக்கப் பெற்ற
சிறந்த நவீனம் ரூ. 9.90

ஓர் அழகியின் சுயசரிதை

மலையாள நாவல்: பி. கேசவ தேவ்
தமிழில்: சி.ஏ. பாலன்
ஓர் அழகிய அபலைப் பெண்ணின்
சோகக் கதை ரூ. 7.90

ஷேக்ஸ்பியர் கதைகள்

முல்லை முத்தையா எழுதியது.
ஷேக்ஸ்பியர் நாடகங்கள் அனைத்தும்
கதைகளாக இனிய நடையில்
எழுதப்பட்டது. ரூ. 9.90

எனது கீழ்க்கண்ட முகவரிக்கு ....
(   ) பிரதிகளை வி.பி.பி. தபாலில்
அனுப்ப வேண்டுகிறேன்.
பெயர் ....
விலாசம் ....
ஒப்பம்.

பூம்புகார் பிரசுரம்

15, மண்ணடி மன்னார்சாமி கோவில் தெரு
சென்னை - 600 013

EP-PP-108

தேடுங்கள் கண்டடைவீர்கள்

கண்ணதாசன் பக்கம்

பாலைவனத்து ஒட்டகம் தன் மீது சவாரி செய்பவனை ஏற்றிக் கொண்டு தண்ணீரைத் தேடி அலைகிறது. ஒரு கட்டத்தில் கண்டு பிடித்து விடுகிறது.

எவனோ ஒருவன் சுரங்கத்துக்குள் இறங்கிக் கோடு கோடாக ஓடிக் கொண்டிருந்த ரேகைகளைத் திரட்டிய போதுதான், முதல் தங்கம் உபயோகத்துக்கு வந்தது.

பலவகையான கற்களுக்கு நடுவே, 'விலை உயர்ந்த கல் இதுதான்' என்று ஒருவனுக்குப் புரிந்த போதுதான் வைரம் கண்டு பிடிக்கப் பட்டது.

கொலம்பஸ் நீண்ட காலம் பசி தாகத்தோடு தேடினான்; ஒரு புதிய நாட்டைக் கண்டு பிடித்தான். வாஸ்கோடகாமாவும் அப்படியே.

இந்தியா என்ற ஒரு நாட்டைப் பற்றி அதிகத் தகவல் தெரியும் முன்னாலேயே, சீன யாத்திரிகன் அதைத் தேடிக் கண்டுபிடித்து விட்டான்.

விண்வெளியைப் பார்த்து ஆச்சரியப் பட்ட மனிதர்களுக்கு நடுவே, சந்திர மண்டலத்தைத் தேடியவன்தான் போயிறங்கினான்.

அழகான பெண்ணுக்காகத் தேடி அலைகிறவன், காலம் கடந்தாவது அவளைக் கண்டு பிடித்து விடுகிறான்.

தேடுகிறவர்கள்தான், கண்டு அடைகிறார்கள்.

எதையும், 'இல்லை இல்லை' என்று மறுப்பவர்கள், அழகர் கோவில் மாடு மாதிரித் தலையாட்டிக் கொண்டே இருந்து விடுகிறார்கள்.

ஆகவே, 'உண்டு' என்கின்ற வாதம் ஒரு நம்பிக்கையாளனின் ஹிருதயத்தில் இருந்து எழுகிறது.

'இல்லை' என்ற வாதம், ஒரு சோம்பேறியின் நாக்கில் இருந்து எழுகிறது.

''கடவுள் இருக்கிறதா, இல்லையா?''

இது எந்தக் காலத்துக்கும், எந்த மனிதனுக்கும் புதிய கேள்வியல்ல.

ஆனால், 'இருக்கிறான்' என்று சொல்பவனுக்குக் கிடைத்த அறிவு வரங்களைப் போல, 'இல்லை' என்றவனுக்குக் கிடைத்ததில்லை.

'சாப்பாடு இருக்கிறதா' என்று கேட்டால், 'இருக்கிறது' என்று சொல்கிறவர்கள்தான் கூட்டு, பொரியல் என்று பல விஷயங்களைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது. 'இல்லை' என்பவர்கள் அந்த ஒரு வார்த்தையை மட்டும் சொல்லி விட்டுப் படுத்து விடலாம்.

அதனால்தான் ஏசுநாதரும், 'தேடுங்கள் கண்டடைவீர்கள்' என்றார்.

தேடியவனுக்குத்தான் திரவியம் கிடைக்கும். தேடாதவன் யாசகம்தான் வாங்க வேண்டியிருக்கும்.

வேலைகளிலேயே ஆஸ்திகனுடைய வேலை தான் மிகப் பெரிது.

நாஸ்திகன் ஒரு வறட்டுத் தலை. அவன் தொண்டையில் இருந்து 'இல்லை' என்று ஒரு வார்த்தை மட்டுமே வருகிறது. அவன் பேசுவதற்கும் விஷயமில்லை, எழுதுவதற்கும் விஷயமில்லை. அதனால் அவன் முன்னாலே கூடுவதற்கும் கூட்டமில்லை. அறிவுள்ளவர்கள் அவனைத் தேடுவதில்லை.

ஜனன — மரண ரகசியங்களுக்கும் அப்பாற்பட்ட பிரம்ம ரகசியமே ஆஸ்திகம்.

அதனால்தான் பக்தி முற்றிய நிலையில் ஒருவன், பைத்தியக்காரனைப் போல் புலம்புகிறான். இறைவனைப் பல வடிவங்களில் காண்கிறான். இன்ப துன்பங்களில் சம நோக்கை எட்டி விடுகிறான். உடம்பு வேறு, ஆன்மா வேறு என்று பிரித்துப் பார்க்கிறான்.

விஞ்ஞானமே இன்னும் தேடிக் கொண்டிருக்கும் ரகசியங்களை, தன் ஞானக் கண்ணால், கண்டுபிடிக்கிறான்.

பெரிய பெரிய தத்துவங்களில் மிகச் சுலபமாக இறங்கி விடுகிறான்.

எந்தக் கடலில் விழுந்தாலும் நீந்தலாம் என்று அவனுக்குத் தைரியம் வருகிறது.

தண்ணீரே இல்லாத வைகை ஆறும், தாளாத வெள்ளம் போகும் கங்கை யாறும் அவனது கண்களுக்கு, அவை தத்துவ நதிகளாகவே தோற்றமளிக்கின்றன.

திருவருட்பா, தேவாரம், திருப்புகழ், திருவாசகம் — இவை யெல்லாம் வெறும் பக்திப் புலம்பல்களே.

ஆனால் இந்த மாணிக்கங்களில் நாலில் ஒரு பாகத்தைக் கூட இன்றைய நவீன மனிதன் எட்ட முடியவில்லை.

அவன் தேடினான், கண்டு அடைந்து விட்டான்.

நாஸ்திகனை இறைவன் தேடுகிறான்; ஒரு நாள் கண்டு கொண்டு விடுவான்.



பாட்டிமார்களும் பேத்திமார்களும்

ஜெயகாந்தன்

9. சின்னப் பையன் கேட்கும்படியாச்சே!

சாமியார் வாசல் படிக்கட்டில், மேல் படியில் முழங்கையை ஊன்றி வசதியாக மண்டியிட்டு ஏதோ மேடையில் நிகழும் ஒரு நாடகக் காட்சியைப் பார்ப்பது போல் சுகமாக உட்கார்ந்து கொண்டார்.


பெரியசாமி ஏன் இப்படி அநாவசியமாக முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டிருக்கிறான்.... இந்த வாண்டுப் பயல் சிங்காரமும் ரொம்பக் கோபமாக முறைத்துக் கொண்டு நிற்கிறான். என்னமோ நடக்கப் போகிறது என்ற திகிலுடன் கையில் கொண்டு வந்த சிங்காரத்தின் புத்தகக் கட்டைக் கீழே வைக்க மனமில்லாமல் தான் ஏதோ குற்றமிழைத்தாற் போல் நடுங்கிக் கொண்டு திண்ணையோரமாகப் பம்மி நிற்கிறான் முருகேசன்.

பெரியசாமி மடியின் மீது ஒரு பிரம்பை வைத்து உருட்டிக் கொண்டே கண்டிப்பும் கடுமையும் கலந்த அழுத்தத்துடன் சிங்காரத்திடம் கேட்டான்:

''மத்தியானம் சுவரேறிக் குதிச்சிப் பள்ளிக்கூடத்திலேயிருந்து எங்கே போயி சுத்தினே?''

''ம்... எங்கே போனே?'' என்று இன்னொரு அதட்டல் போட்டவுடன் முருகேசன்தான் திடுக்கிட்டுப் போனான்.

சிங்காரம் பெரியசாமியை ஏளனமாகப்



பார்த்தான். இழிவான ஒரு மனிதனைப் பார்ப்பதுபோல் மிகத் துச்சமாக, இடுங்கிய கண்களால் பார்த்து இதழோரம் நெளியக் கோணலாய் ஓர் அலட்சியச் சிரிப்பை உதிர்த்தான்:

''உனக்கு என்ன மனசிலே 'பெரிய—அப்பா'ன்னு நெனைப்பா? அதிகாரம் பண்றே... நான் ஒண்ணும் தாசித் தெருவுக்குப் போயிட்டு வரலே...'' என்று கோபமாய், ஆங்காரமாய் கூறினான் சிங்காரம். இவன் தன்னைக் கேட்கவும் தான் பதில் சொல்லவும் ஆயிற்றே — இதற்கெல்லாம் அப்பா செத்துப் போனதல்லவா காரணம் என்ற நினைவால் அந்தக் கோபத்திலும் அப்பாவின் பிரிவால் விளைந்த துயரம் பொறுது அவன் கண்களில் கண்ணீர் பெருகிற்று...

தன்னை அழ வைத்து விட்டானே என்ற கோபத்தில் அவனைப்பார்த்துப் பற்களைக் கடித்தான் சிங்காரம். பெரியசாமிக்குக் காலும் கையும் வெலவெலத்துப் போயிற்று. சிங்காரத்தை — அவனது ரௌத்ர கோலத்தைப் பார்க்கும் போது பெரிய சாமிக்கு, இறந்து போன மருதேசன் பிள்ளை இவன் மீது சன்னதம் கொண்டு நிற்கிறாரோ என்று தோன்றியது. திண்ணையிலிருந்து எழுந்துநின்று கொண்டு, படிக்கட்டில் மண்டியிட்டு நாடகம் மாதிரி நடப்பனவற்றை யெல்லாம் ரசித்துக் கொண்டிருக்கும் சாமியாரைச் சாட்சிக்கு அழைத்துப் புலம்பினான் பெரியசாமி. ''சாமி... எல்லாத்தையும் பாத்துக்கினு தானே இருக்கீங்க?...' அவன் என்ன பேச்சுப் பேசறான்?... நான் ஏதாவது தப்பாக் கேட்டேனா?... மத்தியானம் எங்கே போனேன்னு கேட்டா இவன் வயசுக்கு இவன் என்னைக் கேக்கற கேள்வியைப் பாத்தீங்களா சாமி?''.. என்று அங்கலாய்த்தான்.



''அப்பா, தம்பி! நீ ரொம்பப் பெரிய மனுஷன்... அது தெரியாமல் உன்னை வந்து கேட்டது தப்புத்தான்'' என்று தன் தவடையில் ஓங்கி ஓங்கி அறைந்து கொண்டு, குனிந்து நின்று வெறுப்புடன் சிங்காரத்துக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு உள்ளே போய் விட்டான் பெரியசாமி. அவமானத்தால் அவனுக்கு அழுகை வந்தது. அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டு படுக்கையில் படுத்துக் கொண்டு சிறிதே அழுதான் பெரியசாமி.

''இந்த வீடு கூட என் அப்பாவோடது தான்... நீ படுத்திருக்கியே அந்தக் கட்டில், மெத்தையெல்லாம் என் அப்பா வோடது தான்... இந்த வீட்டிலே உனக்கு ஒரு சொந்தமும் கிடையாது. அப்பா செத்தது உனக்குச் சந்தோஷம் தானே?... அப்பத்தானே வந்து இந்த வீட்டிலே புகுந்துக்கிட்டு அதிகாரம் பண்ணலாம்... எங்கப்பா எல்லாத்தையும் என் பேருக்குத்தான் எழுதி வச்சிருக்கார். எனக்கு மைனர் தெளியற வரைக்கும் நீ சும்மா கணக்குப் பிள்ளை உத்தியோகம் பண்ணிக்கிட்டு இருக்கலாம்... என்னை ஒண்ணும் நீ அதிகாரம் பண்ணத் தேவையில்லே'' என்று சாமியாரைச் சாட்சியாக வைத்துக் கொண்டு பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தான் சிங்காரம்.

அவன் பேசுகிற வார்த்தைகளையெல்லாம் செவியைத் தீட்டிக் கொண்டு கேட்டான் அறைக்குள்ளிருந்த பெரியசாமி...

'இவனுக்கு இதெல்லாம் யாரு சொல்லிக் கொடுத்திருப்பாங்க?' என்று யோசிக்க ஆரம்பித்தான் பெரியசாமி. சிங்காரம் பேசுவதைப் பார்த்தால் அவனது தோற்றத்துக்கும் வயதுக்கும் இந்தப் பேச்சுக்களையெல்லாம் இவன் யாரோ சொல்லிக் கொடுத்துத்தான் பேசுகிறான் என்றே யாரும் நினைக்க முடியும்...

சாமியார் ஒரு மென் சிரிப்புடன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தார். இங்கு நடந்ததையெல்லாம் நடையோரமாய் நின்று பார்த்து விட்டுத் தன்னை எவரும் கவனிப்பதற்கு முன்னால் பூனை மாதிரி நழுவிக் கொண்டிருந்தான் காத்தியப்பி.

''சரியப்பா சிங்காரம்... அடங்கு! பெரியவங்க சின்னவங்கன்னு மரியாதை தெரியாதவன் என்னு நியாயம் பேசி என்ன பயன்?... அடங்கு...'' என்று புன்னகையோடு அவனைச் சமாதானப்படுத்தினார் சாமியார்.

''உனக்குப் பாடம் கத்துக்குடுக்கறதுக்குக் கூப்பிட்டுது அண்ணாத்தே. நீ அவருக்குப் பாடம் கத்துக்குடுத்துட்டே. சரி... இருட்டறதுக்கு மின்னாலே வூட்டுக்குப் போ.. யாருப்பா அது முருகேசா... இளவரசைக் கூட்டிச்கிட்டுப் போ'' என்று விண்டலாகத் தமாஷைச் சிலக் காட்டிச்கொண்டு புறக் கட்டிலிருந்து எழுந்து, பெரியசாமி இருக்கும்படியான

எனைத்தானும் நல்லவை

ஆந்திராவில் உள்ள புட்டபர்த்தி கிராமத்தின் மொத்த மக்கட்தொகை 3000. அதில் முஸ்லீம் மக்கள் 300. மிகுந்த ஏழைமைநிலையிலுள்ள அந்தக் கிராமத்து முஸ்லீம்கள், தொழுகைக்காக நான்கு மைல் தொலைவிலுள்ள புக்கப் பட்டிணம் சென்று வந்து கொண்டிருந்தனர். இதனைக் கண்ணுற்ற 'பாபா' அந்த மக்களின் இசைவோடு, சிறப்புக்கலை நிகழும் அற்புத மிக்க ஒரு மசூதியை புட்டபர்த்தியில் உருவாக்கினர். ரம்ஸான் பண்டிகை நாளன்று, மசூதியை சுவாமிகளே திறந்து வைத்தார்.

குன்றக்குடி பெரிய பெருமாள்.



அறைச் சன்னலை நோக்கி வந்தார் விளக்கு. சாமியாரையும் சற்றுக் கோபத்தோடு நிமிர்ந்து பார்த்து, அவர் அவனைக் கவனிக்காமல் மேலே போகவே — விரைத்துக் கொண்டு படியிறங்கி வேகமாய் நடந்து போனான் சிங்காரம். முருகேசன் புத்தகச் சுமையுடன் அவன் பின்னால் ஓடினான்.

''தம்பி... பெரியசாமி, அவன் சின்னக் குழந்தையுமில்லே, பெரிய மனுஷனுமில்லே; ரெண்டுங்கெட்டான்... அவன் சொன்னதுக்காக நீ வருத்தப் படாதே.. பையனுக்கு நாக்கு நீளம்தான்...'' என்று சமாதானம் கூறிவிட்டு, நேரம் இருண்டு வருவதைக் கண்டு தெரு விளக்குகளை ஏற்றி விட்டு வருவதற்காகப் புறப்பட்டார் சாமியார்.

பெரியசாமிக்குச் சிங்காரம் சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றும் நூறு நூறாய்ப் பெருகிச் செவியில் மோதியவாறிருந்தன.

தன் தகப்பன் மருதேசன் பிள்ளை தன்மீது வைத்திருந்த பகைமையும் வெறுப்பும் அவரோடு போயிற்று என்று நிம்மதியாயிருந்த பெரிய சாமிக்கு இப்போது மிகவும் இளமையாக அந்த விரோதம் வடிவம் கொண்டு எழுந்து நிற்பதாய்த் தோன்றியது.

அவரது பேச்சைக் கேட்காததாலும், குடும்பத்துக்குக் கெட்ட பேர் வருகிற விதமாகவும் தான் நடந்து கொண்டதற்காக அவர் தன்னிடம் விரோதம் பாராட்டினர். இவனுக்கென்ன? தன் மகனைப் போல் வயசுடைய சிங்காரத்துக்குத் தன் மீது இவ்வளவு கோபமும் அவமரியாதை உணர்ச்சியும் இருக்கும் என்று எதிர்பார்க்காத பெரியசாமிக்கு இந்தத் திமிர் அநுபவத்தால் பொறி கலங்கியது.

தான் தொடர்ந்து இந்த வீட்டில் இருப்பது கூட நியாயமற்றது போலவும், அவன் வந்து தன்னை 'வெளியில் போ' என்று மரியாதைக் குறைவாக நாலு பேர் முன்னால் வைத்துச் சொல்லுவதற்கு முன் தானும் தன் மனைவியும் இந்த வீட்டை விட்டு வெளியேறிப் பழைய, பழனியாண்டவர் கோயில் பக்க வீட்டுக்கே போய்விட வேண்டும் என்றும் தீர்மானித்தான் பெரியசாமி.

இந்த மாதிரிப் பெரிய விஷயங்களையெல்லாம் அவனிடம் கோதை தான் பேசியிருக்க வேண்டும் என்று எண்ணினன் பெரியசாமி. இந்த உயில் விஷயமாக மட்டுமா, அல்லது சற்றுமுன் சிங்காரம் கேட்டானே அந்தக் கேள்விகளையும் கூட அவள்தான் அவனைக் கேட்கச் சொல்லிக் கற்றுக் கொடுத்திருக்கிருளோ என்று சந்தேகித்தான் பெரியசாமி.

கதவைத் திறந்து கொண்டு பின் கட்டுக்குப் போனன். நடுக்கட்டில் மங்களம் குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுப் பாடித் தூங்கப் பண்ணிக் கொண்டிருந்தாள். கடைசித் தம்பி வைத்தி கூடத்தில் உட்கார்ந்து பாடம் எழுதிக்கொண்டிருந்தான். இருட்டி விட்டதால் அவனுக்கு மேலே எழுதுவதற்கு விளக்கு தேவைப்பட்டது.

''அண்ணி... விளக்கை ஏத்திக் கொண்டா நான் எழுதணும்'' என்று அவன் இரைந்து சொன்னதைக் கேட்டுத் தூங்குகிற குழந்தை எங்கே விழித்துக் கொள்ளப் போகிறதோ என்ற பயத்துடன் 'உஸ்' என்று வாய் மீது விரல் வைத்து அவனை எச்சரித்து விட்டு விளக்கை எடுத்துக் கொண்டு வருவதற்காகப் பின் கட்டுக்குத் திரும்பிய மங்களம் தன் பின்னால் வரும் புருஷனைப் பார்த்து நின்றாள்.

''நாம்ப இனிமே இந்த வீட்டிலே இருக்கறது மரியாதையில்லே... மூட்டையைக் கட்டு — பழைய வீட்டுக்கே போகலாம்...'' என்று படபடவென்று பொரிந்தான் பெரியசாமி. மங்களத்துக்கு என்ன நடந்தது என்று ஒன்றும் தெரியாது. ஆனால் புருஷனின் பதைப்பைக் கண்டு, தானேதும் மறுத்துச் சொல்லி அவன் கோபத்தை அதிகப் படுத்தி விடக் கூடாதே என்று அஞ்சி ''இப்பவேவா பொறப்படச் சொல்றீங்க!... என்ன நடந்திச்சு?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள் மங்களம்.

என்ன நடந்தது என்று இவளுக்குத் தான் விளக்கிக் கொண்டிருப்பது அநாவசியம் என்று நினைத்த பெரியசாமி ''நமக்குச் சொந்தமில்லாத வீட்டிலே நாம ஏன் இருக்கணும்? ஏதோ மைனர் பசங்களுக்கு வயசு வர வரைக்கும் பாத்துக்கறதுதான் நம்ப வேலை. என்னைப் பெத்த புண்ணியத்துக்கு எங்க அப்பாருக்கு நான் செய்ய வேண்டிய கடமை அது... மத்தபடி இந்த வீட்டிலே நாம் ஏன் இருக்கணும்? இவங்க எல்லாம் நமக்கு யாரு?'' என்று அவன் பேசுவதற்கு விளக்கம் கேட்டு மேலும் தெரிந்து கொள்ள முடியுமா, மங்களத்துக்கு? ஒன்றும் புரியாமல், ஏதோ விபரீதம் என்று மட்டும் அனுமானம் செய்து

கொண்டு பின் கட்டுக்கு ஓடினாள். நாத்தனார்மார்களிடம் இது விஷயமாகக் கலந்து பேசாமலும், அவர்கள் உத்தரவு கேட்காமலும் புருஷன் கூப்பிடுகிறானே, என்று அவளால் போய் விட முடியுமா? அப்படிப் போனால் இந்தப் பெண்கள் அவளை வறுத்தெடுத்து விட மாட்டார்களா?...

மங்களமே பின் கட்டுக்குப் போனதும் முதலில் காந்திமதியைத்தான் எதிர்கொண்டு சந்தித்தாள். காந்திமதி மங்களத்தையும், அவள் பின்னால் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு நிற்கும் அண்ணனையும் பார்த்து — நடந்தவையொன்றும் தனக்குத் தெரியாதவள் போன்ற முகபாவத்துடன் ''வைத்தி எங்கே? முன்கட்டிலே விளக்கைக் காணோமே'' என்று கேட்டாள்.


''அதுக்குத்தான் விளக்கெடுத்துக்கிட்டுப் போக வந்தேன்—அங்கே வைத்தி படிச்சிக்கிட்டிருக்குது—அதுக்குள்ளே இவங்க வந்து என்னை 'இப்பவே அந்த வீட்டுக்குப் பொறப்படு'ங்கறாங்க... அதான் சொல்லிட்டுப் போக வந்தேன்...'' என்று கொடியில் கிடந்த தனது புடவைகளைச் சுருட்டினாள் மங்களம்.

''என்ன அண்ணாத்தே, இதெல்லாம்? என்ன ஆச்சு இப்ப?... ஏன் இந்த வீட்டிலே உனக்கு என்ன தப்புப் பண்ணினாங்க?...'' என்று ஆதரவாகவும், ஆக்ரோஷமாகவும் கேட்டாள் காந்திமதி. காந்திமதி வேண்டுமென்றே சற்றுக் குரலை எடுப்பாக உயர்த்தி அண்ணனைச் சமாதானப் படுத்தினாள். அவள் குரலையும், அண்ணனோடு அவள் பேசுகிறாள் என்பதையும் கண்டு கொண்ட மற்ற சகோதரிகள்மார் அனைவரும் பின் கட்டிலிருந்து ஒவ்வொருவராய் — கையில் விளக்கெடுத்துக் கொண்டு வருகிற சாக்கிலும், அடுப்பங்கரை வேலைகளைச் செய்கிற முகாந்திரத்திலும் இவர்கள் பேசுகிற இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

பெரியசாமி அவர்கள் அனைவரையும் பார்த்துச் சொன்னான்.

''நீங்க எல்லாம் இந்த வீட்டுப் பெண்களா இருந்தாலும் உங்களுக்கெல்லாம் இங்கே இருக்கிற சொந்தமோ உரிமையோ, குடும்பத்துக்குப் பெரியவனாகப் பிறந்தும் எனக்கு இல்லாமல் பண்ணிட்டாங்க நம்ப அப்பா... அதனாலேதானே இந்தச் சின்னப் பையன் என்னை அந்த மாதிரிக் கேள்வி யெல்லாம் கேட்கும்படி யாச்சு'' என்று தங்கையிடம் சொல்லிக் கண் கலங்கினான் பெரியசாமி. அவன் கண் கலங்கி அழுவதைப் பார்த்ததும் காந்திமதிக்கும் அழுகை வந்து விட்டது. முந்தானையைக் கண்களில் கசக்கிக் கொண்டே,

''அண்ணாத்தே — இப்ப என்ன அதுக்கெல்லாம்? அப்பா குணம் தெரிஞ்சது தானே?... சொந்தமும் உறவும் இல்லேன்னு சொல்லிட்டாப் போயிடுமா! இருக்குன்னு சொல்லிட்டா வந்துடுமா? அந்த விரோதமெல்லாம் அப்பாவோட போச்சு.... இப்ப என்னத்துக்கு அதை நெனைச்சி நீ வருத்தப் படறே'' என்று சிங்காரம் சற்று முன் பெரியசாமியை எதிர்த்துப் பேசியதெதுவும் தெரியாதவள் போல் தொடர்ந்து அவனுக்குப் போலிச் சமாதானம் கூறினாள். (தொடரும்)



மேலட்டை கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. பெண்மணி காப்பி சாப்பிடும் அழகைப் பார்த்தவுடன் நாமும் ஒரு கப் காப்பி சாப்பிட வேண்டும் என்ற ஏக்கத்தை உண்டு பண்ணியது.

போடிநாயக்கனூர் எல். வி. மணி

இராமச்சந்திர சோழன் கற்பனை மிக அருமையாக இருந்தது. வாய் விட்டுச் சிரித்தே விட்டேன். ''தர்மம் தழைக்கும், நீதி நிலைக்கும், வாய்மை வெல்லும். உழைப்பு உயர்வு தரும்'' என்ற வரிகளைப் படித்தபோது செம்பியனை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. பிரச்சினையை எத்தனை அழகாக விவரித்துள்ளார். நிலச் சொந்தக்காரர்களின் நன்றி அவருக்கு நிச்சயம் உண்டு.

சென்னை—1 ஆ. இந்திராகணேஷ்

என்னுடைய தந்தை ஒரு சிறிய நிலச் சுவான்தார். குத்தகைக்காரர்கள் குத்தகைக்கான நெல்லினை ஒழுங்காகக் கொடுப்பதில்லை. இந்தத் தொல்லையிலிருந்து விடுபடுவதற்காக என்னுடைய தந்தை நிலத்தை விற்பதற்கு முனைந்தால் குத்தகைக்காரர்கள் நிலத்தை விற்ற பணத்திலிருந்து ஒரு கணிசமான தொகையைக் கொடுத்தாலோ அல்லது அதற்குச் சமமான வேறு நிலத்தைக் கொடுத்தாலோதான் நிலத்தை விற்பதற்குச் சம்மதிப்பார்கள்.

இது போன்று இடைத்தரகர்களான குத்தகைக் காரர்கள் நில உரிமையாளர்களையும், ஏழைக்கூலி விவசாயிகளையும் சுரண்டி வாழ்வதைக் கார்ட்டூனும், செம்பியனுடைய கற்பனைக் கதையும் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

மதுரை மணியன்

ரா. கணபதி தொகுத்து வழங்கிய 'ரமண மணம்' மனத்துக்கு நிம்மதியையும், சாந்தியும் கொடுத்தது. தமிழ்நடை சிறிது எளிதாக இருந்தால் பல பேருக்குப் பேருதவியாய் இருக்கும்.

கோவை—13 டி. கே. ராமச்சந்திரன்

ஆர். எஸ். எஸ். ஸின் வரலாற்றுக்கு இடையே குற்றங்கள் இல்லை. குற்றச் சாட்டுகளின் இடையேதான் ஆர். எஸ். எஸ் ஸின் வரலாறு இருக்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டியது ஆர். எஸ். எஸ். பற்றிய பேட்டி.

விருத்தாசலம் ஜி. பாலசந்தர்

உரையாடல் மூலம் சில சந்தேகங்கள் நிவர்த்தியாகின்றன. சில உண்மைகள் வெளியாகின்றன. திரு. ரமணன் அவர்கள் பாலமுரளி கிருஷ்ணாவின் சிஷ்யன் என்பதை நினைக்கும்போது பெருமிதம் காண்கிறோம். குமாரி காயத்ரிக்குக் கல்யாணம் என்பதை அறிந்த போது ரசிகர்கள் மகிழ்ந்து வாழ்த்துகிறார்கள்.

அக்ரஹாரம் ஏ. என். சுப்பிரமணியம்

வேறு மாநிலங்களிலிருந்து பாட வந்தவர்களைப் பற்றிய தன் ஆதங்கத்தை ஏ. வி. ரமணன் வெளியிட்டிருப்பது கண்டேன். நம்மவர்களுக்கு வாய்ப்பளிக்கவில்லையே என்று ஆதங்கப் படுவதைவிட, நம்முடைய திறமையை வெளிக்காட்டி முன்னுக்கு வருவதே சாலச் சிறந்ததாகும்.

மேட்டுப்பாளையம் பீட்டர்

''... கர்னாடிக் மியூசிக்கிலே லிமிடேஷன்ஸ் உண்டு... திரும்பத் திரும்பப் பாடின பாடல்களையே தானே பாடவோ, வாசிக்கவோ முடியும்'' என்று குறிப்பிட்டுள்ளார் ரமணன். சங்கீத மும்மூர்த்திகளின் பாடல்களில் வரும் நிரவல்களையே புதுப்புது கற்பனைகளுடன் இன்னும் கேட்கையில் நமக்குப் போதும் போதும் என்று ஆவதில்லை.

இவர்களுடைய கீர்த்தனங்களில் இன்னும் பாடப் பெறாத கீர்த்தனங்கள் பல உள்ளன.

மேலும் அழகான புதுப்புது கீர்த்தனங்களும், வர்ணங்களும், தில்லானாக்களும் புதுப்புது பாடலாசிரியர்களால் எழுதப்பட்டு, கச்சேரி மேடைக்கு வந்த வண்ணம் இருக்கின்றன. ரசிகர்களில் பலரது விருப்பத்துக்காக, பாடகர்கள் பாடின பாடல்களையே பாடும்படி இருக்கிறதே தவிர பாடல்களுக்குப் பஞ்சமில்லை.


பம்பாய்—22 நாதன்.

''மாங்காடு ஸ்ரீகாமாட்சி மகிமை'' அம்மானை அருமையாய் அமைந்துள்ளது. கவிஞரைப் பாராட்டலாம். ஆனால் பின் குறிப்பில் அதை எழுதிய ஆசிரியர் 'வேலவனார்' என்றும் குறிப்பிட்டிருக்கக் கூடாதா?

சென்னை—54 ராக. மணி.

ஏ. வி. திருலோக சந்தரின் பேட்டி படித்தேன். அவருடைய உண்மையான பெயரைத் தெரிந்து கொண்டேன். 'படத்தின் பாத்திரத்திற்கேற்ப சிவாஜி நடிப்பார் என்பது மட்டும் அல்லாமல் அதற்கேற்ப உடையும் உடுத்துவார்' என்று கூறியது பொருத்தமே. அப்படத்தை இப்பொழுது பார்த்தாலும் கண் கலங்காதவர் இல்லை.

அயன்புரம் சிவாஜி பாலகுமார்


விக்கிரமன்
எழுதும்
தியாக வல்லபன்
சரித்திரத் தொடர் கதை
ஏப்ரல் 1[2]
கல்கி
இதழில் ஆரம்பம்

அத்தியாயம் 23

தன் காரியாலயத்தைத் தேடி வந்திருக்கிற நண்பனை, காப்பி சாப்பிடுகிறாயா அல்லது கூல் டிரிங்க் சாப்பிடுகிறாயா என்று கேட்கத் தோன்றியது சத்யாவுக்கு.

ஆனந்த் கலகலவென்று சிரித்தான். ''ஒரு சின்ன 'பார்' வைச்சுக்கோ சத்யா. என்னை மாதிரி யாராவது வரச்சே, 'விஸ்கியா ஜின்னா'ன்னு கேளு; ''கூல் டிரிங்கா காப்பியா'ன்னு கேட்டுக்கொல்லாதே!''

''அது சரி, நீ ஒருவன் மட்டும்தான் இங்கே வருவாயா? எத்தனையோ 'பேர் வராங்க. பார்லே எல்லாம் அடுக்கி வைச்சிருக்கிறதைப் பார்த்தா நல்லா இருக்குமா?''

''மறைச்சு வைச்சுக்கோ. சின்னதா ரிவால்விங் அலமாரி ஏற்பாடு பண்ணித் தரேன். முன்பக்கம் பார்த்தால் அலங்காரப் பொருள்கள் இருக்கும். ஒரு விசையை



அமுக்கித் தள்ளினால் சுழன்று கொடுக்கும். பின்புறம் உள்ள பாட்டில்களும் கண்ணாடி டம்ளர்களும் இடம் மாறி முன்னால் வரும். சுவரோடு ஒட்டின மாதிரி இருக்கும் அந்த அலமாரியின் கதவை மேல்புறம் இழுத்துத் திறந்தால் கதவே சின்ன மேஜை மாதிரி ஆகிவிடும்... சத்யா! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே. ஹூ மஸ்ட் குரோ அப்! இது ஸூபர் ஸானிக் யுகம். அதற்கு ஏற்ற மாதிரி நீ ஆபீஸ் நடத்தணும். செலவழிக்கப் பயப்படக் கூடாது!''

''ஸார்! சர்க்காரிலே எதற்குப் பற்றுக்குறை பட்ஜெட் போடறாங்க, தெரியுமா?'' என்று நித்யா கேட்டாள்.

''செலவுக்குத் தக்க வருவாய் இல்லை என்றால் பற்றுக்குறைதான்'' என்றான் சத்யா.

''அது மட்டுமில்லே ஸார்,! பற்றுக்குறை பட்ஜெட் போட்டால்தான் அதைச் சரிக்கட்ட மேன்மேலும் நோட்டு அச்சடிக்கலாம்: இல்லே வரிகளை உயர்த்தலாம். வருவாயைப் பெருக்கலாம்...''

''பார்த்தாயாடா, நித்யாவோட புத்திசாலித்தனத்தை?'' என்று கேட்டான் ஆனந்த். ''சர்க்காரிலே பற்றுக்குறை பட்ஜெட் போடற மாதிரி நீயும் நிறைய செலவு செய்தால்தான் இன்னும் நிறைய பணம் சம்பாதிக்கணும் என்கிற ஆசை உனக்கு ஏற்படும். அப்போதுதான் உன் தொழிலும் வியாபாரமும் விருத்தி அடையும். பணம் கொழிக்கும். சும்மா குண்டு சட்டியிலே குதிரை ஓட்டிக்கிட்டிருந்தா எப்படி?''

''ஜம்போ ஜெட்டிலே குதிரை ஓட்டணும்கிறே?''

''கரெக்ட்! ஜம்போ ஜெட்டிலே குதிரை ஓட்ட முடியலைன்னு கிண்டியிலே ஓடற குதிரைங்களைப் பார்க்கவாவது போயிட்டு வா. அப்படிப் போகும்போது நித்யாவையும் துணைக்கு அழைச்சுக்கிட்டுப் போ. இவள் அருகிலிருந்தால் பணத்தைத் தோற்பதே ஒரு சுகமான, இனிமையான அனுபவமா இருக்கும்!''

''என்னது? குதிரைப் பந்தயத்துக்கு இவளை அழைத்துப் போவதா? இவளுக்கு ரிஸப்ஷனிஸ்ட் வேலை கொடுத்துச் சம்பளம் தருவது அதற்குத்தானா?''

''நோ! நோ! அவர் அப்படி சொல்லலியே. குதிரை ரேஸுக்கு நான் உங்களோடு வரணும்னு அதற்கு நீங்க தனியா ஓவர்டைம் போட்டுத் தரணும்'' என்றாள் நித்யா.

''சிவ சிவா! தண்டச் சம்பளத்துக்கு மேலே ஓவர்டைம் வேறேயா?'' என்று சத்யா கேட்டான்.

''தண்டச் சம்பளமா? யாருக்கு? நித்யாவுக்கா? டோன்ட் பி ஸில்லி!'' என்றான் ஆனந்த். ''இவளைப் போல் ஒரு ரிஸப்ஷனிஸ்ட் கிடைக்க நீ தவம் பண்ணியிருக்கணும்.''

''அவ்வளவு கெட்டிக்காரியா?''

''ஆமாம் அபாய்ண்ட்மென்ட் இல்லாமல் ஒரு மனுஷனை உன்னைப் பார்க்க அனுமதிக்க மாட்டா. ஃபோன் வந்தால் இனிமையாப் பேசுவா. விருப்பமில்லாதவங்களோட

ஃபோனில் பேசுவதை நீ தவிர்க்கலாம். உன் டயரியிலே அப்பாய்ண்ட்மெண்ட் குறிச்சு வைப்பா. வேலை இல்லாத போது உன்னுடன் வளவளவென்று பேசிக் கழுத்தறுக்கமாட்டா. அமைதியா உட்கார்ந்து ஹெரால்ட் ராபின்ஸ் புத்தகம் படிப்பா. இதெல்லாவற்றுக்கும் மேலாக அவனுக்குப் பிரமாதமா டிரஸ் பண்ணிக்கத் தெரியும். போதாதா? ஒரு ரிஸப்ஷனிஸ்டிடம் இதைவிட அதிகமாக என்ன எதிர்பார்க்க முடியும்?''

''ஷார்ட்ஹாண்ட், டைப் ரைட்டிங், ஃபைலிங், புக் கீப்பிங், பிஸினஸ் கரஸ் பாண்டன்ஸ்...''

''சேச்சே! டர்ட்டி ஜாப்ஸ். அதுக்கெல்லாம் வேறே ஒரு ஸொர்க்கை வேலைக்கு வைச்சுக் குங்க. டைப் அடிச்சால் என் விரல் நகங்கள் ஒடிஞ்சுடும். ஃபைல்களில் இருக்கிற தூசியை நினைச்சாலே எனக்குத் தும்மல் வரும்'' என்றாள் நித்யா.

''இதோ பாரு சத்யா நான் சொல்றேன்னு கோவிச்சுக்காதே'' என்றான் ஆனந்த்.

''இந்த ரூமைப் பார்க்கவே சகிக்கலே. முதல்லே இந்த உளுத்துப் போன ஓட்டை மேஜையைத் தூக்கி எறிஞ்சுட்டு ஸ்பென்ஸ ருக்கு ஃபோன் பண்ணி ஒரு எக்ஸிகியூடிவ் டெஸ்க் அண்டு சேர், ஒன்றரை டன் ஏஸி யூனிட், ஆர்டர் பண்ணு. ஒரு இன்டீரியர் டெகரேட்டரை வரச்சொல்லி அறை அலங் காரத்தை அவனிடம் ஒப்படைச்சுடு. காக்டெய்ல் பார், மினி ஃப்ரிஜ் எல்லாம் கண்ணிலே படாத மாதிரி அமைக்க அவன் ஏற்பாடு பண்ணுவான். இவ் வளவுக்கும் இடையிலே அலங்காரமா நித்யா அமர்ந்திருந்தால் வேலை என்னமா நடக்கும் தெரியுமா?''

''ஆமாம் ஸார்! நல்ல சூழ்நிலை யில்தான் எனக்கு வேலை ஓடும். இப்படி கோடவுன் தெரு ஸ்டே ஷனரி டெங்கு மாதிரி ஆபீஸ் இருந்தா கொட்டாவி தான் வரும்'' என்றாள் நித்யா.

''என் அப்பா ஆரம்ப நாளிலேருந்து உப யோகித்து வந்த மேஜையைத் தூர



மேஜைகள்

கி.ராஜேந்திரன்

அரசியல் விவகாரங்கள் எப்படியோ, கலை உலகில் அதுவும் இசைத் துறையில் மூப்பனாரின் செல்வாக்கு தொடர்ந்து கொடி கட்டிப் பறக்கிறது.

திருவையாறு தியாக ராஜ பிரம்ம சபா தலைவரான ஜி. கருப்பையா மூப்பனார் அண்மையில் ஸ்ரீ வெங்கடரமண பாகவத சுவாமிகள் நினைவு மண்டபத்தின் அடிக்கல்லை நாட்டினார். தியாகப் பிரம்ம விழாவைப் போல வெங்கடரமணர் விழாவும் நடைபெறத் தாம் எல்லா உதவிகளையும் செய்வதாகக் கூறினார்.



எறிஞ்சுட்டு வீண் செலவு பண்ணுறீங்க.''

''என்ன வெறும் ஸெண்டிமெண்டல் பேர் வழியா இருக்கியே? உனக்கு பிஸினஸ் தந்திரங்களே தெரியலே. அனாவசியமா சர்க்காருக்கு வரிப் பணத்தை அழறதுக்குப் பதிலா இதையெல்லாம் செலவுக் கணக்கில் எழுதிட்டுப் போவேன்!'' என்றான் ஆனந்த்.

''வீண் செலவுன்னு நினைக்காதீங்க, ஸார்! உங்க கிட்ட பிஸினஸ் பண்ண வருபவர்கள் உங்க ரூமையும் ரிஸெப்ஷனிஸ்டையும் பார்த்தே அசந்துடுவாங்க! வியாபாரம் பிரமாதமா நடக்கும்!''

''எனக்கு என்னமோ யோசனையா இருக்கு'' என்றான் சத்யா.

''சில பேர் யோசனை பண்ணண் யோசனை பண்ணியே அருமையான வாய்ப்புக்களைக் கைநழுவ விட்டுடறாங்க ஸார்!''

''பாருடா! இந்தப் பொன் மொழிக்காகவே நித்யாவுக்கு நீ சம்பளத்தை உயர்த்தலாம். உதாரணமா இப்போ உன் தொழிலாளர்கள் தங்கள் நலனுக்காகத் தொழிலகத்திலே ஒரு கான்டீன் ஆரம்பிக்கணும்னு கேட்கிறாங்க. இல்லையா? நீ அது அவசியமான்னு யோசிச்சுக்கிட்டே காலத்தை ஓட்டறே. இதிலே ஒரு பொன்னான வாய்ப்பைக் கைநழுவ விட்டுக்கிட்டிருக்கே!''

''அதெப்படி?'' என்று சத்யா கேட்டான்.

''ஸிம்பிள்! உனக்குப் பாதகமான இந்தச் சூழ்நிலையையே உனக்குச் சாதகமா மாற்றிக் கொள்ள நீ கற்றுக்கணும். அவங்களுக்குக் கான்டீனைக் கொடு. கம்பெனியே அதை நடத்தட்டும். கான்டீனுக்காக ஆறு மூட்டை அரிசி இங்கே இறங்கித்துன்னு உன் வீட்டிலே இரண்டு மூட்டை இறக்கிக்கோ. இங்கே நாலு கிலோ காப்பிக் கொட்டை இறங்கித்துன்னு உன் வீட்டிலே ஒரு கிலோ தருவிச்சுக்கோ. நாலு சமையல் காரர்களை கான்டீனுக்குன்னு வேலைக்கு வை. அதிலே ஒருவன் உன் வீட்டில் சமைச்சுப் போடட்டும். இப்படியே கான்டீன் கணக்கு எழுதியே நீ உன் வீட்டுச் செலவுகள் அத்தனையையும் முடிச்சுக்கலாம். தொழிலாளர் நலனை நீ கவனிப்பதாக நல்ல பேரும் கிடைக்கும். செலவு அதிகமாகி லாபம் குறைந்தால் சர்க்காருக்கு நீ கட்டவேண்டிய வரிகளும் குறையும்!''

''இப்படியெல்லாம் செய்வதென்றால் அப்புறம் கம்பெனியிலேருந்து நான் சம்பளமா எடுத்துக் கொள்கிற மூவாயிரம் ரூபாயை என்ன பண்ணுவதாம்?''

''அதைச் செலவு பண்ண வழியா இல்லே? என்னிடம் கொடுங்க. ஒரே நாளில் செலவு செய்து காட்டறேன்'' என்றாள் நித்யா.

''இன்னொன்றும் சொல்லித் தரேன் கேட்டுக்க'' என்றான் ஆனந்த். ''தொழிலகத்துக்கு ரா மெடீரியல்ஸ் வாங்கறியே, அதுக்கெல்லாம் கமிஷன் தரானு?''

''கிடையாது.''

''கிடையாதா? அடப் பாவமே! இப்படி ஓர் அப்பாவி உண்டா?'' என்றாள் நித்யா.

''இனிமேலாவது கணிசமான கமிஷன் கொடுத்தால்தான் ஆர்டர் கிடைக்கும்னு சொல்லு'' என்று கற்றுத் தந்தான் ஆனந்த். ''வேணும்னு விலையைக் கொஞ்சம் கூட்டிப் போட்டுக்கிட்டுப் போறான். நமக்கென்ன வந்தது? கிடைக்கிற கமிஷனை பிளாக்கிலே வைச்சுக்க. ஒரு சமயம் போதுன்னு உதவும். இப்படியே கம்பெனியின் பணத்துக்கு வடிகால் ஏற்படுத்திக்கொண்டு போயிடக் கத்துக்கணும். அப்படியின்றி லாபத்தை அதிகரிச்சுக் காட்டினா வரிகளும் கூடும், தொழிலாளர்களும் இருபது பர்ஸெண்ட் போனஸ் கொடு இருபத்தைந்து கொடுன்னு பிராணனை வாங்குவாங்க.''

''இதுக்கெல்லாம் ரொம்பத் துணியணும் ஆனந்த்! என்னால் முடியுமான்னு சந்தேகமா இருக்கு'' என்றான் சத்யா.

''முதல்தரம் ஃப்ராட் பண்ணறச்சேதான் கொஞ்சம் மனசு பக்கு பக்குன்னு அடிச்சுக்கும். ஒரு தரம் பண்ணிட்டா அப்புறம் சகஜமா போயிடும். உனக்குத் துணிச்சலைத் தரத்தான் நித்யாவை இங்கே கொண்டு வந்து வைச்சிருக்கேன்.''

''ஆமாம் ஸார்! எப்பவாவது தயக்கமா இருந்தா என் அலங்காரத்தை ஒரு தரம் பார்த்துக்குங்க! துணிச்சல் தன்னால் வரும்!''

''காற்றிலேறி விண்ணையும் சாடுவோம் காதல் பெண்கள் கடைக்கண் பணியிலே என்று சும்மாவா சொன்னான் கவி!'' என்றான் ஆனந்த்.

''அவ்வளவெல்லாம் வேண்டாம் ஸார்! என்னோடு ஜெட்டிலே ஏறி ஜெனீவாவுக்குக்

தாலினுல் போதும்!'' என்று நித்யா சொன்ன போது அவள் கரங்கள் சத்யாவுக்குப் பின்புற மிருந்து நீண்டு இயல்பாக அவன் தோள்களைப் பற்றி இலேசாக அழுத்தின. இதமாக இருந் தது அவனுக்கு.

அத்தியாயம் 24

"**வா**ங்க, வருங்கால மாப்பிள்ளை ஸார்! வாங்க'' என்று சத்யாவை உற்சாக மாக வரவேற்ருர் யோகேஷ். ''என்ன ரொம்ப நாளாக இந்தப் பக்கமே காணும்? அப்பா எப்படி இருக்கிருர்? ஒரு தடவை அவரைப் பார்த்துட்டு வந்தேன். முதல் வார்த்தையா, 'கல்யாணம் எப்ப வைச்சுக்கலாம்?' என்று தான் கேட்டார். நான்தான் 'அவசரமில்லே, உங்க உடம்பு சற்றுத் தேறட்டும்' என்று சொல்லிவிட்டு வந்தேன்.''

''அப்பாவுக்கும் உடம்பு சற்று பலப் படணும், தொழிலகத்திலே என் நிலைமையும் கொஞ்சம் ஸ்லஸ் ஆகணும்'' என்ருன் சத்யா.

''அப்பாவுக்கு உடம்பு தேறலாம். ஆனல் தொழிலகத்திலே நிலைமை சீரடைஞ்ச பிறகு கல்யாணம் என்ருல் அது அலே ஓய்ந்த பிறகு சமுத்திர ஸ்நானம் பண்ணற கதைதான். பிரச்னைகள் எப்பவும் இருந்துக்கிட்டேதான் இருக்கும்.''

''ஒன்று, இரண்டா? ஓராயிரம் பிரச் னைகள்'' என்ருன். ''பிசினஸ் பிரச்னைகள் தவிர தொழிலாளர் பிரச்னைகள் வேறே. எப்பப்பாரு, கோரிக்கைகள், கோஷங்கள், வேலைநிறுத்தப் பயமுறுத்தல்கள்! ஒன்றைச் சொல்லி அழுவா ஒருமிக்கச் சொல்லி அழுவா?''


''ஜப்பானிலே ஒரு பழக்கம் உண்டு, சத்யா! தொழிலாளர்கள் வேலை முடிந்து வீடு திரும்பும் போது உடைமாற்றிக் கொள் ளும் அறையிலே பாக்ஸிங் பயிற்சிக்குப் பயன் படும் ஒரு 'பஞ்சிங் பாக்' வைத்திருப்பார்கள். அதிலே முதலாளியின் முகம் கார்ட்டூன் பட மாக வரைந்திருக்கும். ஒவ்வொரு தொழி லாளியும் ஆத்திரம் தீர அதை நாலு குத்து குத்தி விட்டுப் போவான். இதனல் மனே தத்துவ ரீதியில் அவனுக்கு ஒரு நிறைவும் அதன் மூலம் மன அமைதியும் கிடைக்கிற தாம். வேலைநிறுத்தங்களும் குறைகிறதாம். அந்த மாதிரி ஒரு ஸிஸ்டம் இங்கேயும் கொண்டு வந்தால் என்ன?'' என்று கேட்ட யோகேஷ், தன் காரியதரிசியிடம் ''உள்ளே போய் பிங்க்கியிடம் சத்யா வந்திருப்பதைச் சொல்லி விட்டுவா'' என்ருர்.

''நீங்க குறிப்பிடுகிற யோசனையை இங்கே புரட்டிப் போட்டுப் பார்க்கணும் ஸார்! என் அறையிலேயே ஒரு பஞ்சிங் பாக் தொங்க விட்டு, அதிலே சராசரி தொழிலாளியை உரு வகப்படுத்திப் படம் வரைந்து, பாக்ஸிங் பிராக்டிஸ் பண்ணிப் பார்க்கறேன். தேகப் பயிற்சிக்குத் தேகப் பயிற்சியும் ஆச்சு, மனக் குமுறலும் அடங்கும்!''

இந்தச் சமயத்தில் பிங்கி அறைக்குள் நுழைந்தாள். ஆர்வமும் ஆவலுமாக ஓடி வந்த அவள், அறைக்குள் வந்ததும் தன்னை நிதானித்துக் கொள்ளவும் பெருமூச்சுக்களைக் கட்டுப்படுத்தவும் சிரமப்பட்டாள். எப் படியோ புன்னகை உருவாகாமல் அடக்கிக் கொண்டாளே யொழிய கண்களில் தோன் றிய மகிழ்ச்சிப் பளபளப்பை அவளால் நீக்கி விட முடியவில்லை.

தமது காரியதரிசியைப் பெயர் சொல்லி அழைத்த யோகேஷ், ''லெட்டர்ஸ் எல்லாம் ரெடியாயிடுத்தா?'' என்று கேட்டபடியே எழுந்தார். ''நீங்க பேசிக்கிட்டிருங்க, அவ சரமாச் சில கடிதங்கள் அனுப்ப வேண்டி யிருக்கு'' என்று கூறிவிட்டுத் தமது காரி யாலய அறை நோக்கிச் சென்ருர்.

அவளுடைய எழில் இப்போது சத்யாவை முழுமையாகத் தாக்கியது. அளவாகச் செழித்து அள்ளப்படக் காத்திருந்த அழகு. அந்த உருவத்தின் கச்சிதமான அமைப்பை யன்றி வேறு எது பற்றியும் சிந்திக்க இயலாத





மத்திய பட்ஜெட்டில் 'இன்ஸ்டண்ட் காப்பிக்கு' அதிக வரியை சரண்சிங் விதித்திருக்கிறார். பட்ஜெட் உரையின் போது இதைக் குறிப்பிட்டு விட்டு ''இன்ஸ்டண்ட் காப்பி என்பது என்னவாக இருந்த போதிலும் வரி விதிப்பு செய்யப்படுகிறது' என்று சொன்னார்.

வனாக அசைவற்றுச் சில கணங்கள் இருந்தான் அவன். பிறகு சிறிது சிறிதாகச் சுயநினைவு வரப் பெற்றதும், 'இத்தனை அழகை எப்படி இத்தனை காலம் அலட்சியம் செய்தோம்!' என்று அதிசயித்தான். ஆனந்தின் பாச்சிலர் அபார்ட்மெண்டில் நித்யாவின் மோக வலை வீச்சுக்கு ஆளாகிச் சுயக்கட்டுப்பாடு இழந்து அவனிடம் தோல்வியுற்றது. குடித்துப் போதை ஏறி வீடு திரும்பியது, தன் தகப்பனுக்கு இருதயத் தாக்குதலே உண்டாகுமாறு பேசி நடந்து கொண்டது. அதன் பிறகு தொழிலகத்தில் பொறுப்பேற்றதும் ஒன்று மாற்றி ஒன்றாகச் சந்திக்க நேர்ந்த பிரச்னைகள், அவற்றில் பலவற்றைத் தீர்க்க முடியாமல் தவிக்கிற நிலை, எல்லாமே ஒருவிதத் தாழ்வு மனப்பான்மையைத் தன்னிடம் உருவாக்கி, பிங்கியைச் சந்திக்கவே தயங்குகிற ஒரு நிலைக்குத் தன்னைத் தள்ளி விட்டது என்பதை உணர்ந்தான். இப்போது கூட அவள் பக்கமாகத் தன் கைகளை நீட்டி அவள் கரங்களைக் கோரிப்பெற அவன் தயங்கினான். அவன் சங்கடத்தை உணர்ந்தவளே போல் அவள் அன்பு ததும்பும் உள்ளத்தோடு தன் கரங்களை நீட்டினாள். நன்றியுடன் அவற்றைப் பற்றிக் கொண்டான் சத்யா.

''நீங்கள் வந்தால் பேசுவதே இல்லை என்று முடிவு செய்திருந்தேன். ஆனால் நீங்கள் வந்திருப்பதாகக் கேள்விப்பட்ட உடனேயே என் உறுதி தளர்ந்து போக ஓட்டமாய் ஓடி வந்தேன்'' என்று கூறிச் சிரித்தாள். இருளும் குளிரும் நீங்கப் பனிப்படலத்தை ஊடுருவிய ஒளிச்சிரிப்பு.

''கோபமா பிங்கி? ஏகப்பட்ட பிரச்னை!''

''தெரியும். நீங்கள் இங்கே வராத போதும் உங்களைப் பற்றிய செய்திகள் எல்லாம் ஒன்று விடாமல் எனக்குக் கிடைத்து விடும். வீட்டிலே உங்களை எதிர்நோக்கிய பிரச்னைகளைப்பற்றிச் சுலோசனா சொல்வாள். ஆபீஸில் நிலவும் பிரச்னைகளைப் பற்றி ஆனந்த் தகவல் அறிந்து வந்து சொல்வார். உங்களுக்கு உதவியாக நித்யா என்று ஒரு ரிஸப்ஷனிஸ்ட்டை நியமிக்கக் கொடுத்திருக்கிறாரே? அவள் ரொம்ப அழகா யிருப்பாளாம்!''

''ஏன் பொறாமையாக இருக்கிறதா?''

''எனக்கு என்ன பொறாமை? எத்தனை எத்தனை பெண்களுக்கு வேலை போட்டுத் தருகிறீர்களோ அவ்வளவுக்கு மகிழ்வேன்!''

''உன்னுடைய உமன்ஸ் லிப் கொள்கை பேசுகிறதாக்கும்! வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை பூதாகாரமாக வளர்ந்திருக்கும் போது பெண்கள் எதற்காக வேலைக்குப் போக வேண்டும்? குடும்ப நிர்வாகத்தைக் கவனித்தால் போதாதா? ஒரு குடும்பத்தில் ஒருவர் — ஆண் பிள்ளை சம்பாதித்தால் காணாதா? மனைவியும் வேலைக்குப் போகும் போது இன்னொரு குடும்பத்துக்குக் கிடைக்கக் கூடிய வருவாயை இல்லாமல் செய்து விடுகிறாள் இல்லையா?''

''இதென்ன அபத்தமான வாதம்?'' என்றாள் பிங்கி. ''நகர்ப்புறத்தில் வேலைக்குப் போகும் பெண்களை வைத்து இப்படி பேசுகிறீர்கள். கிராமப் புறங்களில் போய்ப் பாருங்கள் நிலைமை புரியும். ஒரே ஒரு நாள் இந்தத் தேசத்தில் உள்ள பெண்கள் எல்லாரும் வேலை செய்வதில்லை என்று தீர்மானித்து விட்டால் நாட்டின் பொருளாதாரம் என்னவாகும், யோசியுங்கள்! களை பிடுங்கவும், நாற்று நடவும், போர் சுமக்கவும், வீடு பெருக்கவும், பத்துப் பாத்திரம் தேய்க்கவும் பெண்கள் முன்வர வேண்டும். ஆனால் படித்து உத்யோகம் பார்க்க முன் வரக் கூடாது. ஆண் இனத்துக்கு விட்டுக் கொடுத்துவிட வேண்டும். அப்படித்தானே?''

பெண் குலத்துக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டவிடத்தில் சீறும் நோக்கில் அவள் கேட்க, அவன், ''நான் தோற்று விட்டேன்!'' என்று கூறியவாறே தமாஷாக இரு கரங்களையும் உயர்த்தினான். பிறகு ''அது சரி, ஆனந்த் இங்கே அடிக்கடி வருகிறானே, என்ன?'' என்று கேட்டான்.

''ஏன் பொறாமையாக இருக்கிறதா?'' என்று சற்றுமுன்னர் அவன் தன்னைப் பார்த்துக் கேட்ட கேள்வியை அவனிடமே திருப்பிக் கேட்டாள் பிங்கி.

'பொறாமையாக இல்லை பயமாக இருக்கிறது' என்று எண்ணியவன், அதை மாற்றி, ''கவலையாக இருக்கிறது'' என்று சொன்னான். ''அவனிடம் நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.''

''எனக்கு நீங்கள் வழங்கும் அறிவுரையை நீங்கள் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லையே?'' என்றாள் பிங்கி. ''அவருடன் ரொம்ப இழைகிறீர்களே?''

''சில கெட்ட பழக்கங்கள் அவனிடம் இருந்தாலும் அவன் என் நண்பன். அவனை விரோதித்துக் கொள்ள நான் விரும்பவில்லை. என்னைக் காத்துக் கொள்ள எனக்குத் தெரியும்!''

''ஆனந்திடமிருந்து உங்களைக் காத்துக் கொள்கிறீர்கள் சரி, ஆனால் அவர் அங்கே கொண்டு வந்து வைத்திருக்கும் ரிஸப்ஷனிஸ்ட் நித்யாவிடமிருந்து...?''

''அவளிடமும் எச்சரிக்கையாக இருக்க எனக்குத் தெரியும். அப்படியொன்றும் நான் பலவீனமானவன் அல்ல. அவளும் மோச ம... ...பள் அல்ல.''

அதேபோல ஆனந்திடமிருந்தும் என்னைக் ...க்கொள்ள எனக்குத் தெரியும். நானும் ...னமானவள் அல்ல!''

...ரென்று அவன் எழுந்தான். ''ஏட்...குப் போட்டி போல் சதா நீ பேசுவது ...க்குப் பிடிக்கவில்லை. நாளுக்கு நாள் நாம் ...லகிப் போகிறோமோ என்று அஞ்சுகிறேன்'' ...ன்றான்.

பிரமீளாவும் அதே வேகத்துடன் எழுந்து, ...நான் விலகிக் கொள்ள நினைக்கவில்லை: ஆனால் நீங்கள் விலக நினைத்தால் நான் தடுக்கவில்லை'' என்றாள் ரோஷத்தோடு.

(தொடரும்)

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
''பாலுஸேரி பில்டிங்ஸ்'', 30, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005
தந்தி : 'EVERMANS', போன் : 841194 & 841062.
தபால்பெட்டி : 414

நீண்ட காலச் சிட்டுகள்

40 மாதங்கள் — 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச்சந்தா	சிட்டுத் தொகை
LTA	ரூ. 500/-	ரூ. 20,000/-
LTB	ரூ. 250/-	ரூ. 10,000/-
LTC	ரூ. 125/-	ரூ. 5,000/-
LTD	ரூ. 50/-	ரூ. 2,000/-
LTE	ரூ. 25/-	ரூ. 1,000/-

குறுகிய காலச் சிட்டுகள்

25 மாதங்கள் — 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சிட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சிட்டுத் தொகை
A	ரூ. 200/-	ரூ. 5,000/-	C	ரூ. 50/-	ரூ. 1,250/-
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	D	ரூ. 25/-	ரூ. 625/-
			E	ரூ. 1000/-	ரூ. 25,000/-


20 மாதங்கள் — 20 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சிட்டுத் தொகை
Q	ரூ. 100/-	ரூ. 2,000/-
S	ரூ. 50/-	ரூ. 1,000/-
U	ரூ. 30/-	ரூ. 600/-

சேரும் வகுப்பை விவரித்து எழுதவும்.

கிளைகள்: புது டில்லி - பம்பாய்
பெங்களூர் - கல்கத்தா - கோயம்புத்தூர்

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை — 33 YEARS — ஸ்தாபிதம் 1947



வணக்கம் டீச்சர்!

-விஜேதானந்த்-

"வணக்கம் டீச்சர்!..."

கோவில் மணியின் சுநாதமாய் ஒலிக்கும் குரல்கள். கதிரவனின் ஒளிக் கதிர்கள் பட்டுப் பூரிக்கும் மலர்களைப் போல் கண்களில் ஒரு மலர்ச்சி.

வாயிற் படியைக் கடந்து கூடத்தினுள் அடியெடுத்து வைத்து அந்த அறையின் இடது புறம் போடப்பட்டிருந்த சோபாவில் அமர்ந்து கொண்டாள் நித்யா.

"ஆரம்பிக்கலாமா?..."

அவள் கேட்ட அந்தக் கேள்விக்காகவே காத்திருந்தவர்கள்போல், "ம்..." என்று ஓர் ஆமோதிப்பை வெளிப்படுத்திய வண்ணம் தலைகளை அசைத்துக் காட்டிய உமாவையும், மகேஷையும் சில வினாடிகள் கூர்ந்து நோக்கினாள் நித்யா.

பால் வடியும் அந்தப் பிஞ்சு முகங்களின் பின்னணியில் மறைந்து கிடக்கும் அவலம் அவளுக்கு என்றோ புரிந்துபோன விஷயம்.

நெஞ்சம் அவர்களுக்காகத் தினமும் அழும். அந்த அழுகை உள்ளத்தைத் தாண்டி, கண் இமைகளின் ஓரத்தில் கசிந்து கோடிட்டுக் காட்டுமுன் தன்னைச் சுதாரித்துக் கொண்டு போதிக்க ஆரம்பிப்பாள்.

அன்றும் அப்படித்தான்.

பார்வையை அவனை விட்டு, விலக்காமல், கருத்தை அங்கும் இங்கும் தடம் புரள விடாமல், அவள் சொல்வதை உள்ளத்தில் ஏற்றி, அன்றையத் தேர்வுக்குத் தங்களை அவர்கள் ஆயத்தப் படுத்திக் கொண்டிருக்கையில், தன் அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டான் பிரகாஷ்.

முப்பத்தைந்து வயதைத் தொட்டிருந்தும், அவனது மாறாத இளமையும், மதமதர்த்த உடலும், சுருள் முடியும், நடக்கையில் ஆரவாரிக்கும் ஆண்மையும் அவளை இலேசாக இடறிவிட்டன.

"டீச்சர்!..."

கனவுலகில் சஞ்சரித்த வண்ணம் ஏதோ ஒரு லயிப்பில் ஆழ்ந்து கிடந்தவளை உமாவின் குரல் தட்டி எழுப்பியது.

வெறும் எண்ணங்களாக எழுந்து, போராட்டமாக உருவெடுத்துத் தோற்றம் காண்பித்துச் செப்பிடு வித்தை காட்டிய மனத்தை அடக்கிக் கொண்டு பாடங்களைத் தொடர்ந்து நடத்தத் தொடங்கினாள் நித்யா.

சமையற்காரர் காப்பி கொண்டு வந்து வைத்தார். அந்தப் பீங்கான் கோப்பையிலிருந்து வெளிப்பட்ட ஆவியுடன் கலந்து பரவிய நறுமணம் நாசியை நனைத்தது.

'பிரகாஷ்! வாய்க்கு ருசி மட்டும் உங்களுக்குப் போதுமானதாக இருக்கிறதா?'

உமாவும், மகேஷும், அவளுடைய கேள்விக்கான பதிலை எழுதிக் கொண்டிருந்த நேரத்தில், சுவரில் மாட்டப்பட்டிருந்த அந்தப் படத்தைப் பார்த்தாள்.

பிரகாஷின் மனைவி பூர்ணிமா அதில் சிரித்துக்கொண்டிருந்தாள். அந்தச் சிரிப்பைத் தனக்கு மட்டும் சொந்தமாக்கிக் கொண்டு, அந்தக் குடும்பத்துப் பொறுப்பை உதறித் தள்ளுவதைப்போல் விலகிச் சென்று விட்ட பூர்ணிமா!

நடுத்தெருவில் நடப்பது ஆபத்து என்றுதானே பிளாட்பாரங்களை அமைத்திருக்கிறார்கள்! அந்தப் பிளாட்பாரத்திலேயே பிரேக் பிடிக்காமல் ஒரு வாகனம் ஏறி அவளை மண்ணில் ஒரு ஜவ்வுத் தாளாய் நசுக்கிக் கொன்றதென்றால் அதன் பெயர் விபத்தா? இல்லை, மன ஆறுதலுக்காகச் சொல்லிக் கொள்ளும் விதியா?

பிரகாஷ்!

ஆண் பிள்ளை. கம்பீரமான ஆண் பிள்ளை. சிரிக்கச் சிரிக்கப் பேசும் ஆண்பிள்ளை. எதையும் லட்சியம் செய்யாத ஆண்பிள்ளை. தன்னம்பிக்கையும், துணிச்சலும் மிகுந்த ஆண்பிள்ளை.

அந்த ஆண்பிள்ளை அன்று ஆண்பிள்ளையாகவா இருந்தான்! ஒரு பெண்ணைப்போல் சுவரில் முட்டி மோதிக் கொண்டு, தலையில் அடித்துக்கொண்டு கதறினான்.

நினைவில் நிழலாகப் படிந்து மறைந்த அந்தச் சோகச் சம்பவத்தை ஒதுக்கி வைத்து விட்டு, அவனைத் திறனாய்வு செய்வதுபோல் உரைகல்லில் இழைத்துப் பார்த்தாள் நித்யா.

பிரகாஷ் கோழையல்ல. பூர்ணிமாவின் மீது அவன் வைத்திருந்த, அவன் இன்னும் வைத்திருக்கும் அந்த அன்பும், அவளிடம் அவன் காட்டிய அன்யோன்யமும், அவர்களுக்கிடையில் இல்லற வாழ்வின் தொடக்கம் முதல் நிலவி வந்த நெருக்கமும்தான் அவனை அப்படி அழவைத்திருக்க வேண்டும்.

"பசங்க எப்படிப் படிச்சிருக்காங்க?..."

"உனக்கும் நளினாவுக்கும் திருமணமாகப்போவது எனக்கு முன்பே தெரியும்!"

"எப்படி?"

"அவன் அழகுக்கு அவளை அப்படியே கொத்திக்கொண்டு போய்விடுவான் என்று சொன்னார்கள்!"

—லதா



முகம் கழுவிக் கொண்டு, தலை சீவிக் கொண்டு, மாற்றுடை தரித்துக் கொண்டு புது மனிதனாக வந்த பிரகாஷின் கேள்விக்கு ஒரு பதிலைச் சொல்ல அவள் அதிக நேரம் எடுத்துக்கொள்ளவில்லை.

''கேள்விக்கு அவசியமே இல்லை. வழக்கம் போல் இவங்கதான் முதல்லே வருவாங்க...''

''நம்பிக்கை இருந்தால் சரி!...''

குழந்தைகளுக்கு எதிரே அவர்களுக்குப் புகழாரம் சூட்டக்கூடாது என்ற காரணத்தாலோ என்னவோ, அவன் தன் பேச்சுக்கு ஓர் அளவுகோலை நிர்ணயித்து வைத்துக் கொண்டு பேசினான்.

எட்டரை மணி ஆயிற்று.

''மிஸ்!... கொஞ்சம் இருங்க...''

பிரகாஷ் தன் அறைக்குச் சென்று திரும்பி வந்தான். ஓர் உறையை அவளிடம் கொடுத்தான்.

அவளது தனிப் பயிற்சிக்கான சம்பளம்.

''இந்தக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கறதுலே எனக்கு ஓர் ஆத்ம திருப்தி இருக்கு என்கிறதுனாலேதான் ஒப்புக்கிட்டேன். பணத்துக்காக இல்லே. ஏற்கெனவே இதைப்பத்தி உங்ககிட்டே சொல்லியிருக்கேன்.''

''தெய்வத்துக்கு முன்னாடி உங்களைத்தான் வச்சுப் பேசறாங்க. அதனாலே இதைச் சம்பளமாகக் கருதாமே ஒரு குருவுக்குச் செலுத்தற காணிக்கையா நினைச்சு ஒத்துக்கணும்னு நானும் ஏற்கெனவே சொல்லியிருக்கேன்...''

''தாங்க்ஸ்...'' என்று இதழ் பிரியாமல், நளினமாகச் சொன்னவள் அந்த உறையைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டாள்.

பிரகாஷும், உமாவும், மகேஷும் ஒரு சைன்ய பலத்தோடு அவளைத் தொடர்ந்து வந்தனர்.

'பிரகாஷ்! அம்மா இல்லே என்கிற குறை தெரியாம உங் குழந்தைகளை நீங்க வளர்க்கறதைப் பார்க்கறப்போ, மறுமணம் என்கிற தளைக்குள்ளே சிக்காமே பூர்ணிமாவின் நிழலுருவத்தை இன்னமும் நீங்க ஒரு பூஜைக்குரிய விக்கிரகமா நினைச்சு ஆராதிச்துக் கொண்டிருக்கறப்போ... உங்களை எப்படி வர்ணிக்கறதுன்னே எனக்குப் புரியலே...'

அவனை எப்படி வர்ணிப்பது? என்னவென்று சொல்வது?

அந்தக் குழந்தைகள்தான் அவளிடம் எவ்வளவு ஒட்டுறவோடு, 'டீச்சர்...டீச்சர்!...' என்று வாய் நிறைய, நெஞ்சு நிறைய அழைத்துக் கொண்டு, தனிப்பயிற்சி கொடுக்கும் ஆசிரியை என்ற ஸ்தானத்தையும் விஞ்சி, அவளை அவர்களுக்கு ஒரு தாய் மாதிரி...

ஒரு தாய் மாதிரி!...

'பிரகாஷ்! அவர்களை விட்டுப் பிரியற சந்தர்ப்பத்தை மட்டும் எனக்கு என்றைக்குமே கொடுத்திடாதீங்க!'

போராட்டங்கள் உள்ளத்தினுள் வீரியத்துடன் எழுந்து, துணிவைத் துணைக்கு அழைத்துக் கொள்ளாமல் உள்ளேயே அடங்கி ஒடுங்கி... ஆனால் இன்னும் சிதிலமடையாமல் இருந்தன.

'நான் உங்கள் வாழ்க்கையின் ஓர் அங்கமாக இருக்க விரும்பறேன். உங்களுக்காக மட்டுமில்லே. இந்தக் குழந்தைகளுக்காகவும் தான்...'

சொல்லத் துடித்த சந்தர்ப்பங்கள் உண்டு. அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாமல், பெண்மைக்கே உரிய கூச்சமும், நாணமுமாக அந்தச் சந்தர்ப்பங்களை நழுவ விட்டதுமுண்டு.


தேர்வுகள் முடிந்து விட்டன.

இனி கோடை விடுமுறைக்குப்பின் ஜூன் மாதம்தான் பள்ளிக்கூடம் திறப்பார்கள். கடந்த பத்து மாதங்களுக்கு முன் ஒரு தனிப் பயிற்சி தரும் ஆசிரியையாக அந்த வீட்டினுள் அடியெடுத்து வைத்து, உமாவையும் மகேஷையும் ஒரு பாசப் பிணைப்போடு அரவணைத்துக் கொண்டு, மனைவியை இழந்து ஒரு தூய புருஷத் தன்மையோடு மனத்தில் களங்கமின்றிப் பழகிய பிரகாஷின்மீது ஓர் ஈடுபாட்டை வளர்த்துக் கொண்டு, குடும்பத்தில் ஒருத்தியாக, ஓர் அங்கமாகத் தன்னை மனத்தளவில் கற்பனை செய்து கொண்டு, அந்தக் கற்பனையின் இனிய சுவையை நிஜமாக்கத் தவித்துக் கொண்டிருந்த நித்யா சிந்திக்க ஆரம்பித்தாள்.

சிந்தனை பல்வேறு வட்டங்களாகச் சுழன்று இறுதியில் ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள்.

'பிரகாஷ்! என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்'

அந்தச் சொற்களை ஓர் அசாத்தியத் துணிச்சலோடு அவனிடம் சொல்லிவிட வேண்டும்.



ஞாயிற்றுக் கிழமை.

பிரகாஷ் வீட்டில்தான் இருப்பான். அன்று தான் தான் பெற்ற செல்வங்களோடு 'அவன் ஓய்வாகப் பொழுதைப் போக்க முடியும்.

நித்யா அங்கே சென்றபோது, ஒரு மேசையைச் சுற்றி அவர்கள் அமர்ந்து காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டிருந் தார்கள்.

''வணக்கம், டீச்சர்!...''

பிஞ்சுக் குரல்களின் மாறாத அந்த மழலை ...மாய் அவள் நெஞ்சில் இனிப்பைச் ...ந்தது.

''உட்காருங்க...'' பிரகாஷ் தந்த மரி யாதையை அவள் ஏற்றுக்கொண்டாள்.

''அடுத்த வாரம் அம்மாவும், அப்பாவும் ஊரிலேயிருந்து வராங்க. கோடை விடு முறைக்கு இவர்களை ஊருக்கு அழைத்துக் கொண்டு போகத்தான்...''

''அப்படியா அடுத்த வாரம் தானே வராங்க? அதுக்கு முன்னாலே நீங்க அனு மதிச்சா?...''

''என் அனுமதியா?...''

எதற்குத் தன் ஒப்புதலைக் கேட்கிறாள் என் பது புரியாமல் அவளைப் பார்த்தான்.

''நானும், என் சினேகிதிகளும் பெங்களூர் போகிறோம். உங்களுக்கு ஆட்சேபணை இல் லேன்னா இவங்களையும் அழைச்சிட்டுப் போக லாம்னு நினைக்கிறேன். ரெண்டே நாள் புரோக்ராம்தான்...''

''நோ அப்ஜக்ஷன். தாராளமா அழைச் சிட்டுப் போங்க...''

அவன் சம்மதித்து விட்டான்.

இப்படியே தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டு இந்நாள் வரையிலும் வெளிப் படுத்தத் தயங்கிக் கொண்டிருக்கும் அந்த விஷயத்துக்கும் அவனது சம்மதம் கிடைத்து விட்டால்?...

'இப்போதே சொல்லி விடலாமா?' வேண் டாம்! போய் வந்தபின் பேசிக் கொள்ளலாம்.

தனக்குத்தானே ஓர் ஆறுதலான பதிலைச் சொல்லிக் கொண்டு சமாதானமடைந்தாள் நித்யா.

உமாவும், மகேஷும் உற்சாகத்தோடு அவளுடன் புறப்பட்டார்கள்.

லால்பாக், கப்பன் பார்க், விதான் சௌதா நந்தி ஹில்ஸ், திப்பு சுல்தான் கோட்டை, மைசூர் அரண்மனை என்று ஓர் இடம் விடா மல் சுற்றிப் பார்த்தார்கள். உமாவுக்கும், மகேஷுக்கும் தானே கார்டியன் போன்ற பெருமிதமான நினைப்போடு, அவர்களுக்கு வேண்டியதைக் கவனித்தபடி, அவர்களது ஆசைகளை நிறைவேற்றியபடி, அவர்களுக்கு 'ஹோம் சிக்னஸ்' வராதபடி, அன்பாக, பக்குவமாக, இதமாக அனுசரித்துக் கொண்டு இரண்டு நாட்களையும் இரண்டு நொடிப் போதில் விரட்டிவிட்டு ஊர் திரும்பிக் கொண் டிருந்தபோது நித்யாவின் நெஞ்சம் குதூ கலித்துக் கொண்டிருந்தது.

'டீச்சர்... டீச்சர்!...' என்று வாய் நிறைய நெஞ்சு நிறைய அழைத்த அந்த இளம் தளிர்கள், 'அம்மா' என்ற மூன்றெழுத்தை உச்சரிக்க ஒரு வாய்ப்பான நேரம் நெருங்கிக் கொண்டிருப்பது போன்ற எண்ணமே அடிக் கரும்பாய் இனித்தது.

கனவுகளுக்கு நிறம் உண்டென்றால், அவளது கனவுகள் வர்ண ஜாலங்களுக்குச் சவால் விட்டுக் காட்டும். அடுத்த முறை —

அடுத்த முறை —

உமா, மகேஷ் இவர்களோடு பிரகாஷும் வருகிறான்.

'லால்பாக்கின் பசும்புல் தரையில் ஒரு லட்சியக் குடும்பத்தின் ஆதர்ச தம்பதிகளாய் நானும், பிரகாஷும்!...

கனவுகள்... கனவுகள்... கனவுகள் மயம்!

அடுத்த ஞாயிற்றுக் கிழமை.

பிரகாஷின் பெற்றோர்கள் சொன்னபடி வந்து விட்டார்கள். வந்து சேர்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம் அங்கு ஒரு பெரிய சர்ச் சையே ஆரம்பமாகிவிட்டது.

''உன்னை ரெண்டாவது கல்யாணம் பண்ணி க்கச் சொல்றது உனக்காக மட்டுமில்லேடா! இந்தக் குழந்தைகளுக்காகவும்தான். வாரத் துலே ஒரு நாள் தவிர மற்ற நாளெல்லாம் ஆபீஸ், ஆபீஸ்னு பறக்கறே. இவர் ரிடையர் ஆக இன்னும் ரெண்டு வருஷம் இருக்கு. இல்லேன்னா நாங்களும் இங்கேயே வந்திடு வோம். இவங்களைப் பராமரிக்க, கருத்தா இருந்து கவனிக்க ஒருத்தி இருந்தா எவ்வளவு நன்றாக இருக்கும்! பூர்ணிமாவோட தங்கை யையே உனக்குத் திருமணம் செஞ்சுதர அவங்க பிரியப்படறாங்க. உன் வைராக்யத் துக்கு அர்த்தமேயில்லே. ஊரிலே, உலகத் திலே நடக்காததையா செய்யச்சொல்றோம்?''

கல்யாணி பேசிக் கொண்டிருக்கையில் நித்யா அங்கு வந்து சேர்ந்தாள்.

மின்சாரக் கோளாறு காரணமாக விளக் குகள் அணைந்து விடுவதுபோல் பேச்சு ஒரு கணம் நின்று போயிற்று.



புனேவிலிருந்து பம்பாய் செல்லும் 'டெக் கான்குவீன்' ரயிலில் இரண்டு கிராம வாசி கள் ஏறினார்கள். குளிர் பானங்கள் விற்ப வனிடமிருந்து இரண்டு கோகாகோலா வாங்கிக் கொண்டார்கள். நெடுநாளாகவே கோகா கோலா சாப்பிட்டுப் பார்க்க வேண்டு மென்று ஆசை போலிருக்கிறது. ஒருவன் ஸ்ட்ராவை வீசிவிட்டு 'மடமட' வென்று குடித்து முடிப்பதற்கும் ரயில் ஒரு குகைக் குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது. கம்பார்ட்மெண்டில் ஒரே இருட்டு! உடனே மற்றவனைப் பார்த்துக் கத்தினான்.: ''குடிக்காதே... குடிக்காதே... என்னவோ கலந்திருக்கு இதிலே. கண்ணெல்லாம் இருட்டிக்கொண்டு வருது... தூர வீசு அதை!''

—நிமல்

அறிமுகம் சுருக்கமாக முடிந்தது.

''வாம்மா, உட்கார்...''

கல்யாணியின் அருகில் அமர்ந்து கொண்டாள் நித்யா.

''ஏதோ முக்கியமான விஷயமாப் பேசிக்கிட்டிருந்தீங்க போலிருக்கு. நான் குறுக்கே புகுந்து தடுத்திட்டேனு?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. நீயே சொல்லு. இந்தக் குழந்தைகளைப் பொறுப்பா கவனிக்கக்க இவனால மட்டும் முடியுமா? ஒரு பெண்பிள்ளையோட துணை இல்லாமே இவனும்தான் எஞ்சிய காலத்தைத் தள்ளிட முடியுமா?''

நித்யாவையும் அவர்களுக்கிடையே நடைபெற்றுக் கொண்டிருந்த சம்பாஷணைக்குத் துணை சேர்த்துக் கொள்ளும் முகமாகப் பேசினாள் கல்யாணி.

இதுகாறும் அவர்களுக்கிடையில் நடைபெற்றுக் கொண்டிருந்த பேச்சு வார்த்தைகள் எந்த விஷயத்தைத் தொட்டுத் தழுவிக் கொண்டிருந்தன என்பதைப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவள் குழந்தையல்ல.

ஆனால், தன் உள்ளக் கிடக்கையை, பிரகாஷின் மீது தான் கொண்டிருக்கும் அன்பை வெளிக் காட்டப் பல மாதங்களாக ஒரு சந்தர்ப்பத்துக்காகக் கூச்சமும், பொறுமையுமாய்க் காத்துக் கொண்டிருந்த நேரத்தில், அந்தக் கூச்சத்துக்கு அவசியமில்லை என்பது போல், அவளது அந்த சடுபாடு ஒரு தலைப் பட்சமானது என்பதுபோல் கல்யாணியின் பேச்சு காட்டாற்று வெள்ளமாய் அனைத்தையும் அடித்துச் சென்றுவிட்ட அதிர்ச்சியில், என்ன பேசுவது என்பது புரியாமல் தத்தளித்தாள் நித்யா.

''ஏம்மா, ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறே?''

அவளுடைய நெஞ்சின் ஈசானிய மூலையில் லேசாக வலி கண்டிருப்பது அறியாமல் கேட்டாள், கல்யாணி.

''நான் சின்னப் பொண்ணு. என்ன சொல்ல முடியும்? பெரியவங்க நீங்க எது சொன்னாலும் ஏத்துக்கக் கூடியதாகத்தான் இருக்கும்...''

''நீ சின்னப் பொண்ணுதான். ஆனா எவ்வளவோ குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கறே. அனுபவப் படிப்பு இருக்கு. ரெண்டு குழந்தைகளுக்குத் தகப்பனாகி, மனைவியையும் பறி கொடுத்துவிட்டு இவனாலே எந்தப் பொறுப்பை ஏற்று நடத்த முடியும்? இவங்க என்னைக்குமே குழந்தைகளா இருக்கப் போறவங்க இல்லே. வளர வேண்டியவங்க. இவங்களுக்காகவாவது...''

கல்யாணி ஒரு பிரச்னையை முன்னால் எடுத்து வைத்துப் பேசிக் கொண்டிருக்கையில், பிரகாஷின் முகத்தில் சம்மதத்தின் அறிகுறிகள் இலேசாக முளைவிட ஆரம்பித்தன.

''என்னடா, சொல்றே? சௌம்யாவைக் கல்யாணம் பண்ணிக்கக் கொடுத்து வச்சிருக்கணும். பூர்ணிமாவைப் போலவே அழகா இருக்கா. அவளோட தங்கைதானே? அதே அச்சு... அதே குணம். அவங்களும் ஆசையோட உன் சம்மதத்தை எதிர்பார்த்துக் காத்திட்டிருக்காங்க. நீ சரின்னு சொன்னா நாங்க மட்டும் சந்தோஷப்படப்போறதில்லே! இந்தக் குழந்தைகளும் வாய் நிறைய அம்மான்னு கூப்பிட ஒரு பெண் தெய்வம் வீட்டுலே இருந்தா... மூளையைக் கொஞ்சம் செலவு பண்ணி யோசிக்கப் பார்...''

பேச்சு உச்ச கட்டத்தை அடைந்து கொண்டிருந்த போது பிரகாஷின்வைராக்கிய இதயம் கொஞ்சம் கொஞ்சமாக நெகிழ்ந்து கொடுக்கத் தொடங்கிற்று.

உமாவும், மகேஷ்ஷும் நித்யாவின் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டார்கள்.

புரியாத சங்கதியின் பிடிபடாத ராகங்களாய் அங்கே நடந்து கொண்டிருந்த பேச்சுக்களின் சாயல்களினின்றும் விலகித் தன் பக்கம் வந்து அமர்ந்த அவர்களை ஆதரவோடு அணைத்துக் கொண்டாள் நித்யா.

நெஞ்சு வலி கொஞ்சம் கொஞ்சமாக அந்த அணைப்பின் சுகத்தில் ஆவியாகிப் போயிற்று.

கண்களில் பெருகிய நீர் அந்தக் குழந்தைகளுக்காகவா? இல்லை, ஒருவழிப் பாதையாகப் போன தன் மன எழுச்சிகளின் ஆதிக்க வெறி முற்றிலுமாகச் சரிந்து போய் விட்ட ஆற்றாமையாலா?

கோடை விடுமுறைக்குப்பின் பள்ளிக்கூடம் திறந்தார்கள். உமாவும், மகேஷ்ஷும் மேல் வகுப்புக்குச் சென்று விட்டார்கள்.

தினமும் நித்யா அந்த வீட்டுக்கு வருகிறாள். தனிப்பயிற்சி தொடர்கிறது.

கோயில் மணியின் சுநாதமாய் ஒலிக்கும் குரல்கள். கதிரவனின் ஒளிக்கதிர்கள் பட்டுப் பிரகாசிக்கும் மலர்களைப் போல் கண்களில் ஒரு மலர்ச்சி.

''வணக்கம், டீச்சர்!...''

அந்த மூன்றாவது ஸ்தானத்தை மட்டும் அவள் இன்னும் இழக்கவில்லை!

மேலட்டை: விளக்குக்கு ஒரு விளக்கம்!



தபால் தலைகள், வெளி நாட்டு நாணயங்கள் ஆகியவைகளைச் சேகரிப்பது பலருக்கும் பொழுது போக்கு. அதுபோல் அரிய பழங்கால கலைப் பொருள்களைச் சேகரிக்கிறார் குமாரி பவித்ரா. அட்டைப் படத்தில் அவர் அருகே காணப்படும் அழகிய விளக்கு நெருங்கிய குடும்ப நண்பர் ஒருவரிடம் அவர் அன்பளிப்பாகப் பெற்றது.

வண்ணப்படம் எடுத்தவர்:
சரஸ்வதி சத்தியமூர்த்தி
தகவல்: ருக்மிணிராமச்சந்திரன்

மினி
மர்மத்
தொடர்கதை

நரிக்கொம்பு 12

கிருஷ்ணவேணி

வரைபடங்களை மேஜை மீது பரத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தான் ஹரி. வாக்வம் ஜக்கிலிருந்து நிரப்பப்பட்ட காப்பிக் கோப்பையிலிருந்து புகையாக ஆவி சுருண்டு மேலெழுந்து கொண்டிருந்தது. அவன் பார்வை டிராயிங் போர்டிலிருந்தாலும் மனம் அதில் லயிக்கவில்லை. சின்னச் சின்னப் பொருள்களாக — நகைகள் — பழங் கால நாணயங்கள் — வெண்கலத்தாலான 'ஆண்டி'க்ருகள் — இரண்டாக வெட்டப்பட்ட டாய்லட் சோப் — அநீதாவின் வழுவழு முகம், கழுத்து—நந்தினியின் ஆபீஸ் கட்டிடத்து மூலையில் பூதாகாரமாக உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு வில்லன் உருவம் — இப்படிச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் அவன் சிந்தையிலே கார்ட்டூன் காட்சிகளாகத் தோன்றி நர்த்தனமாடிக் கொண்டிருந்தன.

அன்று நந்தினியின் கையிலிருந்து நெக்லஸைப் பறித்துக் கொண்டு ஒருவன் ஓடி மறைந்ததும், அவள் காரியாலயத்தினுள் செல்வதையே உற்றுப் பார்த்துக் கொண்டு ஒருவன் நின்றதும் நினைவில் தோன்றி, நெஞ்சைத் தடதடக்க வைத்தது. 'நந்தினி கண்காணிக்கப்படுகிறாள். அவளை அபாயம் சூழ இருக்கிறது. அவளைக் காப்பாற்ற வேண்டும். — அவள் பத்திரத்துக்குப் பங்கம் விளையாதபடி ஒரு நல்ல பிரைவேட் டிடக்டிவை ஏற்பாடு செய்து அந்தப் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தால் என்ன?' — ஆவி அடங்கிக் கொண்டிருந்த காப்பியை எடுத்து உறிஞ்ச ஆரம்பிக்கும் போது டெலிபோன் கிணுகிணுத்தது.

''மிஸ்டர் ஹரி —?'' ஸோனுவின் கட்டைக் குரல் கூப்பிட்டது.

''இன்று சித்தப்பாவுக்குப் பிறந்தநாள் — தன் பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாடுவது அவர் வழக்கம். ஆனால் வந்த இடத்தில் அப்படியெல்லாம் பரபரப்பாக ஏற்பாடு செய்ய முடியா விட்டாலும் ஒரு சின்ன விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறாராம். நம் இருவரையும் அழைத்திருக்கிறார்.''

''இன்றிரவா?''

''ஆமாம்...''

ஹரி நினைத்துக் கொண்டான். 'அந்த மதனை நான் சந்திக்க வேண்டும். ஆனால் அவன் என்னைத் தேடி வரட்டும். ரமேஷ் அன்று இரவு எனக்கு போன் செய்தது இந்த மதனுடைய அறையிலிருந்துதானே?' — ஆனால் அவன் வாய் அநீதாவிற்கு இப்படிப் பதில் சொல்லியது: ''விருந்துக்கு அழைத்தது பற்றி ரொம்ப நன்றி. எனக்கு இன்று ஏகமா வேலைகள் இருக்கே. சாப்பாட்டுக்குக் கூட நான் இன்று வீட்டுக்கு வர முடியாது. ஸோனுவிடம் கூறிவிடு.''

''சித்தப்பா முக்கியமா உங்களைத்தான் அந்த விருந்திலே எதிர்பார்க்கிறார். வேறு யாரோ சிலர் வராங்களாம். அவர்களை உங்களுக்கு அறிமுகப் படுத்தணுமாம். நீங்க ரொம்ப நேரம் தாமதிக்க வேண்டாம். ஹோட்டல் கலிங்காவிலே தான் டின்னருக்கு ஏற்பாடு செய்திருக்கார்... நீங்க வெளியிலே சாப்பிடப்போற நேரத்தை இந்த விருந்திலே கலந்து கொண்டு செலவிட்டால் போதும்.'' உருக்கமாக வேண்டினாள் அநீதா.

''எஸ்... ஸ்பீக்கிங்.''

''அந்தம்மா உங்க கூடப் பேசணுமாம். லைன் போட்டுத் தரச் சொன்னாங்க.''

ஹரிக்கு வியப்பாக இருந்தது. அநீதாவை ''அது'' என்று கூறாமல் 'அந்தம்மா' என்கிறானே என்று.

போனில் அநீதாவின் குரல் ''ஹரி — நீங்கள் தானே?'' என்றது மெலிதாக — சோர்வுடன்.

''நானேதான்... என்ன விஷயம் அநீதா?'' சில கணங்கள் மௌனத்துக்குப் பிறகு. அநீதா ஸோனுவிடம் கூறுவது டெலிபோனில் தொலைவில் ஒலித்தது.

'நீ போகலாம் ஸோனு...'

ஹரி சிரித்துக் கொண்டான். ஸோனுவின் 'ம்க்கும்' என்ற நொடிப்பைக் கேட்டு. பிறகு அநீதாவிடம் ''ஸோனுவை ஒதுக்கிவிட்டு என்னுடன் ரகசியம் பேசாதே அநீதா. ஸோனுவிற்கு அதெல்லாம் பிடிக்காது. அவன் ஒரு மாதிரி டைப்'' என்றான்.

ஆனால் அநீதா அதற்குப் பதில் கூறவில்லை. ...பல விநாடிகள் மௌனம் நிலவியது. 'ஸோனு அந்த அறையிலிருந்து போவதற்காகக் காத்திருக்கிறாள் போலிருக்கிறது அநீதா' — ஹரி நினைத்துக் கொண்டான். சற்றைக்கெல்லாம் அநீதாவின் குரல் கேட்டது.

ஹரி கீழுதட்டை மடித்துக் கடித்துக் கொண்டான். பிரபல ஹோட்டலான கலிங்காவின் டைனிங் ரூமில் வைத்து அந்த மதன் விஷமம் ஏதும் செய்ய முடியாது. விருந்தில் கலந்து கொள்ளுவதானால் ஏதாவது உபயோகமான விஷயம் கிடைத்தாலும் — கிடைக்கலாம் இந்த முடிவுக்கு வந்த ஹரி ''சரி... உன் வற்புறுத்தலுக்காக வருகிறேன். ஆனால் வந்தவுடன் விருந்தை முடித்துக் கொண்டு ஓடி வந்து விடுவேன்'' என்றான்.

''உங்களைக் காக்க வைக்க மாட்டார் சித்தப்பா. நீங்கள் எவ்வளவு பிஸியானவர் என்று தெரியாதா அவருக்கு... என்னை வந்து அழைத்துப்போக எப்போது வருகிறீர்கள்? நான் தயாராக இருப்பேன்...''

''ஓ... நான் வர வேண்டுமில்லையா?... ம்... ஓகே! எய்ட்டோ க்ளாக் — ஷார்ப்'' என்று கூறி போனை வைத்த ஹரி எதையோ நினைத்துத் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

ஹரி ஒரு விநாடி தடுமாறிப் போனான் —அநீதாவின் அலங்காரத்தைப் பார்த்து. — அப்படிக் கவர்ச்சியாக உடையணிந்திருந்தாள். உடலின் வளைவு நெளிவுகள் துல்லியமாகத் தெரிய உதவி செய்தது அந்த

மேனாட்டுச் சேலை. இலேசாக மடிப்பு விழுந்த அவளது இடையைத் தழுவிக் கொண்ட அந்தக் கற்களிழைத்த அணி — சாவிக்கொத்து டாலடித்துக் கொண்டிருந்தது. ரமேஷின் பரிசான அதை அநீதா அணிந்து கொள்ள மறப்பதே இல்லை. அவள் கையைப் பற்றியபடி அந்தப் பிரபலமான ஹோட்டலுக்குள் நுழைவதே பெருமையாக, கிளுகிளுப்பூட்டுவதாக இருந்தது அவனுக்கு.

''இம்மாதிரியான பொது இடங்களுக்கெல்லாம் போய் எனக்குப் பழக்கமில்லை. பிடிக்கவும் பிடிக்காது — எல்லோரும் என்னையே பார்ப்பார்கள்'' என்றாள் அநீதா.

''வாலிபமும் வனப்புமாக இருப்பவர்களைக் கண்டால் கண்களை மூடிக் கொள்ளுவார்களா என்ன? ஆனால் அவர்களுக்கு ஏற்படுகிற வியப்பு ஒரு காட்டானுடன் இப்படியொரு கட்டழகி வருகிறாளே என்பதினால் தானிருக்கும்!'' என்றவன் ''பார்த்து இறங்கு கீழே படிகள் மூன்று...'' என்று மெதுவாகக் கிசுகிசுத்தான். இப்போது அநீதாவை அனேகமாகத் தன் பிடியிலிருந்து நழுவ விட்டு — அவள் தன்னிச்சையாக நடந்து வர இவன் அருகே வெறுமனே வந்துகொண்டிருந்தான்.

இவர்களைக் கண்டதும் எங்கிருந்தோ தோன்றிய மதன் ''அநீதா வாம்மா... நீ ஹரியைப் பிடித்துக் கொள்ளக்கூட இல்லையே... நிதானமாக வாம்மா... எதன் மீதாவது தடுக்கி விழுந்து...'' மிருதுவான குரலில் பேசிய படியே அநீதாவை வரவேற்றார் மதன்.

''குட் ஈவினிங் மிஸ்டர் மதன்...ஹாப்பி பார்த்டே'' என்று வாழ்த்துக் கூறிக் கைநீட்டினான் ஹரி.

''தாங்க்யூ!'' என்று போலியாகச் சிரித்துக் கைகுலுக்கிய மதன் அநீதாவை உட்கார வைத்தார். ஒரு சிறு குழந்தையைக் கவனிக்கும் பரிவு அவர் செயலில் காணப்பட்டது.

பிறகு அங்கு முன்பே அமர்ந்திருந்த கட்டை குட்டையான ஒரு மனிதரிடம் ''மிஸ்டர் ஹரி... பிரபல ஆர்க்கிடெக்ட்'' என்றவர் ஹரியிடம் அவரைக் கட்டிக் காட்டி ''லக்ஷ்மண் பிரசாத் — என்னுடைய காரியதரிசி'' என்று அறிமுகம் செய்து வைத்தார்.

லக்ஷ்மண் பிரசாத்தின் கரம் பற்றிக் குலுக்கினான் ஹரி. சர்க்கஸில் பளு தூக்கும் வஸ்தாதைப் போல் தோற்றமும் அகன்ற தோள்களும் கொண்ட பிரசாத்தின் பிடி இடுக்கியின் பிடிபோலிருந்தது. முரட்டுக் கரங்கள். ஆனால் இதழ்களைக் காதுவரை ஓடவிட்டுச் சிரித்தான் மனுஷன். சாதுரியத்தின் சாயல் இல்லை முகத்தில். தேக பலத்தின் கர்வமே தெரிந்தது.

''நம்ம லக்ஷ்மணுக்கு வரவேற்புக் கூறம்மா அநு'' என்றார் மதன்.

''ஹலோ மிஸ்டர் பிரசாத்'' என்றாள் அநீதா.

''ஹலோ...'' என்று எழுந்துவந்து அவள் கரம் பற்றினான் மதனின் காரியதரிசி.

''இன்னொரு முக்கியமான விருந்தாளியை எதிர்பார்க்கிறேன். இத்தனை நேரம் வந்திருக்கவேண்டும்...'' என்று தனக்குள் பேசிக் கொண்டே வாயிலைப் பார்த்தார் மதன். சொல்லி வைத்தாற் போல டைனிங் ஹாலின் நுழை வாயிலில் ஓர் அழகி தோன்றினாள். அவளைக் கண்ட மதன், ''ஷீ இஸ் கமிங்'' என்றபடி பரபரப்புடன் அந்த அழகியை வரவேற்கச் சென்றார். (தொடரும்)



ராஜ கர்ஜனை

28. ஒரு சிங்கம் வீழ்ந்தது!

"இன்றைக்குச் சரியாக நூற்றுத்தொண்ணூற்றாறு ஆண்டுகட்கு முன்...

* 7.12.1782...

காலைப்போது மிகப் பெரிய சரித்திரத்தின் ஒரு பொன்னேடு போல மலருகிறது...

சித்தூர் வட்டத்தைச் சேர்ந்த நரசிங்கராயன் பேட்டையில், சுதந்திரப் போராட்டத்தின்



கோவி. மணிசேகரன்

தனிப் பெருந் தலைவரான நவாப் ஹைதர் அலிகான் பகதூர் மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கிறார்...

தமது வலிமைமிக்க சிறகுகளில் பீரங்கிகளைச் சுமந்து கொண்டு யுத்தம்... யுத்தம்... யுத்தம்...

இந்த யுத்தப் பிரகடனத்தால் அதிர்ந்து போன, அழிந்துபோன, ஆங்கிலக் கும்பினியார்கள்... ஆ! அவர்களுக்கு இந்த இந்திய மண்ணிலேயே ஒரு சிம்ம சொப்பனமாக இருந்தவர் ஹைதர் அலி. இருந்து கொண்டிருப்பவன் திப்புகல்தான்...

ஒரு ராணி வேலூநாச்சியார், தமிழகத்தின் முதல் சுதந்திரப் போர்முழக்கத்தைக் கொட்டியவள்தான்...

ஒரு வீர பாண்டியக் கட்டபொம்மன், சுதந்திர முழக்கமாகக் கர்ஜித்தான்...

மருது சகோதரர்களோ, சமர் புரிந்தும் சௌகரியத்துக்கேற்றவாறு சந்து செய்து கொண்டும் உயிர் இழந்தவர்கள்தாம்...

ஆனால் ஒரு சீற்றம் நிறைந்த பொது நோக்குடைய சிம்ம சொப்பனமாகவோ, ராஜகர்ஜனையாகவோ அவர்களது முழக்கம் இந்தத் தென்னகம் முழுவதுமாக ஒலிக்கவில்லையே!...

மகா சுல்தான் ஹைதர் அலிகான் நவாப் பகதூரின் சீற்றம் நிறைந்த ராஜகர்ஜனை இந்தத் தென்னகத்தின் முழுவதுமாக — எந்தெந்த மூலை முடுக்குகளிலெல்லாம் வெள்ளைப் பறங்கியர்க் கும்பினியரின் 'மார்ச்' என்ற ஆங்கில வீரகோஷம் கேட்கிறதோ, அங்கெல்லாம் வெற்றிச் சத்தமாக 'மார்' என்கிற உருது கோஷம் கேட்குமே! அவரது அருமந்த புதல்வன் திப்புகல்தானோ, தென்னகம் மட்டுமல்லாது பின்னாளில் வடபுலம் வரை சென்று கும்பினியர்களை விரட்ட முனைந்த — முனையப் போகிற நிஜமான வேங்கையின் மைந்தனுயிற்றே! அப்பேர்ப்பட்ட வீரத் திருமகனைப் பெற்ற ஹைதர் அலி — சுதந்திரப் பிரகடனத்தின் உரிமைக் குரல் — இந்தத் தென்னகத்தின் தேசிய ராஜகர்ஜனை, இப்போது மரணத்தோடு யுத்தம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறது...

நிச்சயமாக மரணத்தின் ஜயக்கொடியை யாரும் வீழ்த்த முடியாது!

ஆ! மரணம் எவ்வளவு கொடியது...

"திப்பு வந்து விட்டானா?"

---

* இந்த அத்தியாயத்தை எழுதிய நாளும் 7-12-1978. இது இயல்பாகவே அமைந்ததாகும்.

—நெற்றையை முதற்கொண்டே, மகாகல் தான் ஹைதர்அலி, தமது குமாரனை எதிர் பார்க்கிறார்...

எப்படியும் சாகும் முன்னம் மகனைக் கண்டு சிலபல விஷயங்கள் குறித்து ஆத்மார்த்த மாகவும், பிராயச்சித்தமாகவும் பேச வேண்டும் என்பது அவரது அவா...

குப்புறப் படுத்துக் கொண்டிருந்தவர், மெல்ல ஒருக்களிக்க முயல்கிறார். முதுகில் பலமான கட்டு இருக்கிறது. ராஜப் பிளவைக் கட்டி என்பது புற்றுநோய் மாதிரியான தாயிற்றே!

மகா மருத்துவ மேதையான இமாம் பக்ஷி குலாம் அகமது எவ்வளவோ முயன்று பார்த் தாய் விட்டது. தொடக்க காலத்தில் இது தெரிந்திருந்தால், ஸ்ரீரங்கப் பட்டினத்தி லேயே வைத்து ராஜ வைத்தியம் பார்த்திருக் கலாம். இந்தச் சுதந்திரப் பூமியில் வெள்ளை நாரைகளாய் வந்திறங்கிய ஆங்கிலக் கும்பினி யர்கள், எங்கே முன்னேறி இந்தத் தென்ன கத்தைக் கபளீகரம் செய்து விடுவார்களோ, அவர்களை முளையிலேயே கிள்ளி எறியவேண் டுமே என்று எண்ணினாரே யொழிய, தமது இந்த நோயை முளையில் கிள்ளி எறிய முனைந் தாரில்லை. அலட்சியமாக விட்டதன் போக்கு, இப்போது ஆபத்தாக வந்து முடிந்துவிட்டது.

''திப்பு வந்து விட்டானா?''

''வந்து விடுவார் ஹுஜூர்!''

எத்தனை முறைதான் கேட்பார்; எத்தனை முறைதான் பதில் சொல்வது?

திவான் பூரணய்யா தமக்கேற்பட்ட மனக் கலக்கத்தில் வழிந்த கண்ணீருடன், தமது மகாகல்தானைத் தேற்றப் பெரிதும் முனைந்து கொண்டிருந்தார்.

திப்பு சுல்தானுக்கு அனுப்பிய செய்தி, இந்த யுத்த நெருக்கடியில் உருப்படியாகப் போய்ச் சேர வேண்டுமே என்று பலர் பிரார்த்தனை புரிந்தனர்.

தொலைவில் அமர்ந்திருந்த திவான் சாகிப் மீர்சாதிக் இந்த நேரத்திலுமா மீசையை முறுக்கி விட்டுக் கொள்ள வேண்டும்? அது கொஞ்சம் தாழ்ந்து அனுதாபத்துடன்தான் அரைக் கம்பத்தில் பறக்கட்டுமே என்ற நினைவு வேண்டாமோ? என்று மனத்துள் கசந்து கொண்டனர், கிருஷ்ணராவும், சாமா ஐயங்காரும்!

தலைமாட்டுப் பக்கமாக யாஸின்கானும், அபூமுகமதுவும், முகமது அலியும், பாதர் — உஸ் — ஸாமன்கானும், காஸிகானும், ராஜாக் கானும் மற்றும் ராணுவத் தூதர்களும் நின்றிருந்தனர்.

திவான் சாகிப் மீர்சாதிக் இந்த நேரத்தில் தன்னுள் உருவாக்கிக் கொண்டிருந்த சதித் திட்டம் மிக முக்கியமான ஒரு சிலருக்குஐயத் தின் காரணமாகப் புரிபடுகிறது. உண்மை யிலும் மகா மீர்ஸாகான் மூலம் திப்புவுக்குச் செய்தி பறந்ததும், தொடர்ந்து திவான் சாகிப் மீர்சாதிக்கின் இரு கடிதங்கள் இரு வேறு திசை நோக்கிப் பறந்தன. ஒன்று: சின்ன சுல்தான் அப்துல் கரீமுக்கு. மற் றொன்று: ஹைதர் நகர் ஆளுநர் அயாஸ் கானுக்கு!

ஸ்ரீரங்கப் பட்டினத்துக்கு ஆபத்து முளைக்கிறது என்பது மட்டும் திவான் பூரணய் யாவுக்கு நன்றாகவே விளங்குகிறது. அந்த நேரத்தில் அவரால் எதையும் துணிந்து செய்ய முடியவில்லை. ஹைதரின் மரண வஸ்தை அவரின் கைகளைக் கட்டிப் போட் டிருந்தது. எதையும் தெளிவாக ஆராய்ந்து உண்மையென்று நிரூபித்து நடவடிக்கை வேண்டுமே! சதித் திட்டம் செய்பவன் வருவாய்த் துறை சம்பந்தப் பட்ட திவான் சாகிப் பட்டத்துக்குரியவனாயிற்றே! தன்னி லும் ஒருபடி மீறிய அதிகாரமுடையவ னாயிற்றே!

''திப்பு வந்து விட்டானா?''

ஹைதர் அலியின் துடிப்பு விநாடிக்கு விநாடி அதிகரிக்கிறது. மருத்துவர் இமாம் பக்ஷி குலாம் அகமது ஒரு பொற் குவளையி லிருந்து, தேனில் குழைத்திருந்த மருந்தினைச் சின்னப் பொற்கரண்டி கொண்டு எடுத்து வாய் வழியே செலுத்துகிறார்...

முதுகிலிருந்த புற்றுக் கட்டியிலிருந்து மீண்டும் வலி தெறிக்கிறது...

'ஆ... ஊ...'

என்று ஹைதர் அலி, அவலமாக முனகிச் சத்தமிடுகிற கோரக் காட்சியைத் திப்பு கல்தான் மட்டும் நேரிலிருந்து பார்த்திருப்பானேயானால்..

'சீ, யுத்தமாவது... வெற்றியாவது!' என்று எண்ணி, எல்லாமே முடிவின் மரணத்தில் துடிப்பதுதான் என்கிற பிரத்யட்சமான முடிவைக் கண்டு, அதன் பிறகு அவனும் ஒரு திப்பு மஸ்தானுகி விட்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பது போலிருந்தது மகா கல்தான் ஹைதர் அலியின் மரண யுத்தம்...

ஓ... என்று ஒருமுறை அலறி, பிறகு ஒருவாறு தம்மை யடக்கிச் சமாளித்துக் கொண்டு உதடு



கலை அழுந்தக் கடித்து அண்ணாந்து கவனிக்கிறார்...

எதிரே திவான் பூரணய்யா இருக்கக் கண்டு அருகே சமிக்ஞையின் மூலம் அழைக்கிறார்.

அருகே வந்து நின்ற திவான் பூரணய்யா, குனிந்து, மூக்கின்மீது விரல் நுனிபட 'சொல்லுங்கள் மகாகல்தான்' என்பதுபோல நோக்குகிறார்.

''திவான்! திப்பு வந்து விடுவானா?''

''நிச்சயம் வந்து விடுவார் மகாகல்தான்! போர் நெருக்கடி எப்படியோ?''

''என்னுயிர் அதற்குள் பிரிந்துவிடும் போலிருக்கிறது. ஒருகால் அவ்விதம் நேருமாயின், உங்கள் அனைவருக்குமே ஒன்றைச் சொல்வேன்! என்னிடம் நீங்கள் அனைவரும் எவ்விதம் மிக்க விசுவாசத்துடன் நடந்துகொண்டீர்களோ, அவ்விதமே அவனிடமும் நடந்து கொள்வதாக ஆண்டவன் மீது சத்தியம் வையுங்கள்!''

அவ்வாறே அனைவருடைய சத்தியக் குரல்களும் எழுகின்றன. திவான் மீர்சாதிக்கும் ஏதோ முணுமுணுக்கிறான், அவ்வளவே!

ஹைதர் அலியின் குரல் நிரம்பவும் பலவீனமாக ஒலிக்கிறது:

''பூரணய்யா! இந்தத் தேசத்தை யாரும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் வெள்ளைக் கும்பினியனுக்கு அடிமைப் படுத்திவிடாதீர்கள், யாரும் அடிமையாகவும் நினைக்கக் கூடாது. அது இந்த மண்ணுக்குச் செய்கிற மாபாவம்! பிறகு நமது நாகரீகம், கலாசாரம், மொழிகள், பண்பாடு, எல்லாமே அழிந்துபோகும். பாரத தேசம் பழம் பெரும் தேசம்!''

மூச்சு திணறுகிறது; சொற்கள் திக்கித் திக்கி வெளிவருகின்றன.

''ஒரு ரகசியத்தைச் சொல்கிறேன். திப்புவின் காதலால் நமது சுதந்திர முழக்கம் பங்கப்பட்டு விடுமோ என்று நான் அஞ்சினேன். ஆனாலும் அந்தக் காதலை நான் பிரிக்க நினைக்கவில்லை. இது போலவே, பசவராஜ் ஒரு நல்ல வீரன். அவனது சேர்க்கையை நமது பெரும்பாலான அரசாங்க அதிகாரிகள் விரும்பவில்லை. அதிகாரிகளும்,



அரண்மனை கல்தானுக்கனுமாகச் சேர்ந்து எனக்குக் கடிதம் எழுதியதன் பேரில், அந்தப் பரிசுத்தமான பிராமணப் பெண்ணுக்கும், அந்தப் பவித்திரமான நண்பனுக்கும் துரோகம் செய்து விட்டேன்.. அதன் பயனை இப்போது அனுபவிக்கிறேன்.''

மீண்டும் மூச்சு வாங்குகிறது...

அதுவரை அசட்டையாக இருந்த திவான் சாகிப் மீர்சாதிக், மேற்கொண்டு வருகிற செய்திக்காகத் தனது செவி மடல்களை விரித்துக் கூர்மையாகக் கவனிக்கிறான்.

ஹைதர் அலியின் நாவிலிருந்து வார்த்தைகள் சனகரத்தில், தெத்தியும், திக்கியும், இடையிடையே தொய்ந்தும் ஒலிக்கின்றன...

''அந்த இருவரையும் பழி பாவத்துக்கு ஆளாக்கினேனே யொழிய அவர்கள் எழுதியது போலக் கொன்று விடவில்லை. அந்த மட்டில் அல்லாஹ் என்னை நிதானமிழக்க விடவில்லை. அந்த இருவரையும் எனது ஹைதர் நகரத்து சிறைக்கூடத்தில் அடைத்து வைத்திருக்கிறேன். அவர்களை மீட்டுத் திப்புவிடம் ஒப்படைத்து விடுங்கள். ரங்கநாயகியின் காதலில் யாருமே குறுக்கிடாதீர்கள். பசவராஜ் நட்பில் யாரும் பொறாமைப் படாதீர்கள். இதுவே எனது கடைசிக் காலப் பிராய...''

ஓ...

மாவீர மகாகல்தான் நவாப் ஹைதர் அலிகான் பகதூர் (*ஜங்) அவர்களின் உயிர்ப் பறவை — மிகச்சிறந்த ஆத்மப்பறவை பிரிந்து எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்பாதங்களை நாடிப் பறக்கிறது...

சரித்திரத்துக்குரிய அந்த உடல், ஜடமாகிச் 'சில்' லிடுகிறது...

எல்லாக் கண்களையுமே துன்பத்தின் நீர்த் திரைகள் மூடுகின்றன...

மூன்றும் நாள் — 9.12.1782...

இன்னமும் திப்புகல்தானுக்காகக் காத்திருக்க முடியாது என்று அனைவருமாக ஒரு முடிவின்கீழ் வருகின்றனர்...

இந்த மூன்று நாள் காலதாமதம் திவான் சாகிப் மீர்சாதிக், தீட்டிய திட்டத்துக்குச் சாதகமாக அமைந்து விட்டது. இது குறித்து அவன், உள்ளூற மகிழ்ந்து கொண்டான்...

* 'ஜங்' என்ற சொல்லை ஹைதர் விரும்பவில்லை. எனவே அந்த விருதை அவர் உயிருள்ளவரை சேர்த்துக்கொள்ள நாணப்பட்டார் என்று ஒரு சரித்திரம் கூறுகிறது.



ஹைதர் அலியின் மரணச் செய்தியை மிகவும் ரகசியமாகப் பாதுகாக்க வேண்டும் என்று அனைவருமே ஒருமுகமாக முடிவு எடுத்தனர். எதிரிகளுக்குத் தெரியுமேயானால் எந்த நிமிடத்திலும் எதுவும் பறி போகலாம் என்பது எல்லோருடைய ஏகோபித்த முடிவு. எனவே, ஹைதர் அலியின் உடலை ஒரு பெட்டியில் வைத்து, ஆடை அணிகலன்களைத் தூக்கிச் செல்வது மாதிரி பாவனை காட்டி ஸ்ரீரங்கப் பட்டினத்துக்குக் கொண்டு செல்ல முனைந்தனர். அதுவரை கொஞ்சம் படைகளுடன், ஹைதரைப் போலவே உருவ ஒற்றுமையமைந்த யாகின்கானை அங்கேயே நிறுத்தி வைக்க ஏற்பாடு செய்தனர். யாகின்கானுக்கும் ஒரு நிறைவு! ஹைதர் அலி உயிரோடு இருந்தபோது, 'என்றைக்காவது உன்னை என் ஸ்தானத்தில் வைத்து ஒரு நாள் ராஜாவாகவேனும் ஆக்குவேன்!' என்று சொன்ன சொல் இப்போது பலிக்கிறது.

அவன் எது வரினும் வரட்டும் என்கிற தியாக மனப்பான்மையுடன் ஒப்புக் கொண்டான். ஆ! இந்த யாகின்கானுடைய கதையும் இத்துடன் முடிந்துவிட்டது என்று மனத்தில் நினைத்துக் கொண்டான் திவான் சாகிப் மீர்சாதிக். தனது சதித் திட்டத்துக்கு முன் கூட்டியே இவனது உருவ ஒற்றுமையை அறிந்திருந்தால் இந்நேரம் எத்தனை பேர் கதை எத்தனை விதமாக மாறியிருக்கும்! உடன்பட மறுத்து விட்டானே! தொலையட்டும்... திவான் மீர்சாதிக்கின் பற்கள் நறநறக்கின்றன...

சில துணிமணிகள் வெளியில் தெரியுமாறு பெட்டியைச் சுமந்துசென்றனர். பார்ப்பதற்கு அது ஒரு சாதாரணப் பெட்டி என்பது மற்றவர்க்குப் புரிய வேண்டுமே!

எவ்வளவு வேகமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு வேகமாக அனைவருமே ஸ்ரீரங்கப் பட்டினத்தை நோக்கி விரைந்தனர்.

தங்க வயலான கோலாரை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

அதோ, திப்பு கல்தான் புயலனைய வேகத்துடன், மகாமூர்ஸாக் கானுடன் பறந்து வருகிறான். பின்னே படைவீரர்கள்...

அவனது ஆவேச வருகையைக் கண்டு அனைவருமே பிரமித்துப் போய் நின்று விட்டனர். பெட்டியை ஒரு மருங்கே இறக்கி வைத்தனர்.

அருகே வந்த திப்புகல்தான், தனது புரவியைப் பலம் கொண்ட மட்டும் லகான்களை இழுத்து நிறுத்த முயல்கிறான். வந்த வேகத்தின் காரணமாக அந்தப் புரவி நிற்க முடியாது மூன்று முறை சுற்றித் துடிப்பின் காரணமாக நுரை தள்ளிய வாயுடன் முன்னங் கால்களைத் தூக்கிக் கனைக்கிறது.

புரவியை விட்டு இறங்கினானா அல்லது துள்ளிப் பாய்ந்தோடி வருகிறானா என்பதே புரியவில்லை, திப்புகல்தான் இந்த உலகமே அஸ்தமித்து விட்டது போன்ற பாசத்தின் துடிப்பால் ஓடி வருகிறான். பின்னாலே மகா மீர்ஸா கானும் ஓடிவந்தான். தொலைவில் அவனுடன் வந்த படைகள் துக்கத்தின் காரணமாகப் பெருங் கூச்சலுடனும் நிற்கின்றன.

திறந்த பெட்டியில் மீளா நித்திரை செய்து கொண்டிருந்த தனதருமை வீரமிகு தந்தையைப் பார்க்குந்தோறும் உலகிலுள்ள அனைத்துத் துயரங்களும் பொங்கிப் பிரவகிக்க மலைத்து, சிலைத்து நிற்கிறான் திப்புசுல்தான்.

''அப்பா ஜான்...!''

அந்தப் பிராந்தியமே நடுநடுங்குகிற அளவுக்கு மிகப் பெருஞ்சத்தம்...

அதுவும் ஒரு ராஜ கர்ஜனையோ? ஹைதர் என்கிற மகாராஜ கர்ஜனையும் அவனுள் புகுந்து இருமடங்கு உயர்ந்து விட்டதோ என்று பலரும் பொறிகலங்கிப் போயினர். அவனது முகம் சிவந்த தோற்றம், திவான் சாகிப் மீர்சாதிக்குக்கும் நடுக்கம் தந்தது என்றால்...

திப்புசுல்தான் குரல் அதற்குமேலே ஒலிக்கவில்லை. அந்தச் சிங்கம் வேதனையால் கண்ணீரில் குளிக்கிறது...

மிகவும் துணிவாக அருகே சென்ற திவான் பூரணய்யா, திப்புசுல்தானைத் தேற்றுகிறார். மகாசுல்தான் ஹைதர் அலி கூறிய அனைத்தையும் எப்படிச் சாங்கோபாங்கமாக எடுத்துச் சொல்ல வேண்டுமோ, அப்படி எடுத்துக் கூறினார் திவான் பூரணய்யா.

ரங்கநாயகியைப் பற்றியும், பசவராஜ் பற்றியும் செய்தியறிந்த திப்புசுல்தான், பல கணங்கள் மருண்டு போய் மலைகிறான்.

அவர்களைச் சிறையிலடைத்த காரணங்களைப் பகிரங்கமாகவும் அதே நேரத்தில் தந்தையாரின் சுதந்திர முழக்கத்துக்குப் பங்கம் ஏற்பட்டு விடுமோ என்கிற காரணத்தைப் பக்குவமாகவும் பிட்டு வைத்தார் திவான் பூரணய்யா.

திப்புசுல்தானின் கண்கள் மிகவும் கொடூரமாக அனைவரையுமே நோக்கின. அவனது பார்வை யார் மீதும் குறிப்பாக விழுகிற அளவுக்கு நடந்து கொள்ளாது, அதிலும் ஓர் அரச தந்திரம் இருக்கிற மாதிரி காட்டிக் கொண்டதைக் கண்டு வியந்து போனார் திவான் பூரணய்யா.

அந்தத் தருணத்தில் —

தொலைவில் பதின்மர் புரவிகளில் வாயு வேகம் மனோவேகமாக வந்து கொண்டிருப்பதைக் கவனித்தனர்.

அருகே வந்த அவர்கள் குதிரையை விட்டிறங்கி ஓடோடி வருகிறார்கள். திப்புசுல்தானை அங்கிருப்பதைக் கவனித்து ஒரு நிறைவு கண்டு, மண்டியிட்டு வணங்கி எழுந்து, வந்த களைப்பையும் பொருட்படுத்தாது, ''ஹுஜூர்! நமது மகாசுல்தான் யுத்த களத்தில் இறந்து விட்டதாகச் செய்தி பரவியிருக்கிறது. மைசூர் ராஜ்யமே அல்லோல கல்லோலப்படுகிறது. அதன் காரணமாக நமது சின்ன சுல்தான் வருகை தந்து, எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு, ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்ற முயன்று கொண்டிருக்கிறார். மறுப்புத் தெரிவித்துப் போராடிக் கொண்டிருக்கிற நமது பெரிய சுல்தானா பேகம் அவர்களை எந்த நேரத்திலும் சிறையிலடைக்கலாம். இதனால் உள்நாட்டுக் குழப்பம் தலைதூக்கி இருக்கிறது. நமது சின்ன சுல்தானுக்கு உடந்தையாக மகாசுல்தான் நகர் (ஹைதர் நகர்) அதிகாரி அயாஸ்கான், கர்னல் வில்க்ஸுடன் கூடிக்கொண்டு தனிக் கொடி ஸ்தாபித்து விட்டார். தங்களுக்காக மலபார் நோக்கியும் ஆட்கள் பறந்திருக்கிறார்கள். தங்களை வழியில் சந்தித்தது ஸ்ரீரங்கப் பட்டினம் செய்த மகாபாக்யம்!'' என்று அவர்கள் கூறி முடிக்கிற வரை, எரிமலையாகக் குமுறிக் கொண்டிருந்த நவாப் திப்புசுல்தான்...

மீசை துடிக்க, தோள்கள் விம்ம, ''கரீம்!'' என்று அழுத்தமாகக் கூறுகிறபோது, அந்த வார்த்தை அவனது பற்களில் அரைபட்டு வெளி வந்தது. அக்னிக் கோபம் ஜுவாலையாய் எழுந்தது.

தொலைவிலிருந்த திவான் சாகிப் மீர் சாதிக், தனது பொறிகள் நெருப்பாகிப் பற்றிக் கொண்டிருக்கின்றன என்பதில் அமைதி கண்டான். அவனை மிகவும் அர்த்தத்துடன் கவனிக்கிறார் திவான் பூரணய்யா.

''குமார சுல்தான்! மௌனம் சாதிக்க இது நேரமில்லை. தந்தையாரைக் கோலாரிலேயே இப்போதைக்கு அடக்கம் செய்வோம். உங்கள் பாட்டனாரை அடக்கம் செய்த இடத்திலேயே தந்தையாரையும் அடக்கம் செய்வது நல்லதாகும். நாம் சென்று அவனவற்றைக் கவனித்த பின்னர், தந்தையாரின் பூத உடலை எடுத்துச் சென்று ஸ்ரீரங்கப்பட்டினத்தில் முறைப்படி தக்க அரச மரியாதையுடன் அடக்கம் செய்து கௌரவிப்போம்'' என்று திவான் பூரணய்யா கூறியதே சாலப் பொருத்தமென்பதை உணர்ந்து, செயல்படத் தொடங்கினான் திப்புசுல்தான். அவனது நினைவில் ஒருபுறம் ஸ்ரீரங்கப் பட்டினம், மறுபுறம் மஞ்சுளாதேவி, பசவராஜ், ரங்கநாயகி...

அன்னை பெரிய சுல்தானா பேகத்தின் அவல நிலை...

எது, எவ்விதம் நிகழ்ந்து விடுமோ என்கிற மனக் கொதிப்புடன் செயல்களை விரைந்து முடித்துப் படைகளுடன் ஸ்ரீரங்கப் பட்டினத்தை நோக்கிப் பயணமானான் சீற்றமிகு ராஜநாகமாய்ப் படம் விரித்துப் பற்களைக் கூர் தீட்டிக் கொண்டிருந்த போற்றுதலுக்குரிய மாவீரச் சுதந்திரச் சிங்கம் திப்புசுல்தான்.

(தொடரும்)



முதல் வேலை!

விக்டோரியா மகாராணி முடி சூட்டிக் கொண்டதும் செய்த முதல் காரியம், தன் செல்ல நாய்க்குட்டியைத் தன் கையாலேயே குளிப்பாட்டியது தான். ஒருசமயம் அவரிடம் 83 நாய்கள் இருந்தன. ஒவ்வொன்றின் பெயரும் அவருக்குத் தெரியும்.

இரா. வசந்தன்.



மதிப்புக்குரிய அதியமான் அவர்கள் சமூகத்துக்கு.

தனுஜா என்னும் மங்கை நல்லாள் உளக் கனிவுடன் செப்பும் இனிய வணக்கங்கள். மழைக்குக் கூடத் தங்கள் அரங்கினில் மறைவிடம் தேடாத நான் நேற்று மழையில் லாமலே தங்கள் அரங்கில் ஒதுங்கினேன். காரணம்: நேற்று முதல் துவங்கி நேற்றே கடைசியாகி ஓடிப் போன 'லிங்டாங்கி' (தமிழாக்கம் தெரியவில்லை) திரைப் படம்தான். உங்கள் திரை அரங்கில் வசதியாகக் கை, கால்களை நீட்டிக் கொள்ள முடிந்தது. ஏனென்றால் அரங்கில் எண்ணிப் பதின்மூன்று பேர்தாம் இருந்தோம். அதிலும் ஒருவர் 'லிரோகோடின்' விளம்பரத்தின் போது தூங்கி விட்டார். 10/10 ரீலை மட்டும் பார்த்துப் பயந்து, அதற்கு மேல் முடியாமல் வீடு வந்து சேர்ந்தேன். மறுநாள்தான் ஞாபகம் வந்தது. கையோடு போன குடையை அரங்கோடு விட்டுவிட்டேன். எனவே இக்கடிதம் பெற்ற உடன், எனதருமைக் குடையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தெரியாமல் உங்கள் தியேட்டருக்கு வந்து தொலைத்த,

அபாக்கியவதி
ஜே. தனுஜா.

குறிப்பு: அவரவர்கள் சகா, ஓகா என்று தங்கள் தியேட்டருக்குப் பெயர் வைக்கிறார்கள். நீங்கள் என்னவோ 'ஔவையார்' என்று பெயர் வைத்திருக்கிறீர்களே? ஔவையார் ஏதாவது உங்களுக்குச் சொந்தமா?

பின்குறிப்பு: தியேட்டருக்கு 'ஔவையார்' என்று பெயர் வைத்திருக்கிறீர்கள். நிச்சயமாக உங்கள் பெயரும் 'அதியமான்' என்பதாகத்தான் இருக்குமென்று நானே யூகித்துக் கொண்டேன்.

2

பேபி செல்வி திருமதி, தனுஜாவுக்கு.

பதில் வணக்கங்கள். ஸ்டாம்ப் ஒட்டாத தங்கள் கடிதம் ரெஜிஸ்தர் தபால் போலக் கிடைத்தது. எங்கள் தியேட்டருக்கு 'ஔவையார்' என்று பெயர் வைத்ததற்குச் சிறப்பான காரணம் ஒன்று உண்டு. வறுமையில் வாடிய என் அப்பாவின் அப்பா 'ஔவையார்' என்ற ஆங்கிலப் படத்தின் பிரதி ஒன்றை வாங்கிப் பை தைத்துக் கள்ள மார்க்கெட்டில் விற்று அதன் மூலம் பணக்காரர் ஆனாராம். பெயர் வைத்த காரணம் தெரிகிறதா? என் அப்பாவின் பெயர் தகடூரான். அம்மாவின் பெயர் நெல்லிக்கனி.

எங்கள் தியேட்டரின் வசதிகளைப் பாராட்டியதற்கு நன்றி. உங்களைப் போன்ற ஜிழங்கள் கை, கால்களை நீட்டிப் படுத்துக் கொண்டு வசதியாகப் பார்ப்பதற்காகவே நவீன முறையில் எங்கள் தியேட்டரைக் கட்டி இருக்கிறோம். என்னவோ குடையைக் காணோமென்று சொல்லி யிருந்தீர்கள். உங்கள் கடிதத்தில் அதைப் படித்த உடனே தியேட்டர் உள்ளே சென்று தேடிப் பார்த்தேன். கிடைக்கவில்லை. ஆமாம், தியேட்டருக்கு எதற்குக் குடை எடுத்து வந்தீர்கள்? சினிமாவில் மழைபெய்யும் காட்சிகூட எதுவும் இல்லையே?

வருத்தத்துடன்
சுப்ரபாதம்.

குறிப்பு: என் பெயர் சுப்ரபாதம். எனக்கொரு திருமணமானால் எனக்கொரு மகன் பிறந்தால் அவனுக்கு நீங்கள் சிபாரிசு செய்த 'அதியமான்' என்ற பெயரையே வைக்கிறேன்!

3

மிஸ்டர் சுப்ரபாதம்!

உமக்கு மண்டையில் ஏதாவது மசாலா இருக்கிறதா? நான்கு நாட்களுக்கு முன்னால்

தொலைந்துபோன குடையை நேற்று என் கடிதத்தைப் பார்த்த உடனே போய்த் தியேட்டரில் தேடினால் கிடைக்குமா? நீரும் உம் அறிவும்! 'எதற்குக் குடையை எடுத்து வந்தீர்கள்?' என்று கேள்வி வேறு. சிறுமழை பெய்தால் கூட உங்கள் தியேட்டர் ஒழுகுவதாகக் கேள்விப்பட்டேன். குடையைப் பிடித்துக் கொண்டாவது படத்தைப் பார்க்கலாமே என்றுதான் குடையுடன் வந்தேன். புரிகிறதா?

அந்தக் குடை பக்கத்து பங்களா தாத்தா கம் மாமா — உடையது. குடையைத் திருப்பித் தரா விட்டால் என்னை வறுத்து எடுத்துவிடுவார். தயவு செய்து குடையைக் கண்டு பிடித்து அனுப்பி வைக்கவும். நான் உங்களைத் தான் நம்பியிருக்கிறேன். குடை விட்டுவிடாதீர்கள்.

குறிப்பு: சுப்ரபாதம் ஒரு பெயரா?

பின்குறிப்பு: குடையைப் பற்றி நினைத்துக் கொண்டே இருந்ததில் ஸ்டாம்ப் ஒட்ட மறந்து விட்டேன். மன்னிக்கவும்.

4

டியர் தனுஜா!

முடியாது. உங்கள் கடிதத்துக்கு அபராதமாக மத்திய அரசுக்கு நான் செலுத்திய நாற்பது புதிய காசுகளைக் கொடுத்தால்தான் மறப்பேன். மன்னிப்பேன். இல்லையென்றால் இல்லை.

யார் அந்தத் தாத்தா கம் மாமா? அவருக்குச் சுமாராக என்ன வயது இருக்கும்? ஒரு தொண்ணூறு இருக்குமா? அப்படியென்றால் சந்தோஷம். என் வயது 27. குடை வேண்டுமென்று அந்தக் கிழடு உங்களைக் குடைந்தெடுத்தால் பேசாமல் ஜனதாக் குடை ஒன்று வாங்கிக் கொடுத்து விடுங்கள். தீர்ந்தது பிரச்னை! இதற்குப் போய் இப்படி அடித்துக் கொள்கிறீர்களே?

பொதுவாக எங்கள் தியேட்டரில் கடலைப் பொட்டு, பழத்தோல் இவைகளைத் தான் விட்டுவிட்டுச் செல்வார்கள். குடையை விட்டுவிட்டுப் போனவரை இன்றுதான் .. ஊம் ... பார்க்கவில்லை.

சுப்ரபாதம்.

குறிப்பு: நான் சனிக்கிழமை காலை பிறக்கும் போது ரேடியோவில் சுப்ரபாதம் ஒலி பரப்பாகிக் கொண்டிருந்தது. பேசாமல் அந்தப் பெயரையே வைத்து விட்டார்கள்.

பின்குறிப்பு: நல்லவேளை, இம்முறையாவது ஸ்டாம்ப் ஒட்டியிருந்தீர்களே? சந்தோஷம்.

5

ஹலோ பாதம்!

அந்தக் கிழட்டுத் தாத்தாவிடம், 'வேறு குடை வாங்கித் தருகிறேன்' என்று சொல்லிப் பார்த்து விட்டேன். அசைவதாகத் தெரியவில்லை. அவருக்கு அதே கிழிந்த குடைதான் வேண்டுமாம். ஏனென்றால் அது அவருக்கு ஆகிவந்த ராசிக் குடையாம்! அந்தக் குடை வாங்கிய பிறகுதான் அவர் வாழ்க்கையில் உழைக்காமலேயே முன்னேறினாராம். அதனால் பிடிவாதமாக இருக்கிறார். தயவுசெய்து அந்தக் கிழவரிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்.

கண்ணீருடன்,
ஜே. தனுஜா.

குறிப்பு: நல்லவேளை, இப்பொழுதெல்லாம் நொடிக்கு நூறுதடவை ரேடியோவில் 'வருந்துகிறோம், வருந்துகிறோம்' என்று சொல்வது பாஷனாகி விட்டது. அப்படிச் சொன்ன நேரத்தில் நீங்கள் பிறந்திருந்தால், உங்களுக்கு என்ன பெயர் வைத்திருப்பார்களோ?

பின்குறிப்பு: ஒன்றுமில்லை.

6

கலங்கும் தனுஜாவுக்கு,

அன்பன் சு. பாதம் எழுதும் கடிதம். உன் நிலையைக் காணும் போது என் நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கிறது. ஓ... கடவுளே! தொலைந்து விட்ட குடைக்கு என்ன செய்வதாம்? அந்தக் குடை எங்கே இருக்கிறதென்று அந்தக் கிழம் சொன்னாலாவது, போய் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்து விடலாம். அதுவும் கிடையாது. வேண்டுமென்றால் அந்தக் கிழவரைப் பெஞ்சு கோர்ட்டில் கேஸ் போடச் சொல். ஒரு கை பார்த்து விடுவோம். ஒழிக கிழவர்கள்! ஒழிக குடைகள்!

நறநறநறநற
சுப்ரபாதம்.

குறிப்பு: இத்துடன் ஒரு கர்சீப் அனுப்பியுள்ளேன். கண்ணைத் துடைத்துக் கொள்ளவும்.

பின்குறிப்பு: நீயே ஏதாவது எழுதிக் கொள்.



இலதோஷம்!

'மகாத்மா காந்திக்கும், வின்ஸ்டன் சர்ச்சிலுக்கும் பெர்னார்ட் ஷாவுக்கும், முஸோலினிக்கும், எனக்கும் பொதுவாக இருப்பது இலதோஷமாகும். வித்தியாசம் என்னவென்றால், அவர்களுக்கு இலதோஷம் வந்தால் உடனே அந்தச் செய்தியானது தரைத் தந்தி, கடல் தந்தி, ஆகாயத் தந்திகளின் மூலம் உலகெங்கும் பரவுகிறது. ஆனால், என்னுடைய இலதோஷத்தை பற்றி நானே இப்போது உலகுக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது.'

—அமரர் கல்கி.
'ஓ! மாம்பழமே!' என்ற நூலில்.
எம். எஸ். ஜெயராமன்.

7

அன்புள்ள சுப்ரபாதத்துக்கு,

நேற்று அந்தப் பெரியவர் வந்திருந்தார். கை இடுக்கில் ஏதோ பேப்பர் கட்டு இருந்தது. (அது என்னவென்று பின்னால் சொல்கிறேன்). என் அம்மா அப்பாவிடம் தம் கடந்த கால வாழ்க்கையைப் பற்றிச் சொன்னார். அவர் ஒரு சென்டிமென்டல் டைப்! அவருக்குப் பிரியமான ஒன்று ஏதாவது காணாமல் போய் விட்டால் குடும்பத்துக்குக் கஷ்டம் வருமாம். சில வருஷத்திற்கு முன்பு ஒருமுறை இப்படித் தான் அவருடைய நாய் தொலைந்து விட்டதாம். அடுத்த வாரமே வியாபாரத்தில் பெருத்த நஷ்டம். அப்புறம் அவர் கனவில் சாமியார் ஒருவர் தோன்றி, 'நீ சுபகாரியம் ஒன்று செய்தால் கஷ்டம் தொடராது' என்று சொல்ல, உடனே தம் மகனுக்குத் திருமணம் செய்து வைத்தாராம். அப்புறம் லாபம், லாபம், லாபமாம். இப்போது பிரியமான குடை தொலைந்திருப்பதால், மேலும் நஷ்டம் ஏற்படுவதற்குள் தம் பேரனுக்குத் திருமணம் செய்து வைத்து விடலாமென்று நினைத்திருக்கிறாராம். அதனால் என்னைத் தம் பேரனுக்குப் பெண் பார்க்க வந்திருக்கிறாராம். அவர் அப்படிச் சொன்னதும் என் பெற்றோருக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. 'சரி' என்று சொல்லி என் போட்டோவை வேறு அந்தக் கிழத்திடம் கொடுத்து அனுப்பி யிருக்கிறார்கள்... எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தயவு செய்து என்னை... என்னை... விக்... விக்... விக்...

விசும்பலுடன்
தனுஜா.

குறிப்பு: அவர் கையில் வைத்திருந்தது ஜாதகக் கட்டு.

8

கண்ணே தனுஜா!

உன் நிலைகண்டு துடிக்கிறேன். நான் என்ன செய்யட்டும் அன்பே! 'திருமணம் செய்து வைத்தால் குடும்பத்தில் கஷ்டம் தீருமாம்.' யார் சொன்னது அந்தப் பெரியவருக்கு? கஷ்டமே அங்கேதான் ஆரம்பம்!

இதோ என் நிலை: நேற்று என் அப்பா என்னிடம் ஒரு பெண்ணின் போட்டோவைக் கொடுத்துப் பார்க்கச் சொன்னார். பெண் மூக்கும் முழியுமாக அப்படியொரு லட்சணம்! அப்படியொரு அழகு! அவளைத்தான் நான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமாம். அய்யகோ! தனுஜா, அது நீயாக இல்லாமல் போய் விட்டாயே? துடிக்கிறேன். விதி நம்மைப் பிரித்து விட்டது.

இத்துடன் இனி என்னை ஆளப் போகிறவளின் புகைப்படத்தை அனுப்பியிருக்கிறேன். பார்க்கவும். 'துன்பம் வரும் போது நகுக' என்று கம்பர் சொல்லியிருக்கிறார். ஆகவே... ஹ... ஹ... ஹா... ஹா...

தேவ தாஸின் நேர் வாரிசு
சுப்ரபாதம்.

குறிப்பு: சத்தியமாக ஒன்றுமில்லை.

9

ஹாய் சுப்!

உங்கள் கடிதத்துடன் தாங்கள் அனுப்பியிருந்த பெண்ணின் புகைப்படத்தைப் பார்த்தேன். என்ன? இந்தப் பெண்ணையா உங்களுக்குப் பார்த்திருக்கிறார்கள்? உண்மையில் நீங்கள் அதிர்ஷ்டசாலிதான்.

இதோ எனக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளைப் பையனின் புகைப்படம்! எப்படி இருக்கிறார்?

சந்தோஷத்துடன்
தனுஜா.

10

ஹாய் தனு!

இது என்ன? இந்தப் புகைப்படத்தில் இருப்பவன் என்னைப் போலவே இருக்கிறான்! அப்படியென்றால், உனக்குப் பார்த்திருக்கும் பையன் நானா? அப்படியென்றால் அந்தக் குடைக்குச் சொந்தக்காரர் என் தாத்தாவா? நாங்கள் கீழ்ப்பாக்கத்தில் இருக்கிறோம். என் தாத்தா மட்டும் தம் மனைவியுடன் மேல் பாக்கத்தில் தனியாகக் குடியிருக்கிறார். இப்போதுதான் உண்மை தெரிகிறது. ஆஹா! வாழ்க தாத்தா! வாழ்க குடை!

(விளக்கை) அணைக்கத் துடிக்கும்,
சுப்ரபாதம்.

குறிப்பு: இன்று முதல் 'ஔவையார்' தியேட்டரில் 'குங்குமம்.'



கனவா நிஜமா? 12
கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்
மன்னர் பராந்தகர் வரும் பொருள் உரைக்கும் நிமித்திகன் வார்த்தைக்கு மதிப்பளித்து அந்தப் பாறையைக் கொண்டு வந்து மாயாபுரி நகரின் மத்தியிலே வைத்தார்.
நகரின் நாற்சந்தியிலே நிறுத்தியுள்ள இந்தப் பாறை என் சந்ததியினர் நீதிநேர்மையுடன் ஆட்சி புரிய வேண்டுமென்பதை நினைவு படுத்திக் கொண்டிருக்கட்டும். நிமித்திகனின் வாக்குப் பொய்த்துப் போகுமாறு வாழட்டும். யாரால் — என்று — இப்பாறை இரண்டாகப் பிளக்கப் படுகிறதோ அன்று அவர் இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கட்டும்.
பாறையின் வரலாற்றைக் கேட்ட அந்த அந்நியன் அதையே வெறித்துப்பார்த்தபடி நின்றான்.
பெரிய சும்மட்டி கொண்டே பிளக்க முடியாது இதை வெறும் கையினால் ஒரே வீச்சில் யாரால் உடைக்க முடியும்? முடியாத செயல் இது.
கதை கூறியவன் தன் கருத்தைக் கூறி முடிக்கு முன் அந்தப் புதியவன் தன் கையை உயர்த்தினான். உத்வேகத்துடன்...
ஆ ஹ... ஹ்.. ஹா!
ஹா... ஹ...ஹா!
அதிசயம், ஆச்சரியம்...! நடக்கக் கூடாதது நடந்து விட்டது...! பாறை இரண்டாகி விட்டதே!



நகரின் சந்தியில் கூடிய மக்கள் புதியவன் நிகழ்த்திய அற்புதத்தைக் கண்டு பிரமிப்படைந்து, அவன் முன் மண்டியிட்டனர்.
திரித்திரனின் வாக்குப் பலித்து விட்டது.
மாயாபுரி சாம்ராஜ்யத்தின் புதிய சக்ரவர்த்தியே, வணக்கம்!
மக்களின் பேச்சும், பாராட்டும், மரியாதையும் புதியவனின் முகத்தில் புன்னகையை மலரச் செய்தது.
மாயாபுரி சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தி...ம் ...! சுவையான விஷயம்தான்!
மன்னர் வஜ்ரபாகுவிற்குச் செய்தி பறந்தது.
மன்னர் பிரானே! நம் நகரின் நடுவேயுள்ள மாயப்பாறையை எங்கிருந்தோ வந்துள்ள ஒருவன் வெறும் கையினால் ஒரே வீச்சில் இரண்டாகப் பிளந்து விட்டான்.
என்ன உளறுகிறாய்?...
நம்ப முடியாதது, நடக்கக் கூடாதது நடந்து விட்டது என்று மன்னரை நம்பவைப்பது பெரும்பாடாகி விட்டது அந்த வீரனுக்கு.
இனி என்ன செய்ய வேண்டுமென்பதைக் கூறுங்கள் அரசே!
மக்கள் பிரதிநிதிகளான ஆட்சிக் குழு அங்கத்தினர்களைக் கொண்டு அந்த அந்நியனை விசாரிக்கச் சொல்-யார் அவன், எங்கிருந்து வருகிறான் என்று...
சண்டன், முண்டன் என்ற இரு ஆட்சிக்குழு உறுப்பினர்கள் அந்தப் புதியவனை விசாரிக்கின்றனர்.
வாலிபனே, நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? எந்த நாட்டைச் சேர்ந்தவன் நீ...?
உன் தொழில் என்ன?
தொடரும்



Shilpi DM 35A/79 Tam

பெங்களூரின் விஞ்ஞான கேந்திரத்துக்கு காந்தியும் ஸி.ஆரும் சென்றனர். அதனை வேடிக்கையாக ஸி. ஆர்., ''சைத்தான்களின் பட்டறை'' என்று வர்ணித்தார்.

விஞ்ஞானிகளிடம் மகாத்மா சொன்னார்: ''உங்களுடைய கண்டுபிடிப்புகளெல்லாம் முடிவில் ஏழைகளின் நல் வாழ்வுக்கு உதவுவனவாய் இருக்க வேண்டும். இல்லையெனில் ராஜகோபாலாச்சாரி வேடிக்கையாகக் கூறியது உண்மையாகிவிடும்.''

மகாத்மா மைசூர் ராஜ்யத்தில் தங்கி இருந்தபோது அதன் மன்னர் கிருஷ்ணராஜ உடையார் தமது ஆட்சியின் வெள்ளி விழாவைக் கொண்டாடினார். அவர் காந்திக்குத் தம்மால் இயன்றதையெல்லாம் செய்ய ஆசைப்பட்டார். இருப்பினும் காந்தி பிரிட்டிஷ் ஆட்சியின் எதிரியாகையால் பின் விளைவுகளை எண்ணிப் பார்த்த மகாராஜா, தாமே முன்னின்று எதையும் செய்யாமல் பிறரை ஏவி நடத்திக் கொண்டார். அவர் மகாத்மாவைச் சந்திக்கவில்லை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கதரையும் சந்தேகித்தது, காந்தியையும் சந்தேகித்தது. சென்னை அரசு, தனது ஊழியர்கள் மகாத்மாவின் கதர் நிதிக்கு நன்கொடை தரக்கூடாது என்று அப்போதுதான் உத்தரவு போட்டிருந்தது. இருப்பினும் மகாராஜா வந்தது வரட்டும் என்று, கதர் கேந்திரம் திறக்க அனுமதி தந்து கையெழுத்துப் போட்டார்.

அது மட்டுமல்ல, மைசூர் ஆறுபேரை ஸி. ஆரின் ஆசிரமத்துக்குப் பயிற்சி பெற்று வர அனுப்பியது. மைசூர் ராஜ்யத்தின் தொழில் இலாக்கா 1500 சர்க்காக்களை உருவாக்கியது. நவம்பர் முதல் தேதி மைசூர் நகரிலிருந்து சற்றுத் தூரத்தில் இருக்கும் படன்வல் என்ற கிராமத்தில் ஒரு கேந்திரம் ஆரம்பிக்கப்பட்டது.

படன்வல் கிராமத்தைச் சுற்றிலுமிருந்த பகுதி வறட்சியாக இருந்தது. விவசாயத்தைத் தவிர வருவாய்க்கு வேறு ஒரு மார்க்கமும் மக்களுக்குத் தேவைப்பட்டது. அந்தப் பகுதி பெண்களால் நூல் நூற்க முடியும். ஆக, புதுப்பாளையம் சம்பவங்களே இங்கே மறுபடியும் நிகழ்ந்தன. மைசூரில் கதர் உற்பத்திக்குப் பிரகாசமான ஓர் ஆரம்பம் ஏற்பட்டது. இந்த ராஜ்யத்தின் முன் உதாரணத்தை ஓராண்டுக்குப் பிறகு ஹைதராபாத்தும் பின்பற்றியது.

27. "என் வாரிசாக விளங்கக் கூடிய ஒரே மனிதர்!"

ஜூலை மத்தியில் சுற்றுப் பயணத்தை மீண்டும் தொடரும் அளவுக்குத் தம் உடல் ஆரோக்கியம் பெற்று விட்டதாகக் காந்தி எண்ணினார். இது வரை சிறை அதிகாரி போலப் பணியாற்றி வந்த ஸி. ஆர்., இப்போது, காந்தியின் சுற்றுப் பயணத்தைத் திட்டமிட்டு நிர்வகிப்பவராகவும் பொதுக் கூட்டங்களிலும் தனி நபர்களிடமும் அவர் பேசும் போது மொழிபெயர்ப்பாளராகவும் சில சமயங்களில் காந்தியின் வருகையை எடுத்துரைக்கும் அறிவிப்பாளராகவும் மாறினார்.

ஸி. ஆரின் ஆதரவுடன் மகாத்மா நாலு மாதங்கள் தென் இந்தியாவின் பெரும் பகுதியிலும் இலங்கையிலும் சுற்றுப் பயணம் செய்தார். தங்கி நின்ற இடங்களிலெல்லாம் கதரின் புனிதம் பற்றிப் பிரசாரம் செய்தார். பேரார்வத்துடன் திரண்ட பெருங் கூட்டத்தினர் நல்லறிவு பெற்று உயர்ந்தனர்.

சில சமயங்களில் அவர்கள் முரட்டுத்தனமாகவும் நடந்து கொண்டனர். குடியாத்தத்தில் ஒரு பெருங் கூட்டமாக மகாத்மா தங்கியிருந்த வீட்டுக்குள் நுழைந்து, காற்று, வெளிச்சம் எதுவும் புகாதபடிக்குத் தடுத்து விட்டனர். ஸி. ஆர். ஆனமட்டும் கத்திப் பார்த்தும் பயனில்லை. கடைசியில் பொறுமை இழந்து ஸி. ஆர்., மிரட்டினார்: ''மகாத்மாவின் சுற்றுப் பயணத் திட்டத்தில் சில இடங்களை நான் ரத்து செய்துவிட வேண்டியது தான்!''



ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

இவை எல்லாம் ஒரு புறமிருப்பினும் மனம் நன்றியறிதலால் நெகிழ்ந்த தருணங்களும் பல உண்டு. உடுக்க ஒற்றைத் துணிக் கூட இல்லாத பரம ஏழைகளான திண்டாதார், ஆரணியில் ஸி. ஆரிடம் ஓர் ஐந்து ரூபாய் நோட்டைக் கதர் நிதிக்காகத் தந்தனர். சென்னையில் சக்கிலியர்கள் சிலர், காந்தி பிய்ந்து போன செருப்பை அணிந்திருப்பதைப் பார்த்து விட்டு அவருக்குப் புதிதாக ஒரு ஜதை தயாரித்துத் தந்தனர். மகாத்மாவும் அவரது மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றிய ஸி. ஆரும் சக்கிலியர் வாழ்ந்த சேரிக்கு விஜயம் செய்தனர்.

தாம் கண்ட தீமைகளையெல்லாம் எதிர்த்து காந்தி வெளிப்படையாகப் பேசினார். தேவதாசி சம்பிரதாயத்தைக் கண்டித்தார். ''இளம் வயதிலேயே அவமானம் மிக்க ஒரு வாழ்க்கைக்குப் பெண்களை உள்ளாக்குவது — அதையும் மதத்தின் பெயரால்

செய்வது — அதர்மமான அருவருக்கத் தக்க பழக்கம்'' என்றார். ''இந்த நாட்டில் பல கோயில்கள் தாசி வீடுகளினின்றும் வேறுபட்டதாக இல்லை.''

தேவதாசி முறை பற்றி வி. ஆரின் கருத்துக்கள் காந்திஜியின் எண்ணங்களுடன் ஒத்துப் போயின. செட்டி நாட்டுக்குச் சென்றிருந்த போதும் காந்தி வெளிப்படையாகப் பல விஷயங்களைச் சொன்னார். ஆனால் காந்திக்குப் பதில் பிரதம விருந்தினராக வி. ஆர். இருந்திருந்தால், விருந்தோம்பியவர்களிடம் அப்படிப் பேசியிருப்பாரா என்பது சந்தேகமே.

தமது சொற்பொழிவுகளின் போது காந்தி, பொருத்தமில்லாத பெரிய மாளிகைகள் ஒழுங்கின்றிக் கண்ட இடங்களில் கட்டப் பட்டிருப்பதாகவும், சாலைகளே சரியாக அமையாத இடங்களில் விலையுயர்ந்த கார்கள் இருப்பதாகவும், உட்கார்ந்து மூச்சு விடக் கூட இடமில்லாத அளவுக்கு வீடுகளில் வேலைப்பாடு மிக்க நாற்காலிகளும் மேஜைகளும் இதர மரச் சாமான்களும் அடைந்து கிடப்பதாகவும், மிகச் சிறந்த வீடுகளில்கூட குடிநீர் வசதி சரியாகச் செய்யப்படாதபோது ஏராளமான பொருட் செலவில் கோயில்கள் எழுப்பப்படுவதாகவும் அப்பட்டமாகக் குறை கூறிப் பேசினார்.

மகாத்மா இடித்துரைத்ததை யெல்லாம் கேட்டுக் கொண்டு செட்டியார்கள் பேசாமல் இருக்கவில்லை. மகாத்மாவின் திருவோட்டைத் தங்கத்தாலும் வெள்ளியாலும் நிரப்பினார்கள். ''உங்கள் மனைவி மார்களை உங்கள் வாழ்க்கையின் உண்மையான பங்காளிகளாக்கிக் கொள்ளுங்கள், மலேஷியாவுக்கும் பர்மாவுக்கும் பணம் சம்பாதிக்கச் செல்லும் போது அவர்களையும் பின்னோடு அழைத்துப் போங்கள்'' என்றார் காந்தி. இதைக் கேட்டுப் பெண்மணிகள் மகிழ்ச்சியால் முகம் மலர்ந்தனர். வெளிப்படையாகப் பேசிய அந்த விருந்தாளி விடைபெற்ற போது ரத்த பாசத்துடன் ஒரு சகோதரனை வழியனுப்புவது போல் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் உணர்ந்தனர்.

தெற்கே மகாத்மாவைக் காண வந்த சிலர் வி. ஆரைப் பற்றிக் குறை கூறினர். ஒரு பிராமணனை நம்பக் கூடாது என்பது தான் அவர்களுடைய வாதம். காந்தியின் பதில் ஐயம் திரிபற அமைந்திருந்தது: ''எனது வாரிசாக விளங்கக் கூடிய ஒரே மனிதர் வி. ஆர்தான்'' என்று அவர் காரைக்குடியில் கூறினார்.

தமிழ்நாட்டில் சுற்றுப் பயணத்தின் போது பிராமணர் — பிராமணரல்லதார் பிரச்னை மகாத்மாவையும் வி. ஆரையும் விடாமல் தொடர்ந்து வந்தது. கதர் பிரசாரத்துக்கு உருவான அமைப்பில் பிராமணர்களே ஏக போக்கியம் அனுபவிப்பதாகச் சிலர் குற்றம் சுமத்தினார்கள். அப்படியல்ல, 'பிராமணர் அல்லாதார் பலரும் முக்கியமான பதவிகளை அந்த அமைப்பில் வகித்தார்கள் என்று மகாத்மா சுட்டிக் காட்டினார். அதோடு, பிராமணர்கள் கதருக்கு உதவுவதன் மூலம் பிராமணரல்லாதாரில் பரம ஏழைகளுக்காகத்தான் பணியாற்றுகிறார்கள் என்றும் எடுத்துக் காட்டினார்.

இது தவிர பொதுப் படையான இந்தப் பிரச்னை குறித்து காந்தி அடிப்படையான அறிவுரை வழங்கினார். ஞானத்தின் உறைவிடமாக இருப்பவர்களும் யாசகத்தில் வாழவேண்டும் என்ற மதக் கோட்பாட்டினை உடையவர்களுமான பிராமணர்களிடம், ''பிராமணரல்லாதார் எதையெல்லாம் விரும்பிக் கேட்கிறார்களோ அதையெல்லாம் விட்டுக் கொடுத்து விடுங்கள், பாக்கி இருப்பதை வைத்துத் திருப்தி அடையுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்.

பிராமணர் அல்லாதாரிடம், அவர்கள் தாம் பெரும்பான்மையினர் என்பதையும் செல்வந்தர்கள் என்பதையும் மகாத்மா நினைவூட்டினார். ''புதிதாக பிராமணர்கள் என்ற தீண்டாதார் வகுப்பினைத் தோற்றுவிக்காதீர்கள்'' என்றார். இவற்றை, சிறிதும் குறையற்ற, நிறைவான ஆலோசனைகள் என மகாத்மாவே வர்ணிக்கவும் செய்தார். ஆனால் இந்தக் கருத்துக்களை லட்சியம் செய்வாரில்லை.

இதற்கிடையில் மகாத்மாவோ வி. ஆரோ சற்றும் எதிர்பாராத ஒரு விஷயம் உருவாயிற்று. தேவதாஸும் லக்ஷ்மியும் காதல் வயப்பட்டு, திருமணம் செய்து கொள்ள விரும்பினர். பெங்களூரில் தேவதாஸ் வி. ஆரிடம் ஒரு கடிதம் தந்தார். அதில் அவரது குமாரியைத் தமக்குத் திருமணம் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

வி. ஆர். காந்தியிடம் விஷயத்தைச் சொன்னார். வியப்படைந்திருந்த தகப்பனார்கள் இருவரும் இதனை விவாதித்தனர். இது சரியா என்பது பற்றி அவர்களால் நிச்சயமான ஒரு முடிவுக்கு வர இயலவில்லை. 'இது மெய்யான காதலா, அல்லது தாற்காலிக மோகமா?'

(தொடரும்)

தமிழாக்கம்: கெ. ராஜேந்திரன்

மண்ணு பொன்னு !

டில்லியில் கரோல்பாக்குக்கு அருகில் உள்ள 'ராஜேந்திரா பிளேஸ்' என்ற பகுதியில் வீட்டுமனை ஒன்று ஏலத்துக்கு விடப்பட்டது. மூன்று ரெவுண்டிற்கும் குறைவாக இருந்த அந்த மனை என்ன விலைக்குப் போயிற்று தெரியுமா? 130 லட்ச ரூபாய்! —கமல்

ஆதாரம்: ஹிந்துஸ்தான் டைம்ஸ்.



பரம்பரை எழிலுக்கு



பின்னி பட்டு ரகங்கள்

அசல் பட்டுப் புடவைகள், வேஷ்டிகள்,
அங்க வஸ்திரங்கள்

மற்றும் ஜார்ஜெட்டுகள், ஷிஃப்பான்கள்
சினுன்கள், ஸாஃப்ட் ஸில்குகள்,
ஸொனுடா ஷாட் ஸில்குகள், டிரஸ்
துணிகள், ஸ்பன், ஃபிலேச்சர் ஸில்க்
ஷர்டிங்குகள் முதலியன.


OBM 3665 TM

கோலாலம்பூருக்குப் போகிறவர்கள், அசைவம் உண்பவர்களாக இருந்து, சீன உணவுகளையும் விரும்புகிறவர்களாய் இருந்து, கேம்பல் தெருவுக்கும் போய் விட்டால், அப்புறம் கொண்டாட்டம் தான்.

கே. எல்லில் தடுக்கி விழுந்தால் சாப்பாட்டுக் கடைகள் இருந்தாலும், கேம்பல் தெரு உணவு விடுதிகளுக்குத் தனி விசேஷம் உண்டு.

நகரின் மையப் பகுதியில் இருக்கும் கேம்பல் தெருவில் இரண்டு பக்கமும் 'பங்' கடைகளை ஒத்த சீன உணவு விடுதிகள் அடுத்தடுத்து, ஏராளமாய் உள்ளன. மாலை ஏழு அல்லது எட்டு மணிக்குத் திறக்கும் இவ்விடுதிகள் அத்தனையும் விடிய விடிய வியாபாரம் செய்த பின்பு, காலை ஐந்து மணி அளவில் மூடப்பட்டு விடுகின்றன. பகல் முழுவதும் கடைச் சொந்தக்காரர்கள் மேஜை நாற்காலிகளை ஒன்றின் மேல் ஒன்றாய் அடுக்கிவிட்டு, அதன் முதுகிலேயே தாங்களும் படுத்துத் தூங்கி விடுகிறார்கள்.

அன்று இரவு கேம்பல் தெருவுக்கு அருகில் வண்டியை நிறுத்திவிட்டுச் சதுக்கத்துக்குள் நடந்து போனோம்.



மனம் கவர்ந்த மலேஷியா-6

இரண்டு பக்கமும் கடைகள் பார்டர் கட்ட, நடு மைதானத்தில் ஓர் அங்குலத்தை விணுக்காமல் இடித்துப் பிடித்துக் கொண்டு மேஜை நாற்காலிகள்.

விடுதிகளின் அமைப்பை ஊன்றிக் கவனித்தேன். ஒவ்வொரு கடை வாசலிலும் சின்ன மேடை, அதன் மேல் அடுப்புக்கள், மேலே தோரணமாய்த் தொங்கிய உரித்த மாமிச வகைகள், மேடைக்கு அடியில் இருந்த கண்ணாடிப் பெட்டிகளில் ராட்சத நண்டுகள், நத்தைகள், இன்னும் என்னென்னவோ — எல்லாம் உயிரோடுதான்.

சிவப்பு சிவப்பாய் மாமிசக் குவியல்கள், நீளமாய், குட்டையாய், பருமனாய், அகண்டதாய் விரிந்ததாய்...

''நீளமாய்த் தொங்குவதுதான் பாம்புகளா?'' என்றேன் குமணனிடம். அவர் சர்வ் செய்த பையனிடம் விசாரித்தார். ''இங்கு பாம்பு வகைகள் இல்லையாம். சிங்கப்பூரில் நிறையப் பார்ப்பீர்கள்'' என்றார்.

கண்ணாடிப் பெட்டிக்குள் ஊரும் நண்டு இனங்களைப் பார்த்தால் பாவமாக இருந்தது. பெரிசாய், சின்னதாய்க் கொடுக்குகளை நீட்டிக் கொண்டதாய், மடக்கிக் கொண்டதாய்... தங்களுடைய நித்ய கண்டம் பூர்ணாயுசுத் தன்மையை உணராதவைகளாய்...

காலியாய் இருந்த மேஜை நாற்காலிகளைப் பிரும்மப் பிரயத்தனம் செய்து கண்டு பிடித்துச் சென்று உட்கார்ந்தோம்.

சுற்றிலும் ஜகஜகவென்று ஜனங்கள். 'ஹோ' என்ற பேச்சுச் சந்தடி. தட்டுகள் கிண்ணங்கள் மோதும் ஒலிகள் —

அமர்ந்த ஒரு நிமிஷத்துக்கெல்லாம் சப்ளைப் பையன் வந்தான். யார் யாருக்கு என்ன பதார்த்தம் வேண்டுமோ அதன்படி குமணன் ஆர்டர் செய்தார். வாயிலே நுழையாத பெயர்கள்.

''நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்?'' குமணன் என்னைக் கேட்டதும் நான் ஒன்றுமே வேண்டாம். 'ஆளை விடுங்கள்' என்று தலையை ஆட்டினேன்.

''உங்களை மட்டும் விட்டுவிட்டு நாங்கள் உண்பது மரியாதை இல்லை. வெறும் வெஜிடபிள் ஸாலட் மட்டுமாவது சாப்பிடுங்கள்.''

''ம்ஹூம்! எனக்கு வேண்டாம்.'' —

''சரி... ஐஸ் கச்சங் சாப்பிட்டுப் பாருங்கள்.''

''அது என்ன ஐஸ் கச்சங்?''

''வெறும் ஐஸ் கிரீம்—''

''நிஜமாய்?''

''நிஜம்.''

நான் சம்மதிக்க ஐஸ் கச்சங் ஒன்றுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டது.

''சமைக்கும் இடங்களுக்குச் சென்று எப்படித் தயாரிக்கிறார்கள் என்று பார்க்கலாமா?'' என்று நான் கேட்கவும் நாலு பேர்களாக எழுந்து கடைகளின் வாசலுக்குச் சென்றோம்.

எல்லாச் சாப்பாட்டுக் கடைகளும் ஒரே மாதிரியாய் இருந்தது மட்டுமில்லாமல்,





✖ சீன உணவு விடுதியின் தோற்றம்
✖ உணவு தயாராகிறது
✖ சாப்ஸ்டிக்ஸ் வைத்துக்கொண்டு குருகை பார்க்கலாம்



சிவசங்கரி

சொந்தக்காரர்களும் ஒரே அச்சில் அமுக்கி எடுத்த மாதிரித் தெரிந்தார்கள்.

கட்டை குட்டை தேகம், வெப்புத் தோல், கறுப்புத் தலைமுடி, கீறிவிட்ட கண்கள், சிரிப்பைத் தயாராய் வைத்திருக்கும் வாய்.

கிட்டத்தில் நின்று ஒரு சைனாக்காரர் சமைப்பதைக் கவனித்தேன்.

ஐந்தடிக்கு ஒரு சமையல் மேடை. பெரிய... அடுப்புக்கள், வாணலிகள்.

தடிமனாய்ப் பிசைந்து வைத்திருந்த மாவைத் துண்டு துண்டுகளாய் நறுக்கி வாணலியில் போட்டார். கொஞ்சம் மீன் துண்டுகள், கொஞ்சம் பன்றி மாமிசத் துண்டுகள், தக்காளி, பச்சை மிளகாய், செலரி, லாஸ் இலைகளைச் சேர்த்துக் கறுப்பாய் இருந்த எண்ணெய் விட்டுப் பிசக்கும் பிடித்து அமுக்காய்த் தோற்ற மளித்த ஜல்லிக் கரண்டியால் வதக்கி, பீங்கான் தட்டில் அம்பார மாய்க் கொட்டிக் கொடுத்தார். இதற்குக் கொயித்தியோ மீ — என்று பெயராம். பன்றி, மீனுக்குப் பதிலாய் வேறு எந்த வகை இறைச்சியும் சேர்க்கலாமாம்.

அப்பளம் மாதிரி மாவை மெல்லிசாய் இட்டார் ஒரு பெண். அதில் கொத்தின மாட்டு இறைச்சி மசாலா வைத் தாவிச் சுருணாகச் சுருட்டி, வில்லைகளாக நறுக்கினார். லேசாய் வதக்கி மண்டையில்பச்சை சிவப்பு என்று என்னென்னவோ கலர்களை ஊற்றி அலங்காரம் பண்ணி இன்னொரு தட்டில் எடுத்து வைத்தார்.

அமெரிக்கர் ஒருவர் கீழ்க் கண்டில் இருந்த பழுப்பு நண்டு ஒன்றைச் சுட்டிக் காட்ட, அதை எடுத்தார் சீனக்காரர். சதக். சில விநாடிகளில் அந்த ஜீவன் பிரேதமாகி அமெரிக்கர் ருசிக்கு ஏற்ப வதங்கத் தொடங்கியது. மிளகாய் ரஸத்தில் மிதக்கும் நண்டுகள் அங்கு பிராபல்யமான ஓர் உணவு வகையாம்.

இன்னும் வரிசையாய்ப் பாத்திரத்தில் இருந்த மீன் வகைகள், சிப்பி, நத்தைகள், சகல்கள்... என்னும் அடையாளம் கண்டு கொள்ள முடியாத ஜந்துக்கள்.

அயல் நாட்டுக்காரியான நான் தம் சமையலை நின்று கவனிப்பது அந்தச் சீனருக்கு ஏகக் குஷியைக் கொடுத்தது.

அலட்சியமாய் மாமிசங்களை எடுத்தார். வீசினார், திரும்பினார், சிரித்தார்.

இத்தனூண்டு பச்சை மிளகாய்களைக்கூட அவர் அகலமான பட்டாக் கத்தியால் வேகமாய் மயிரிழைத் துண்டுகளாய் நறுக்கிய போது அவர் விரலை அறுத்துக் கொள்ளப் போகிறாரே என்று எனக்குப் பதைப்பாக இருந்தது.

கேம்பல் தெருவில் இருந்த நாற்பதுக்கும் மேற்பட்ட சாப்பாட்டுக் கடைகள் அத்தனையிலும் நான் மேலே குறிப்பிட்ட சமையல்கள் நிமிஷத்தில் தயாராகிக் கொண்டிருந்தன.

நாற்றுக் கணக்கில் சாப்பிடக் குழுமியிருந்தவர்களைக் காட்டிலும் அசுர வேகத்தில்

சீனர்கள் விதம் விதமாய்ச் சமைத்துத் தள்ளி யது பார்க்க அதிசயமாகத்தான் இருந்தது.

எங்கள் மேஜைக்குத் திரும்பினோம். எல்லா ருக்கும் சாப்பாடு வந்து விட்டது. என் ஐஸ் கச்சங்கும் உட்கார்ந்து கொண்டிருந்தது.

பெரிய கிண்ணத்தில் உணவுப் பொருட்களை மேஜை நடுவில் வைத்து விடுகிறார்கள். சாப் பிடுபவர்கள் சின்னக் கிண்ணங்களில் தேவை யானதை எடுத்துப் போட்டுக் கொண்டு குச்சி களால் — சாப் ஸ்டிக்ஸ் — சாப்பிட வேண்டும். இரண்டு குச்சிகளை வைத்துக் கொண்டு என் கணவர் சாப்பிட முடியாமல் தவித்தது வேடிக்கையாக இருந்தது.

என் ஐஸ்க்ரீமைப் பார்த்தேன்.

உயரமான கிளாஸ். அதில் மெஜண்டா கலரில் கட்டி முட்டியாய்த் திரவம், ஸ்பூனில் ஊறிநில் கறுப்பு, மஞ்சள் உருண்டைகள்.

'ஐஸ்க்ரீமா? இதுவா?' எனக்கு ரொம்ப சந்தேகம்.

நான் விழிப்பதைப் பார்த்து மற்றவர்கள் 'இது ஐஸ்க்ரீம்தான், தைரியமாய்ச் சாப்பிட லாம்' என்று சத்தியம் பண்ணினார்கள்.

ஒரு வாய் அருந்தினேன்.

அசட்டுத் தித்திப்பு. மெல்லிசான நாற் றம். வாயில் அகப்பட்ட கறுப்பு உருண் டையைக் கடித்தேன். சொதக் கென்றது.

''ஐஸ்க்ரீமோடு இங்கு கடலை, சோளத்தை வேக வைத்துக் கலந்து கொடுப்பார்கள். கச்சங் என்றால் கடலை என்று அர்த்தம்.—''

சற்றுமுன் பார்த்த நண்டும், மீனும், ஈசல்களும் கண் முன்னேயே நின்றிருந்த தாலோ என்னவோ எல்லாரும் என்ன சமா தானம் சொல்லியும் ஒரு ஸ்பூனுக்கு மேல் என்னால் அந்தக் கச்சங்கைச் சாப்பிட முடிய வில்லை.

இரவு இரண்டு மணி ஆயிற்று. கேம்பல் தெருவை விட்டுக் கிளம்ப.

ஹோட்டலுக்குத் திரும்புகையில் இரண்டு ஆண்கள் காகிதத்தால் ஆன பெரிய காரைத் தூக்கிச் செல்வதைப் பார்த்தேன்.

''எவ்வளவு பெரிய காகிதக் கார்! இது எதற்கு?''

நான் வியந்தேன்.

சீனர்கள் இறந்து விட்டால் பணம் செல வழித்து இப்படிக் காகிதத்தில் கார் செய்து அதை எரிப்பார்களாம். செத்தவர் காரில் ஏறிக்கொண்டு சொர்க்கத்துக்குப் போவார் என்ற நம்பிக்கை. கார் மட்டுமல் லாமல் ஏரோப்ளேன், கப்பல் என்று தினுசு தினுசாய் எரிப்பது கூட உண்டாம்.

எங்கள் வண்டி அடுத்த தெருவில் திரும் பியபோது சற்று முன் நாங்கள் கண்ட காகிதக் கார் யாருக்காகப் போகிறது என்பது புரிந்து போனது.

தெருவை அடைத்துப் பந்தல் போட்டிருந் தார்கள். அர்த்த ராத்திரிப் பொழுதிலும் பந்தலில் கூட்டம்.

குமணன் வண்டியை நிறுத்த நான் இறங்கிக் கிட்டத்தில் போனேன்.

ஒரு பக்கம் மதகுருமார் இருவர் அமர்ந்து பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள். பந்தலின் நடுவில் பூக்களால் அலங்கரிக்கப் பட்ட ஒரு சவப்பெட்டி. அதன்மேல் ஒரு மூதாட்டியின் படம். சவப்பெட்டி அருகில் சின்னத்தொட்டி ஒன்றில் தீ வளர்த்து அதில் காகிதத்தால் ஆன பணம், உணவுப் பொருட் கள் இவைகளைப் போட்டு நீல உடை அணிந்த சில சீனர்கள் எரித்துக் கொண்டிருந்தனர். பந்தலின் அந்தப் பக்கம் டீ பார்ட்டி நடப்பது போல் பலர் மேஜைகளில் அமர்ந்து உணவு அருந்திக் கொண்டிருந்தனர்.

இந்த சாவைப் பற்றின விவரங்களை அறியா விட்டால் மண்டை வெடித்து விடும் என்ற உந்தலால் அங்கு டீ அருந்திக் கொண்டிருந்த பெண்மணி ஒருத்தியை அணுகினேன்.

என் அதிர்ஷ்டம் அவர் ஆங்கிலம் அறிந் தவர். பள்ளியில் ஆசிரியையாக இருக்கிறார். பெயர் வொய் ஹாங்.

இறந்து போனது ஒரு பணக்கார வயதான சீனக் கிழவியாம். நீல உடை அணிந்திருப் பவர் அனைவரும் நெருங்கிய உறவினர்களாம். கறுப்பு நிற உடை அணிந்திருப்பவர்கள் கொஞ்சம் எட்டின உறவுக்காரர்களாம். மற்ற வர்கள் நண்பர்கள்.

''அங்கே பாருங்கள் அந்தச் சவப் பெட்டி யில்தான் பாட்டியின் உடல் இருக்கிறது. அவர் போட்டோ கூட அங்கேயே இருக்கிறது, தெரி கிறதா? இவர் இறந்து போய் இன்றோடு ஏழு நாட்கள் ஆகின்றன. நாளைக்கு அடக்கம் செய்யப் போகிறோம். பாட்டி சொர்க்கத்தில் சௌக்கியமாய் வாழப் பணம், பங்களா, பசிக்காமல் இருக்க உணவுப் பண்டங்கள்



பந்தயமும் பெண் பார்க்கும் படலமும்!

மதுரையில் ஜான் வுட்காக்கும் ஆர். கிருஷ்ணனும் பந்தயம் ஆடிக் கொண்டிருந்தனர். மைதானத்தில் மண் இருப்பதால் வழுக்குவதாகக் கிருஷ்ணன் நடுவரிடம் புகார் செய் தார். உடனே ஜான் வுட்காக் 'மண்ணை அகற்றக் கூடாது!' என்று எதிர்த்தார்!

மாட்ச் தொடர்ந்து நடந்து இலேசாக இருட்டத் தொடங்கியதால் வுட்காக் ''இனி Flood light போட்டு ஆட வேணும்!'' என்று கோரிக்கை விடுத் தார்.

உடனே மாட்ச் பார்க்க வந்திருந்த டென்னிஸ் அனுபவ சாலி நரசிம்மன், ''டென்னிஸ் சட்டப்படி Light Failure ஆனால் ஆட்டத்தை நிறுத்தி மறுநாள் தொடரலாம் என்றுதான் இருக்கிறது!'' என்று நடுவரிடம் சுட்டிக் காட்டினார்.

நடுவர் உடனே 'மறுநாள் ஆட்டம் தொடரும்' என்று அறிவித்து விட் டார்!

மறுநாள் கிருஷ்ணன் சென்னையில் லலிதாவைப் பெண் பார்க்கப் போவ தாக முன்பே ஏற்பாடாகியிருந்தது! என்ன செய்வது?

கிருஷ்ணன் அடுத்த நாள் மாட்ச் தொடரும் நிலையைத் தந்தியடித்துத் தெரிவித்தார். ஜான் வுட்காக்கோடு விளையாடி ஜயித்து விட்டு, மறுநாள் விமானத்தில் லலிதாவைப் பெண் பார்க்கப் பறந்து சென்றார்! பெண் பார்க்கும் படலம் ஒருநாள் தள்ளிப் போய் விட்டது!

சொன்னவர்: கே. எஸ். நரசிம்மன்

அம்ஜத்கானுக்கு ஜே!

ஸ்டுடியோவுக்குத் தம் காரில் சென்று கொண்டிருந்தார் வில்லன் நடிகர் அம்ஜத் கான். வழியில் நடைபாதையில் ஒரு குழந்தை அடிபட்டுக் கிடந்ததைக் கண்டார். உடனே அந்தக் குழந்தையைத் தம் காரில் எடுத்துப் போட்டுக் கொண்டு மருத்துவ மனைக்குப் போய்த் தகுந்த சிகிச்சை அளித்து அந்தக் குழந்தையைப் பிழைக்கச்



செய்தார். விவகாரமே பின்னால்தான் மூண்டது. விவரம் அறிந்த போலீஸார் அம்ஜத்கான்தான் தம் காரால் அந்தக் குழந்தைக்குத் துன்பம் நேரச் செய்தார் என்று நினைத்துக் கொண்டு அவரைக் குடை குடை என்று குடைந்து விட்டார்கள். அவர்களிடமிருந்து மீள்வதற்குள் அம்ஜத்கான் பாடு போதும் போது மென்றாகி விட்டது.

ஆன் லுக்கர்.

—சாமி.

எல்லாவற்றையும் பேப்பரால் செய்து அவரின் பின்னே நெருப்பில் போடுகிறார் பார்த்தீர்களா?'' —

''எதற்காகப் பேப்பரால் செய்ததைப் போட வேண்டும்?'' —

''பின்னே? நிஜமாய்ப் பணம் சாமான்களை நெருப்பில் போட முடியுமா? அது பைத்தியக்காரத்தனம் இல்லையா?'' —

''இப்படிப் பேப்பரால் செய்தவைகளைப் போடுவது மட்டும் ரொம்பப் புத்திசாலித்தனமோ? சின்னக் குழந்தைகளைப் பராக்கு காட்டி ஏமாற்றுவது போல, ஆவிகளை ஏமாற்ற முயற்சி செய்வதாக என் மனக்குப் படுகிறது'' என்றார் வொய் ஹாங் அருகில் இருந்த இளைஞர்.

''அதென்னவோ இதுதான் நம் பழக்கம். எதற்காக வீணாய்க் குறை சொல்கிறாய்?'' என்ற வொய் ஹாங் அவர்களின் சடங்குகளைப் பற்றிப் பழக்கங்களைப் பற்றி விரிவாகச் சொல்லும்படி நான் கேட்டுக் கொண்டதால் மேலே கூறினார்.

சீனர்கள் நடுவில் பந்தபாசம் அதிகம். கூட்டுக் குடும்பமாய் வாழ்வதுதான் பழக்கம். (இப்போது எல்லா இடங்களிலும் மாற்றங்கள் உண்டாவது போல் அவர்கள் நடுவிலும் தோன்றி விட்டன) வீட்டுப் பெரியவர்கள் இறந்து போனால் அவர்களின் ஆவிகள் வணக்கத்துக்குரியவையாகின்றன என்று சீனர்கள் நம்புவதால், ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஒரு படம், அதன் முன் கொளுத்தி வைக்கப்பட்ட ஊதுபத்திகள் கண்டிப்பாய் இருக்கும்.

வொய் ஹாங் அந்த வீட்டின் முகப்பில் இருந்த படத்தைக் காட்டினார்.

சிவப்பு நிறத்தில் மஞ்சள் கோடுகளைக் கொண்ட படம். உருவம் ஒன்றும் தெளிவாய் இல்லை.

''அது என்ன?'' என்றேன்.

''தெரியாது — மூதாதையர் சம்பந்தப்பட்ட படம்'' என்றார் வொய் ஹாங்.

ஏப்ரல் மாசத்தில் வரும் சிங் — மிங் தினம், இறந்தவர்களின் ஞாபக தினம் ரொம்ப முக்கியமாய்க் கொண்டாடப்படுமாம்.

ஒருவர் இறந்தபிறகு அவரவர் பணவசதிக்கு ஏற்ப 7, 9, 11 நாட்கள் என்று பிணத்தை வைத்திருப்பார்களாம். சடங்குகளின் விமரிசையும் அந்தஸ்தைப் பொறுத்ததே.

''ஒருவர் இறந்த துக்கத்தை மொத்தம் 49 நாட்கள் அனுஷ்டிப்போம். நிறைய அழுதால்தான் ஆவிகளுக்குத் திருப்தி. அதனால் சில சமயங்களில் அழுவதற்கென வெளியாட்களைக் கூடச் சம்பளத்தில் அமர்த்துவோம்.'' 21ம் நாள் செத்தவரின் ஆவி வீட்டுக்கு வரும் என்று நம்புவதால், அன்றைக்கு இரவு. அவருக்குப் பிடித்தமான பொருட்கள் அனைத்தையும் சேகரித்து ஓர் அறையில் வைத்த பின் கதவைச் சாத்தி விடுவார்களாம். மறு நாள் காலை பார்த்தால் உணவுப் பொருட்கள் உட்கொள்ளப்பட்டு, மற்ற பொருட்கள் கலைந்து கிடக்குமாம்.

''படித்து ஆசிரியையாக வேலை பார்க்கும் உங்களுக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இருக்கிறதா?'' என்று நான் கேட்டதும் தாம் சொல்லுவதற்கு ஆதாரமாய் ஓர் உண்மைச் சம்பவத்தையும் கூறினார் வொய் ஹாங்.

''என் கஸினுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்த பின்பு கார் விபத்தில் அவன் மாண்டு போனான். காதலனுக்கு அவள் மேல் அன்பு அதிகம். 21ம் நாள் அவள் மீண்டும் வீட்டுக்கு வரும் நாளில் அவளை எப்படியும் சந்திக்கக் காதலன் தீர்மானித்து அவளுக்காகத் தயாரித்த அறையில் தானும் சென்று உட்கார்ந்து கொண்டான். அவள் அவனை ஏமாற்றவில்லை. வந்தவள் கண்ணுக்குத் தெரியாத ஆவி ரூபத்தில் இருந்தாலும் காதலனுக்காக பியானோ வாசித்துக் காட்டி, உணவை உட்கொண்டு அவனை மகிழ்வித்தாள். போன மாதம் சப்போவில் இந்தச் சம்பவம் நடந்ததற்கு நானே சாட்சி. அடுத்த அறையில் இருந்த எனக்கு பியானோ வாசிப்புக் கேட்கவே செய்தது — இதற்கு என்ன சொல்கிறீர்கள்?''

நான் என்ன சொல்ல இருக்கிறது?

பல விஷயங்களில் நம் இந்திய பழக்க வழக்கங்களுக்கு, நம்பிக்கைகளுக்குச் சீனர்களின் வாழ்க்கை முறை அக்காவாக இருக்கிறதே என்கிற வியப்பு எழ, வொய் ஹாங்கிடம் ''இத்தனை நாழிகை என்னோடு பேசிப் பல சுவாரஸ்யமான விவரங்களைச் சொன்னதற்கு நன்றி'' என்று சொல்லிவிட்டுப் பக்கத்து இளைஞனின் நமட்டுச் சிரிப்பை உணர்ந்தவளாய் காருக்குத் திரும்பினேன். (தொடரும்)

அதே கேள்வி!

'அன்னம்'

கிழக்கே போகும் ரயிலில் அவசரம் அவசரமாக ஏறிய பரஞ்சோதியையும் பாஞ்சாலியையும் அந்தப் பெட்டியில் இருந்த பிரயாணிகள் ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். ஆனால், அடுத்த நிலையம் வருவதற்குள், அவர்கள் நிலைமையைப் புரிந்துகொண்டு உட்கார இடம் அளித்தார்கள்.

பரஞ்சோதி பாஞ்சாலியை ஆதரவுடன் பார்த்தான். ஓடி வந்த களைப்பு அவளுக்கு இன்னும் அடங்கவில்லை. நெஞ்சு எம்பி எம்பி வடிந்தது. அவள் முகத்தில் ஒரு புதுத் தளர்ச்சி. பத்து வருஷங்கள் வயதில் கூடி விட்டாற்போல் ஒரு பிரமை. ஓர் அசாதாரணமான மௌனத்தில் அவள் ஆழ்ந்திருந்தாள். நடந்து விட்ட சம்பவங்களை அவளால் மறக்க முடியவில்லை. ஓடிக் கொண்டிருந்த ரயில் அத்தனையும் நனவுதான் என்பதை அவளுக்கு நினைவூட்டியது.

மூன்று வருஷங்களுக்கு முன், குழந்தைத் தனமாகக் கையில் ஒரு கிளிக் கூண்டுடன் கிராமத்துக்குள் நுழைந்த நாள் முதல், இப்படி ஊரே விரட்ட மூச்சிரைக்க ஓடி வந்த நாள் வரை — எத்தனை எத்தனை சம்பவங்கள் அவள் வாழ்க்கையில் நடந்து விட்டன? துயரக்கடலில் மூழ்க இருந்தவளைக் கை கொடுத்துக் காப்பாற்றிய பரஞ்சோதி அவளுக்குக் கடவுளாகத் தெரிந்தான்.

டிக்கெட் கலெக்டர் டிக்கெட் கேட்டார். நல்ல வேளை... பெட்டிதான் ஊரில் தங்கி விட்டதே தவிர — மணிபர்ஸ் பத்திரமாக இருந்தது. பரஞ்சோதி எடுத்த டிக்கெட் ரயில் பிரயாணத்துக்கு மட்டும் இல்லை. அவர்கள் வாழ்க்கைப் பயணத்துக்கும்தான்.

தன் தோழன் ஒருவன் மனைவியுடன் பாஞ்சாலியைத் தங்கச் செய்தான் பரஞ்சோதி. தன் அச்சகத் தோழர்களின் உதவியுடன் மறுநாளே வடபழனி கோவிலில் அவளுக்குத் தாலி கட்டித் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டான். அவனுக்குப் பயம். அவன் வீட்டில் விட்டு வந்திருந்த பெட்டியிலிருந்து விலாசத்தைத் தெரிந்து கொண்டு அழைத்துப் போய் விட்டால் எப்படி? இனி அவன் எக்காரணம் கொண்டும் அவளை நழுவவிடுவதாக இல்லை.

ஊரிலிருந்து மனிதர்கள் வரவில்லை. கருத்தம்மா மட்டும் — சந்தைக்குப் போன போது — யாரை விட்டோ எழுதச் சொல்லியிருந்தாள். பாஞ்சாலி ஊரை விட்டுப் போனது அவளுக்குத் துளிக்கூட வருத்தம் இல்லை. ''அந்த மதுரை வீரன் மாதிரி பரஞ்சோதி உன்னை அழைச்சுப் போகா விட்டால், உன் நிலைமை என்ன? அந்தப் பிள்ளை மனம் கோணாமல் நடந்து கொள்!'' என எழுதியிருந்தாள்.

கடந்த கால வாழ்க்கையில் அவர்கள் சந்தித்த பயங்கர அந்தகாரம் மறைந்து, இருவர் வாழ்விலும் வசந்தத்தின் ஒளி பிறந்தது. அந்த இனிய வாழ்க்கையின் கனியாக ஒரு புதிய ஜீவன் அவர்கள் இல்லத்தில் நுழைந்தது. ஆம். வருஷக் கடைசியில் — வந்து சேர்ந்தான் — மாஸ்டர் பரஞ்சோதி.

பாஞ்சாலிக்குத் தன் பிள்ளைக்கு மாமன் பெயரை வைக்க வேண்டும் என்று ஆசை. கவிஞருக்கு அதில் விருப்பம் இல்லை. யோசித்து யோசித்துக் கடைசியில் 'நக்கீரன்' எனப் பெயர் சூட்டினான்.

இப்போது பரஞ்சோதியின் தங்கை அடிக்கடி வந்து போகிறாள். விடுகதை போட்டுத் தன்னை மடக்கிய தோழியின் வாழ்வே அவிழ்க்க முடியாத புதிராகப் போய்க் கடைசியில் தன் அண்ணியாக அவள் வந்ததில் அவளுக்குக் கொள்ளை மகிழ்ச்சி. அவள் புருஷன் இன்னொரு கடை திறந்திருக்கிறானாம்! அவள் பெருமையாகச் சொல்லச் சொல்லப் பரஞ்சோதி முகம் களித்தான்.

பரஞ்சோதிக்கு இப்போது கவிதை எழுத நேரம் இல்லை. அச்சக முதலாளி வேறு 'பிஸினஸ்'ஸில் இறங்கி விட்டார். ஆஃப் செட் அச்சு இயந்திரம் ஒன்று புதிதாக வாங்கியவருக்குக் கவிதையில் நாட்டம் இல்லை. வண்ண அட்டையில் அரைகுறை ஆடை அழகிகளைத் தாங்கி — எப்படியோ ஆரம்பித்து — என்னவெல்லாமோ நடக்கும் கதைகளை வெளியிடுவதில் ஆர்வம் காட்டினார்.

பரஞ்சோதிக்கு இப்போது பணம் தேவை. பட்டணத்துச் சுகங்களை அனுபவிக்க அவன் கற்றுக் கொண்டு விட்டான். அந்த 'இலக்கிய'ப் படைப்புக்களைத் தானும் உருவாக்கலானான். அது மட்டும் அல்ல, அவனுடைய நாவன்மை அவனை அரசியலில் இழுத்து விட்டது. கனல் கக்கும் கட்டுரைகள் அவன் பெயரைத் தாங்கி வெளி வரலாயின.

பாஞ்சாலியும் எத்தனையோ புது விஷயங்களைக் கற்றுக் கொண்டு விட்டாள். கிராமத்தில் இனிமையாகத் தவழ்ந்த அந்தத் தென்றல் — இப்போது ஆலைப் புகையுடன் கலந்து கொண்டது. நடை, உடை, பேச்சு — எல்லாமே புதுமாதிரிதான்.

குழந்தைக்கு முடியிறக்கத் திருப்பதிக்குக் கட்சித் தலைவருக்குத் தெரியாமல் போனார்கள். அவளை மடியில் வைத்துக் கொண்டு பரஞ்சோதி உட்காரக் குழந்தையின் முடி மழிக்கப் பட்டது. பரஞ்சோதிக்கு



அந்தப் பொல்லாத நாள் — பஞ்சாயத்தில் தனக்கு நடந்த மரியாதை கவனத்துக்கு வந்தது.

குழந்தையை நீராட்டித் திருநீறு இட்டாள் பாஞ்சாலி. சட்டென்று ஏதோ நினைவு வந்தவளாய்க் கலகலவென்று — பழைய சிரிப்புச் சிரித்தாள்.

''இப்போ என்ன சிரிப்பு?'' என்று கேட்டான் பரஞ்சோதி புதியவனாய்.


''புள்ளையைப் பார்த்தேன். அன்னிக்கு அப்பன் எப்படி முழிச்சதோ அப்படியே முழிக்குது!'' என்றாள்.

பரஞ்சோதி கையை ஓங்கினான். அவள் விலகிக் கொண்டாள்.

பரஞ்சோதி கட்சியில் ஒரு முக்கிய புள்ளி. வேலையில் சும்மா பெயருக்கு ஒட்டிக் கொண்டிருந்தான். தினமும் பொதுக் கூட்டம்தான். அவன் பேச்சு வன்மை எல்லோரையும் கவர்ந்தது. எப்படி எப்படியோ பணம் வந்து கொண்டிருந்தது. தட்டுப்பாடு இல்லை.

அன்று அவனுக்கு அலுவலகமும் இல்லை. கூட்டமும் இல்லை. பூரண ஓய்வு. நக்ரேனை ''சலூனு''க்கு அழைத்துப் போய் முடியைச் சீர்திருத்தி அழைத்து வந்தான். நாற்காலியில் நெளிந்த பிள்ளையை ''சும்மா அசக்காதே! கோணல் கோணலாகப் போகும்!'' என எச்சரித்தான்.

அன்றுமதியம். சாய்வு நாற்காலியில் அமர்ந்தபடி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த பரஞ்சோதி 'சட்'டென்று விழித்துக் கொண்டான். சிப்பாய் அவன் காதோரம் இருந்த முடியைத் தூக்கி



விரல்களை அசைத்து ''டக்.. டக்'' என்று வாயால் சத்தம் செய்து — நக்கீரன் முடி வெட்டுவது போல் பாவனை செய்து கொண்டிருந்தான்.

''இது என்னடா வேலை?'' என்று அதட்டினான் பரஞ்சோதி.

''சும்மா அசக்காதே! கோணல் மாணலாகப் போகும்!'' என எச்சரித்தான் பிள்ளை.

வாயிற்படியில் நின்றபடி தன் பிள்ளையின் விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்தாள் பாஞ்சாலி.

''பிள்ளையைப் பார்த்துப் பெருமையிலே பூரிச்சுப் போயிட்டியா? கழுதை! புத்தி எப்படிப் போகுது பார்!... ஒரு டாக்டரா... ஒரு இன்ஜினீயரா... ஒரு தலைவனா வராமே இது என்ன வேலை?'' — என்று பிள்ளையின் கையைப் பிடித்துத் தள்ளினான் பரஞ்சோதி.

குழந்தை பயந்து போய்ப் பாஞ்சாலியின் கால்களைக் கட்டிக் கொண்டது.

அவனுக்கு ஒரு சந்தேகம். மெதுவாகத் தன் தாயைக் கேட்டான்.

''எல்லோரும் ஊசி போடற டாக்டரா பிட்டா, யாரும்மா முடி வெட்டுவாங்க?'' என்று அவன் அவளைக் கொஞ்சும் மழலையில் கேட்டான்.

சாட்டையால் அடிபட்டது போல் துடித்தான் பரஞ்சோதி — அந்தக் கேள்வி — அதே கேள்வி...

அன்று — அவன் வருமானம் ஏதும் இல்லாமல் ஊரை வளைய வந்து கொண்டிருந்த போது அவன் தந்தை கேட்டார். இன்று அவனை அவன் பிள்ளை கேட்கிறான். அவனை வளர்த்து ஆளாக்கி — அவன் நிலைமைக்காகத் தாமும் பரிதாபப்பட்டு — அவனுக்கு நேர்ந்த அவமானத்துக்காகக் கவரிமான் போல் உயிர் துறந்த அவன் தந்தைதான் அவன் கண்முன் தெரிந்தார். மகன் அல்ல.

''வா! அப்பா!'' என்று பழைய நினைவுகள் கண்களில் நீரைத் தருவிக்க — அழைத்தான் பரஞ்சோதி.

''மாட்டேன் போ!... உன்னோட காய்!'' என்று நக்கீரன் தன் தாயின் புடவைக்குள் தன் முகத்தை மறைத்துக் கொண்டான்!



அரசியல்வாதிகள்

ஏழ்மை கீதத்தின்
பல்லவிகளாக உருவாகும் நீங்கள்
ஏனோ பணக்காரப் பாடல்களுக்கு
'சரணங்'களாகி விடுகிறீர்கள்!
எங்கள் வயிற்றில்
பசிமேகம்
மந்தாரம் போடும்போது
நீங்கள் வெறும்
வானிலை அறிவிப்புத்தான்
வாசிக்கிறீர்கள்.
உங்கள்
சமதர்ம நோக்கு
எங்களிடம் உள்ள அதிக
சதவிகித வாக்குக்கான
வழிமுறை எனப்புலப்படும்போது
சங்கடப் படுகிறோம்.
எங்கள் நாசிகள் வழியே
தினம்வரும் பசிஅனல் மூச்சு
'குளுகுளு' ஏசியில் உள்ள
உங்களை எப்படிப் பாதிக்கும்
என்ற தைரியம் உங்களுக்கு.
ஏழைகளுடன்
ஏழைகளாக இருந்து
ஏமாற்றியே
பணக்காரர்களாகி விடுகிறீர்கள்.
பரவாயில்லை!
இந்த ஏழைகளின்
வாக்குக்கும் ஒரு
பணக்காரனை உருவாக்கும்
சக்தி இருந்தால்
பெருமைப் படுகிறோம்.
பிழைத்துப் போங்கள்!

— கே. வேங்கடேசரவி


ராஜுவின் வலிமை
ராஜுவும் சங்கரும் மலையேறும் போது...
டே பொட்டை, போ வேகமா
ராஜுவை அடிக்கடி உதைக்கிறான் சங்கர்.
ஆ! போதும். விடுடா பாவி.
சாப்பிட அமருகின்றனர்
மறக்கவே கூடாது நியூட்ராமுல்
ராஜுவை, கெட்டித் தள்ள முயலும் சங்கர் சரிந்து விழுகிறான்
பத்திரம்
ஐயோ! காப்பாத்து!
பிடியை விடாதே. தூக்கி விடறேன்.
வெட்கித் தலை குனிகிறான் சங்கர்
தாங்க்ஸ்! ஏதுடா இத்தனை பலம் உனக்கு?
இந்தா ஒரு கப் நியூட்ராமுல்.
ராஜுவின் பாடு குஷி: வேளாவேளை நியூட்ராமுல். ஆரோக்கியமான இன்சுவைப் பானம், அமுல் படைப்பான நியூட்ராமுல். ஆடைமயமான பால், அசல கோக்கோ, மால்ட், சர்க்கரை... நாலும் கலந்த போஷாக்குக் கலவை. விலையோ அதிசயம், மலிவோ மலிவு! 500 கிராம் நியூட்ராமுல் ரூ. 12.21 தான், தல வரிகள், மத்திய விற்பனை வரி, சரக்குக் கட்டணம் யாவும் தனி.
ராஜு, சங்கர் போல் நாடெங்கும் ஆயிரமாயிரம் பேர் ரசிக்கும் அன்றாடப் பானம் நியூட்ராமுல்.
அமுல் படைப்பு
நியூட்ராமுல்
பருகப் பருகப் பலம் பெருகும் பெருகும்!
daCunha/N/3 R TAM

வாக்குமூலங்கள்

சப் இன்ஸ்பெக்டர்

மை லார்ட், நான் ஜோம்பூர் போலீஸ் நிலையத்தில் கடந்த ஓராண்டு காலமாகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.12.78 அன்று மாலை குப்பம்மா என்ற பெண் தான் பெற்ற மூன்று குழந்தைகளைத் தண்ணீர்த் தொட்டியில் அமிழ்த்திக் கொன்று விட்ட



ஏ.வி.எம்.கணேஷ்

தாகத் தகவல் கிடைத்ததும் குற்றவாளி குப்பம்மாவின் வீட்டுக்குச் சென்றேன். குற்றஞ்சாட்டப்பட்ட குப்பம்மா தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டதால் அவரிடம் 'ஸ்டேட்மெண்ட்' வாங்கிய பின்னர் பிணங்களை 'போஸ்ட் மார்டத்'திற்கு அனுப்பி விட்டுக் குப்பம்மாளைக் கைது செய்து காவலில் வைத்தேன். இக்கொலைகளுக்கு வறுமைதான் காரணம் என்றாலும் கூட, இவ்வளவு கொடூரமாக இக்கொலைகளைச் செய்திருக்கத் தேவையில்லை. எட்டணவுக்கு மூட்டைப் பூச்சி மருந்தை வாங்கி வந்து தன் குடும்பத்தையே கொன்ற ராமையா — சி — ஆர் 157/78 வழக்கைவிட மிகவும் கொடுமையானது இவ்வழக்கு. போலீஸ் தரப்புச் சாட்சிகளாக மீனாட்சி என்ற பெண் மற்றும் அரசு டாக்டர் வாக்கு மூலங்களை மட்டும் கனம் நீதிபதி பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஓவர் மை லார்ட்.

மீனாட்சி

கும்புடுறேன் எசமான். நான் தான் மீனாட்சி. குப்பம்மா என் வீட்டிலே கடைசிக் குடிசையிலே குடித்தனம் இருக்கா. அவ புருஷன் செத்துப் போனதுலேயிருந்து அவளுக்கு வரும்படி எதுவும் கிடையாது. அன்னிக்கு அதாவது 26.12.78 அன்னிக்கு நான் மார்க்கட்டுக்குப் போறப்போ, ராசாவாட்டம் இருந்த அந்த மூணு ஆம்பிளைப் புள்ளைகளை... இதோ குத்துக்கல்லாட்டம் நிக்கிறாளே இவ.. குப்பம்மா - வீட்டுக்குப் பின்னாலே இருக்கிற மாடு தண்ணிக் குடிக்கிற தொட்டியிலே அமுக்கி அமுக்கிக் கொன்னுப் போட்டுட்டா.. அவ கஷ்டப் படுறவதான் எசமான்... எனக்குக்கூட மூணு மாசம் குடக்கூலி பாக்கி. ஆனா பாவிப்பய மவ இப்படிக் கொன்னு இருக்க வேண்டாம். இனுசுபெட்டர் ஐயா சொன்ன மாதிரி எட்டணுவுக்கு ஏதாவது மருந்தை வாங்கிக் கஞ்சியிலே கலக்கிக் கொடுத்திருந்தா அதுகள் துடிதுடிக்காம செத்துப் போயிருக்கும் அம்புட்டுதான் எசமான்...

டாக்டர்

மை லார்ட், நான் ஜோம்பூர் அரசினர் மருத்துவமனையில் மருத்துவராகக் கடந்த இரண்டாண்டு காலமாகப் பணியாற்றி வருகிறேன். கடந்த 26.12.78 ஜோம்பூர் சப்-இன்ஸ்பெக்டர் சில பிணங்களை போஸ்ட் மார்டத்துக்கு அனுப்பியுள்ளதாகத் தகவல் கிடைத்தது. போஸ்ட் மார்டம் தியேட்டரில் மூன்று ஆண் குழந்தைகளின் பிணங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவைகளுக்கு முறையே நான்கு, இரண்டு, ஒரு வயது இருக்கலாம். அம்மூன்று பிணங்கள் மீதும் உயிரைப் போக்கும் அளவுக்கு ஆபத்தான காயங்கள் எதுவும் இல்லை. அடித்துக் கொன்றதற்கு அடையாளமாக முகுளம் மற்றும் மூளையும் பாதிக்கப்படவில்லை. ஆனால் அக்குழந்தைகளின் மூச்சுக் குழல்கள் மட்டுமின்றி நுரையீரல்களும் நீரால் நிரப்பப்பட்டு இருந்தன: எனவே அக்குழந்தைகள் தண்

கிரிக்கெட் கற்கலாம்! 28

தொகுப்பு:
கே. சந்திரசேகர்

படம்: ராஜு... தலைப்பு: குண்டுமணி

'ஸ்விங்' பௌலிங்!

வாயுமண்டலம் அழுத்தமாக அமைந்த வேளையில், காற்றும் ஈரத்தன்மையாக வீசும் தருணத்தில் புதுப்பந்து நன்கு 'ஸ்விங்' ஆகும்.

அவுட் ஸ்விங் பௌலிங்!

அவுட் ஸ்விங் பௌலிங், பாட்ஸ்மனை முன் நோக்கி வந்து ஆட வைக்கும்!

சுட்டு விரலும் நடுவிரலும் பந்தின் நூல் கோடுகளுக்கு அருகே பற்றியிருக்க, கட்டை விரல் பந்தின் நூல் கோட்டினடியில் ஏந்தியிருக்க 'கிரிப்' அமையும்.

பந்தை வீசும் தருணத்தில் முதல் 'ஸ்லிப்' நோக்கி நூல் கோட்டை ஏந்திய கைப்பகுதி இயங்க வேண்டும்.

விக்கெட் பகுதியை நெருங்கும் தருணத்தில், பின் பாதம் பௌலிங் கோட்டுக்கு இணை கோடாக ஸ்டம்புக்குச்சிகளுக்கு வெகு அருகில் இருப்பது 'சைட் ஆன்' நிலை ஆகும்.

இடது பாதத்துக்குக் கனத்தைச் செலுத்த வேண்டும். இடது பாதம் நன்கு பதிக்கப்பட்டு, வலது கை முழுத்த அளவு சௌகரியமான உயரத்துக்கு எழும்பியிருக்க வேண்டும்.





பந்து வீசப் பட்ட தருணத்தில், வலது கை நன்கு இடது புறமாக இறங்கி அமைய, ஸ்திரத் தன்மையை நன்கு காலைப் பதித்து எய்த வேண்டும்.

னீர்த் தொட்டியில் மூழ்கடிக்கப்பட்டுத்தான் இறந்திருக்க வேண்டும். அக்குழந்தைகள் தவறுதலாக நீர்த் தொட்டியில் விழுந்திருந்தால் தம் உயிரைக் காக்க அவைகள் போராடி இருக்கும். அது இயற்கை. அவ்வாறு அவைகள் இறந்திருந்தால் அவைகளின் கை கால் தசை நார்கள் நெகிழ்ந்து இருக்க வேண்டும். ஆனால் இக்குழந்தைகளின் தசைநார்கள் அவ்வாறில்லை. எனவே இவைகள் நீரில் அமிழ்த்தப்பட்டுக் கொன்றிருக்கப்பட வேண்டும். சப் இன்ஸ்பெக்டர் குறிப்பிட்டவாறு எட்டணா செலவில் தன் குடும்பத்தையே கொன்ற ராமைய்யா குடும்பக் கொலையை விட இது கொடூரமான கொலை. குழந்தைகளின் வயிற்றில் உணவுப் பொருட்கள் எதுவும் இல்லாததால் அவை இறந்த சரியான நேரத்தைக் கணக்கிட முடியவில்லை... தட்ஸ் ஆல் மை லார்ட்...!

அரசு வக்கீல்

மை லார்ட், வறுமை என்ற போர்வையின் கீழ் இதுபோன்ற கொலைகள் பெருகி வருவதைத் தடுத்து நிறுத்துவது சட்டத்தின் கடமையாகும். இது ஒரு திட்டமிட்ட கொடூரக் கொலை. சப் இன்ஸ்பெக்டரும் டாக்டரும், மற்றும் ஒரு சாட்சியும் குறிப்பிட்டவாறு இந்த மூன்று கொலைகளைச் செய்தவர் குப்பம்மா என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. வறுமை மட்டுமே இக்கொலைக்குக் காரணமல்ல. குப்பம்மா ஏற்கெனவே தனது கணவரைக் கடந்த ஆண்டு இழந்திருக்கிறார். அதாவது அவர் இறந்து விட்டார். குப்பம்மாவின் வயது முப்பது. அவர் மறுமணம் செய்ய எண்ணியிருக்கக் கூடும். அம்மறுமணத்துக்கு இக்குழந்தைகள் இடையூறாக இருக்கும் என்ற எண்ணமே இக் கொலைகளுக்குக் காரணம். வறுமை மட்டுமே இக் கொலைகளுக்குக் காரணம் என்றால் ஒரு தாய் தான் பெற்ற குழந்தைகளை இவ்வாறு துடிதுடிக்கக் கொன்றிருப்பாரா என்பது சந்தேகமே. அப்படியே வறுமை தான் காரணம் என்றாலும் கூட, எட்டணா செலவில் அந்தக் குழந்தைகளுக்கு விஷம் வைத்துக் கொன்றிருக்கலாம். எனவே, மொத்தத்தில் இ. பி. கோ. 302 ஆவது பிரிவின் படி...

குப்பம்மா

ஐயா... என்னோட குழந்தைகளை நான் ஏன் கொன்னேன்னு யாருமே கேட்கலே... எட்டணா செலவிலே விஷம் வைச்சுக் கொன்றிருக்கலாமேன்னு தான் சொல்றாங்க... எசமான் நான் ஒண்ணே ஒண்ணுதான் சொல்ல ஆசைப்படுறேன்... எல்லாரும் சொல்றாங்களே... எட்டணா... அந்த ஐம்பது பைசா... அது என்னோட கையிலே அன்னைக்கு அதுதான் 26.12.78 அன்னிக்கு இருந்திருந்தா நான் எதுக்கு எசமான் என் செல்வங்களைக் கொன்னிருக்கப்போறேன்...? அதுக்கு ஒரு ரூபாவது வாங்கிக் கொடுத்திருப்பேனே..

நீதிபதி

தீர்ப்பு ஒத்தி வைக்கப்படுகிறது!

பட விமரிசனம்

அப்போதே சொன்னேனே, கேட்டியா?





"... கேட்டியா?" — என்று விஷமமாகச் சிரித்தார் நண்பர் படம் பார்த்துவிட்டு வெளிவரும்போது.

"கேட்டிருந்தால் இந்த அவஸ்தையிலிருந்து தப்பி இருக்கலாம். கேட்காததின் பலனைத்தான் அனுபவித்தாகிவிட்டதே" என்றேன் நெற்றிப் பொட்டைத் தடவிக்கொண்டே.

குடியின் கொடுமை, லஞ்சம் வாங்குவதினால் சீரழியும் வாழ்க்கை ஆகியவற்றை விளக்குவதுதான் படத்தின் நோக்கம்.

மேடை நாடகம் திரைப்படமாகி இருப்பது போல் காட்சி அமைப்பும் பாத்திரப் படைப்புக்களும் உள்ளன.

சத்தியப்பிரியாவை உங்களுக்குத் தெரியும். இன்று திரையுலகில் எங்கோ வெகு தூரத்துக்குப் போய் விட்டார் அவர். ஆனால் இந்தப் படத்தில்தான் அவர் அறிமுகம் ஆகி இருக்கிறார். காலம்சென்ற நாடகநடிகர் மணக்கால் மணி இதில் 'ஹரே ராம, ஹரே கிருஷ்ணா' சாமியாராக வருகிறார். [கதா நாயகனாக வரும் ஜெய்கணேஷை அப்போதுதான் வெட்டிஎடுத்த செதுக்கப்படாத கல்லாகக் காண்கிறோம். இதிலிருந்தே சமீபத்திய ரிலீஸான இந்தப் படத்தின் தொன்மையை உணரலாமே.

வாழ வழி இல்லாத அநாதையாக, ஆதரவு தர யாருமில்லாத நிலையில் ஓர் இளைஞனுக்கு ஒரு நல்லிதயம் படைத்தவர் நல்ல வேலையை வாங்கிக் கொடுத்துத் தம் மகளையும் மனைவியாக்கி வைக்கிறார். அவனை நல்லவனாகவும் நேர்மையாளனாகவும், ஆரம்பத்தில் காட்டுகிறார்கள். திடீரென்று அவன் லஞ்சம் வாங்கும் பேராசைக் காரனாக எப்படி மாறினான் — சரியான விளக்கமில்லை கதையில்.

நேர்மையின் மறு அவதாரம், உத்தமன் தன் கணவன் என்று நம்பும் மனைவி — கணவனின் லஞ்ச லாவண்யங்களை அறிந்த பிறகு வீட்டை விட்டு வெளியேறுவதும் (?) மனைவியின் பிரிவைத் தாங்காத கணவன்—ஆனால் லஞ்சம் வாங்குவதைக் கைவிடாமல் — தனித்தே வாழ்வதும் தான் லஞ்சம் வாங்குவதற்குக் கதாநாயகன் கூறும் காரணமும் ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளாக இல்லை. கருணியின் தத்துப்பித்துத் தனத்தை காமெடியாக ஏற்க முடியவில்லை. சுகபோகங்களைத் துறந்து நேர்மைக்காக வறுமையோடு போராடித் தங்களை வளர்க்கும் தாயாரிடமிருந்து விலகிப் போய்த் தந்தையோடு சுகவாழ்வு வாழத்தொடங்கும் குழந்தைகள் விபரீதமான வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கும்போதே இது அப்பாவை வழிக்குக் கொண்டு வரக் கையாளப்படும் சூழ்ச்சி என்பது புரிந்துபோய் விடுகிறது. சஸ்பென்ஸ் இல்லை.

தோழியின் சுகவாழ்வில் பொறாமை கொண்டு சாமியார்களைத் தேடிப் போய்த் தடுமாறும் கதாபாத்திரம் படத்தின் பெரும் பகுதியை ஆக்ரமித்துத் தம் வேதனையை அதிகமாக்குகிறது. மேஜர் திடீரென்று தோன்றுகிறார். தோன்றியது போலவே மறைந்தும் விடுகிறார்.

எஸ். பி. பாலசுப்பிரமணியம் வாணிஜெயராம் யேசுதாஸ் இவர்களெல்லாம் பாடுகிறார்களாமே? — சூலமங்கலம் சகோதரிகளில் ஒருவரான ராஜலக்ஷ்மி தான் இசையமைப்பாளராம் —டைட்டிலில் காட்டுகிறார்கள். ஒலிப்பதிவோ செவிப்பறைகளின் உறுதியைச் சோதிக்கிறது.

அப்போதே சொன்னேனே கேட்டியா? — எப்போதோ வந்திருக்க வேண்டிய படம். இப்போது வந்து ஏமாற்றமளிக்கிறது.

— கௌசிகன்



"ஹோட்டல்காரர்களுக்கும் சினிமாக்காரர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு'' என்று இயக்குனர் (கிருஷ்ணன்) பஞ்சு கூறியவுடன்,

''அப்படி என்றால் உங்களுக்குப் பிடித்த படம் சர்வர் சுந்தரம்தானே?'' என்றேன் நான்.

''சரியாகக் கண்டு பிடித்து விட்டீர்களே!'' என்று கூறிய அவர் மேலும் தொடர்ந்தார்:

''ஹோட்டல் காரர்களுக்கும் சினிமாக்காரர்களுக்குமான தொடர்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. நாங்கள் எங்கே சென்றாலும் அவர்கள் உதவி எங்களுக்குத் தேவை. பெரும்பாலான படங்களில் வெளிப்புறப் படப்பிடிப்பு அதிகம். 'நாம் தினம் சந்தித்துக் கொண்டிருக்கும் இவர்களை வைத்து ஒரு படமெடுத்தால் என்ன? அதிலும் குறிப்பாக இந்த ஹோட்டல் தொழிலில் உள்ள ஏதாவது ஒரு கதாபாத்திரத்தை மையமாக வைத்துக் கொண்டு கதை அமைத்தால்?' இந்தக் கேள்விகளை எல்லாம் நான் அந்தப் படத்தின் கதை வசன கர்த்தாவாக விளங்கி இப்போது புகழ் பெற்ற டைரக்டராக மலர்ந்திருக்கும் கே. பாலசந்தரிடம்

“நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றோம்!”

கேட்டேன். நான் கேட்ட கேள்விகளுக்கு பதிலாக ஒரு கதையையும், அதற்கேற்றாற் போல் சம்பவங்களையும், என்னிடம் எடுத்து வந்தார் பாலசந்தர். கதையைக் கூறியதும் என் தலை அசைந்ததை ஒழிய உள்ளூற ஏதோ ஓர் உறுத்தல். கதையும் சரி, அதில் வரும் சம்பவங்களும் சரி எல்லாமே negative approach ஆக இருந்தன. மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற சந்தேகம்.''

''அதனால்தான் நாடகமாக முதலில் மேடை ஏற்றினீர்களோ?''

''ஆமாம், நாம் சாதாரணமாகப் போய்க் கொண்டிருக்கும் பாதையிலிருந்து விலகிப் புதுமையான முறையில் ஏதாவது செய்யப் போகிறோம் என்றால் நமக்கு நாமே தைரியம் சொல்லிக் கொள்ளவும் வெற்றியைத் தழுவத் தடயங்களை உறுதிப் படுத்திக் கொள்வதும் சகஜம்தானே.''

''நாடகம் பெற்ற வெற்றி திரைப்படத்தை நீங்களே தயாரிக்க ஊக்குவித்ததோ?''

''நாங்கள் மட்டுமே இதைத் தயாரிக்கவில்லை. எங்களது தாய் வீடான ஏ. வி. எம். உடன் கூட்டுச் சேர்ந்து தயாரித்தோம். ''ரத்தக் கண்ணீர்'' கதையை திரு ஏ.வி.எம் அவர்கள் கேட்டுப் படமாக எடுக்க விருப்பப்படாமல் ஒதுக்கினார். காரணம் இதைப் போலவே அதுவும் negative approach. ஆனால் ''ரத்தக் கண்ணீர்'' படம் வேறு ஒருவர் தயாரிப்பில் வெளி வந்து வெற்றி பெற்றது. மற்றொரு முறையும் ஒரு வெற்றிப் படத்தைக் கைநழுவ விட்டு விடக் கூடாது என்ற காரணத்தினால் ஒப்புக் கொண்டார் ஏ. வி. எம்.''

''இந்தப் படத்தின் கதை...?''

''கதை என்று பார்த்தால் நாலே வரிதான். இந்தப் படத்துக்கு உயிர் நாடி Treatment தான். இந்தப் படம் மட்டுமல்ல. எந்தப் படத்துக்குமே Treatment சரியாக இருந்தால் தான் படம் வெற்றி பெறும்.''

''சர்வர் சுந்தரத்துக்குக் கதாநாயகி கிடைப்பதில் சிறிது சிரமம் இருந்ததாமே?''

''உண்மைதான். அப்பொழுது இருந்த கதாநாயகிகள் யாருமே நாகேஷுடன்

✖ டைரக்டர் பஞ்சு கிருஷ்ணன்



(கிருஷ்ணன்) பஞ்சு பேட்டி

ஜோடியாக நடிக்க விரும்பவில்லை. 'காமெடியனுடன் ஜோடியா?' என்று பலர் தட்டிக் கழித்தார்கள். ஆனால் கே. ஆர். விஜயா அந்த வேடத்தைச் சவாலாகவே ஏற்றார். அவரது அலட்சியமில்லாத போக்கும், உறுதி





✱ சர்வர் சுந்தரம் படத்தில் கே. ஆர். விஜயா, நாகேஷ்; நிஸ்புடன் கே. ஆர். விஜயா

யான உழைப்பும்தான் இன்றும் அவர் திரை வானில் மின்னிக் கொண்டிருக்கக் காரணம்!''

''படத்தில் சினிமா எடுக்கும் முறையைக் காட்டியதனால் பாதிப்பு ஏற்பட்டது என்று கூறினார்களாமே?''

''நீங்கள் கூறியதுபோல் கூக்குரல் எழுப்பப் பட்டது. ஆனால் எனது எண்ணம் வேறாகத்தா னிருந்தது. நமது படங்களில் மழை எப்படித் தோன்றுகிறது. சண்டை எப்படி எங்கெல் லாம் போடப் படுகிறது. எது டூப், எது நிஜம் என்று எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக மக்கள் தெரிந்து கொள்கிறார்களோ அவ்வள வுக்கு நல்லது! அதற்குப் பிறகுதான் அவர்கள் அந்தக் காட்சிகளை இன்னும் அதிகமாக ரசிக் கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.''

''உங்கள் படத்தில் நடிகர் ரங்காராவும் நடிகை மனோரமாவும் வேறொரு இயக்குனர், நடிகை ஆகியோர்களைப் போலவே இமிடேட் செய்து நடித்தார்கள், என்று எதிர்ப்புக் கிளம்பியதாமே?''

''உண்மைதான். ஆனால், இமிடேட் செய் வது தவறானதல்ல. எவ்வளவோ பேர் அதை ஒரு கலையாகவே பாவித்துத் திறமையாகச் செய்தும் வருகிறார்கள். அது கலைபமில்லை. Self Satire என்ற சுய கிண்டல் வகை உண்டு. அம்முறையில் திரையுலகில் ஒரு டைரக் டரும் நடிகையும் எப்படிச் செயல்படுவார்கள் என்பதைக் காண்பிப்பதாக நினைத்துத்தான் நான் எடுத்தேனே ஒழிய வேறு எண்ணத் துடன் அல்ல என்று சம்பந்தப்பட்டவர் களுக்குப் புரிய வைத்தேன்.''

''பாடல்கள் படத்துக்கேற்ற விதமாக அமைந்திருந்தனவா?''

''கண்டிப்பாக. 'பராசக்தி' படத்துக்குப் பிறகு தேவையான இடத்தில் பாடல்களைப் போட்டு ஹிட்டாக்கிய பெருமை இந்தப் படத்துக்குத்தான் கிடைத்தது. முதலில் பாடல்கள் பற்றியே சிந்திக்காமல் படம் முழுவதையும் எடுத்து விட வேண்டும். படத்தைப் போட்டுப் பார்த்த பிறகு எந்த எந்த இடத்தில் பாடல் தேவை என்று நினைக் கிறோமோ அதற்கு ஏற்ற விதத்தில் பாடலை எழுதச் சொல்லி இசையமைத்து இணைத்துக் கொள்ள வேண்டும். இதுதான் படத்தில் பாடல்களைச் சேர்க்கச் சரியான வழி. ஒன்பது பாடல்களை ''பராசக்தி'' படத்தில் இப்படித் தான் இணைத்தோம். அதற்குப் பிறகு இந்தப் படத்தில் ஐந்து பாடல்களை இப்படி எங்களால் இணைக்க முடிந்தது.''

''நகைச்சுவை நடிகரான நாகேஷைத் துணிந்து கதாநாயகனாகப் போட்டீர்களே!''

''படத்தில் நகைச்சுவையுடன் உணர்ச்சி கரமான கட்டங்களும் நிறைய இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட காட்சியில் மட்டுமல்ல. பல காட்சிகளில் நகைச்சுவை நடிகரான நாகேஷ் மக்களை அழ வைத்திருக்கிறார். இதற்கு டைரக் டர் மட்டும் காரணமல்ல. நடிகரும்தான். ஒவ்வொரு காட்சியிலும் உழைத்துச் சிறப் பாகச் செயல்பட்டார். பாலசந்தரும் காட் சிக்குக் காட்சி உடனிருந்து செயல்பட்டார்.''

''டைரக்ஷன் என்பதற்கு என்ன விளக்கம் தருவீர்கள்?''

''ஒரே வரியில் கூறலாம். மக்களைப் படத் துடன் ஐக்கியப் படுத்துவதுதான் டைரக் ஷன். இப்படத்தைப் பொறுத்தவரை நாங்கள் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றுவிட்டோம்.''


பேட்டி: **சவன்**

ரூ. 6650 செலவிலே லண்டனில் பஸ் பிரயாணம் செய்வீர்.

ரூ. 5850 செலவிலே சுவையான இத்தாலிய உணவு அருந்துவீர்.
ரூ. 6590 செலவிலே ஸ்விட்ஸர்லாந்தின் குளுமையை அனுபவிப்பீர்.
ரூ. 6600 செலவிலே மோனலிஸாவின் புன்னகையின் ரகசியம் அறிவீர்.

ரோம், ஜெனீவா, பாரிஸ், லண்டன்—எவ்விடமும் செல்வீர் அதுமட்டுமல்ல எங்கள் சுற்றுப்பயண எக்ஸ்கர்ஷன் கட்டணத்திலேயே வேறுபல இடங்களுக்கும் சென்றுவருவீர்.

மிலன் ரூ. 6099 ப்ரஸ்ஸெல்ஸ் அல்லது ப்ராக் அல்லது வார்ஸா ரூ. 6600 ஐரோப்பாவுக்கான எல்லா எக்ஸ்கர்ஷன் கட்டணங்களுமே 14 லிருந்து 90 நாட்கள் வரை செல்லுபடி ஆகின்றன. தவிர வழியில் ஓரிடத்தில் தங்கிவிட்டுப்பயணம் தொடரலாம். இந்தியா யூ.கே. கட்டணம் 21 லிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடி ஆகிறது. தவிர ரூ. 7350 செலவிலே வழியில் ஓரிடத்தில் தங்கிவிட்டுப் பயணம் தொடரலாம். எல்லா எக்ஸ்கர்ஷன் கட்டணத்தின்படி பம்பாய்/டில்லியிலிருந்து பயணம் தொடங்க முடியும். கூடுதல் விவரங்களுக்கு உங்கள் டிராவல் ஏஜெண்ட் அல்லது ஏர்-இந்தியாவுடன் தொடர்பு கொள்ளுங்கள்.



ஏர்-இந்தியா

சுபமான பயணம்... சுபமான செய்தி

AI-3908

கேள்வியும் நானே; பதிலும் நானே!



(சமீபத்தில் ஒரு பிரபல வார இதழ் 'கேள்வியும் நானே; பதிலும் நானே' என்ற தலைப்பில் வாரா வாரம் பல பிரமுகர்களைக் கேள்வி — பதில் எழுதும்படி கேட்டு வெளியிட்டது. நாமும்தான் ஒரு முக்கிய ஆசாமியாயிற்றே, நம்மையும் கேட்பார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த எழுத்தாளர் ஏகாம்பரம், சில கேள்வி பதில்களைத் தயார் பண்ணி வைத்திருந்தார். ஆனால் துரதிருஷ்ட வசமாக (வாசகர்களைப் பொறுத்தவரை அதிர்ஷ்ட வசமாக!) அவரை எழுதும்படி யாரும் கேட்கவில்லை. இதனால் மனமுடைந்து போன எழுத்தாளர் ஏகாம்பரத்தை உற்சாகப் படுத்த, அவை இங்கு பிரசுரிக்கப் படுகின்றன. இதைப் படித்து விட்டு யாரும் மனமுடைந்து போக மாட்டார்கள் என்று நம்புகிறோம்!)

•

கே: இந்தப் பகுதியில் தாங்கள் எழுத ஒப்புக் கொண்டதன் காரணம் என்ன?

ப: ஒரு சிறந்த இலக்கிய எழுத்தாளனை என்னைப்பற்றிப் பல விவரங்களை அறிய மக்கள் ஆர்வமாக இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். நாளைக்கே சாகித்ய அகாடமி விருது, ஞானபீட விருது போன்றவைகளைப் பெறப் போகும் ஒருவர் என்பதால் கேட்டிருக்கிறார்கள். சுய பெருமை இல்லாத பதில்களைத் தரலாம் என்ற காரணத்தால் ஒத்துக் கொண்டேன்.

கே: உங்களுக்குப் பிடித்த நாவல்கள் என்ன?

ப: ''துணியே, உன்னைத் துவைக்கிறேன்'' 'ஒரு ஜலதோஷம் தும்மலாகிறது' 'பூமிக்குள் இருப்பது மண்' ஆகிய மூன்று நாவல்களும்.

கே: அவற்றை எழுதியவர் யார்?

ப: ஏ, ஏகாம்பரமே! இதென்ன கேள்வி? உனக்குப் பதில் தெரிந்தும் தானே கேட்கிறாய். உன் சுய பிரதாபத்தைப் பறை கொட்ட வேண்டாம். இந்த அற்புத, ஒப்புயர்வற்ற, ஆழமான, கனமான, உயரமான, அகலமான இலக்கியச் செல்வத்தை உருவாக்கித் தமிழன்னையின் மணி மகுடத்தில் ஒளிரும் வைரங்களாகத் தந்தது நீதான் என்பதை நீ சொல்லித்தான் லட்சோப லட்ச தமிழ் வாசகர்கள் தெரிந்து கொள்ளப் போகிறார்களா?

கே: இந்தத் துறைக்கு வருமுன் எங்கு இருந்தீர்கள்?

ப: ஆற்றுத் துறையில். அந்த அனுபவங்களைக் கொண்டுதான் 'துணியே உன்னைத் துவைக்கிறேன்' என்ற பேரிலக்கியத்தை நான் படைத்தேன்.

கே: நீங்கள் சினிமாவில் திரைக் கதை போன்றவைகளை எழுதுவது உண்டா?

ப: இதுவரை ஆயிரத்து முந்நூறு திரைக் கதைகளை எழுதியுள்ளவன் நான். கடந்த நாற்பது ஆண்டுகளாக சினிமாப் பாட்டு புத்தகங்களில் வரும் திரைக் கதைச் சுருக்கங்களை நான்தான் எழுதியிருக்கிறேன். சம்பூர்ண ராமாயணம், சகுந்தலா, வள்ளித் திருமணம் போன்ற படங்கள் வெற்றிகரமாக ஓடியதற்குக் காரணம் என்னுடைய திரைக்கதைச் சுருக்கங்களே.. ''மற்றவை வெள்ளித் திரையில் காண்க'' என்ற வாசகத்தை உருவாக்கியவனே நான்தான்.

கே: அயல் நாட்டுப் பயணம் போய் இருக்கிறீர்களா?

ப: பயணம், பயம், பணம், பணயம் — ஆகிய வார்த்தைகள் எனக்குத் தெரியாது.

கே: கவிதை எழுதுவது உண்டா?

ப: எத்தனை நாள் மறைத்து வைப்பது? இந்தக் கேள்வி — பதிலில் பொய்யான தகவலைத் தரப் போவதில்லை. பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, ஆகியவைகளை 'சுப்பிரமணிய பாரதி' என்ற புனைபெயரில் எழுதி இருக்கிறேன்.

கே: தமிழ்ப் பத்திரிகைகளைப் பற்றி உங்கள் கருத்து என்ன?


ப: இந்தக் கேள்வி — பதில் பகுதியை எழுதச் சொன்ன இந்தப் பத்திரிகையின் ஆசிரியர்தான் உண்மையில் இலக்கியச் சேவை செய்து உண்மையான எழுத்தாளர்களுக்கு ஆதரவு தருகிறார். மற்றவர்கள் யாரும் என் கதைகளைப் பிரசுரிப்பதில்லை. ஆகவே அந்தப் பத்திரிகைகள் விரைவில் வாசகர்களின் ஆதரவை இழக்கும் என்பதில் ஐயமில்லை.

கே: உங்கள் அரசியல் பணி என்ன?

ப: சுதந்திரப் போராட்டத்தில் நான் ஆற்றிய பணி அளவிட முடியாதது. 'வெள்ளையனே வெளியேறு' என்று காந்திஜி குரல் கொடுத்தபோது, காங்கிரஸ் கூட்டங்களில் 'பண்டித மோதிலால் நேருவைப் பறிகொடுத்தோமே' என்று முகாரியில் நான் பாடுவேன். ரகசியக் குறிப்பெடுக்க வந்த வெள்ளைக்கார அதிகாரிகள் வெளியேறி ஓடிவிடுவார்கள்!

—கமல்

அமெரிக்க ஊடலும் இந்திய கூடலும்!



இங்கிலாந்தில் நான் மூன்று வருஷங்கள் தங்கி வேலை பார்த்திருக்கிறேன். ஐரோப்பா முழுதும் நன்றாய் சுற்றிப் பார்த்திருக்கிறேன். என்றாலும் அமெரிக்காவில் மூன்று மாதங்கள் பயணம் செய்தது என்னால் மறக்க முடியாத அனுபவம்.

நியூயார்க், ஸான் பிரான்ஸிஸ்கோ, லாஸ் வேகாஸ், க்ராண்ட் கான்யன் போன்ற இடங்கள் தந்த பிரமிப்பைச் சரியாய்ச் சொல்ல எனக்குத் தெரியவில்லை.

லாஸ்வேகாஸில் ஒரு தமாஷான அனுபவம். உலகின் சூதாட்ட நகரம் என்றும், உலகின் கேளிக்கை நகர் என்றும் லாஸ்வேகாஸ் அழைக்கப் படுவது உங்களுக்குத் தெரிந்திருக்கும். உலகத்தின் மூலை முடுக்கிலுள்ள பணக்காரர்களெல்லாம் அங்கு சூதாடவும், கேளிக்கைகளைக் கண்டு களிக்கவும் வருகிறார்கள். நானும் என் மனைவியும் இந்த நகரத்தில் இரண்டு நாட்கள் தங்கினோம். பிரம்மாண்டமான ஹோட்டல், மூவாயிரம் அறைகள், பத்து நீச்சல் குளங்கள், இரண்டு கால்ஃப் கோர்ஸ், மிகப் பெரிய சூதாட்ட ஹால் என்று அந்த ஹோட்டல் தடபுடலாய் இருந்தது.

மனத்தை மயக்கும் சூழ்நிலை; அழகான பெண்கள் சிரித்த முகத்தோடு இலவசமாக உணவு, மற்றும் பானங்களைக் கொடுக்க, நேரம் போவது தெரியாமல் ஸ்லாட் மெஷினில் விளையாடின பிறகு, நடுநிசி ஷோவைப் பார்த்தோம். நடனம், பாட்டு முடிந்து வெளியே வந்தபோது இரவு மணி இரண்டு.

படுக்க மனம் இல்லை. சொப்பனபுரி மாதிரி ஜகஜ்ஜோதியாய் மின்னிய தோட்டத்தில் காலார நடக்க எண்ணிப் போனோம். இரவு மணி இரண்டு மாதிரியே இல்லை. திருவிழாக் கூட்டம்.

என் மனைவி கால் வலிக்கிறது என்றாள். நீர் ஊற்றுக்கு அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்தோம்.

சற்றுத் தள்ளி ஒரு நடுத்தர வயது ஆண், அவரின் பிடியில் இள வயதுப் பெண், ஊடலில் இருந்தார்கள். எங்களைப் பார்க்க நேரிட்டதால் சிநேக பாவத்துடன் சிரித்து 'ஹலோ' என்றார்கள். நாங்களும் பதிலுக்கு 'விஷ்' செய்தோம்.

அருகில் வந்து உட்கார்ந்தார்கள்.

''அழகான இரவு'' என்றார்.


''ஆம்'' என்றேன்.

''இண்டியன்ஸ்?'' —

''ம்...''

''எனக்குத் தெரியும். நான் பம்பாய்க்குச் சிங்கப்பூர் போகும் வழியில் வந்து தங்கி இருக்கிறேன்'' —

அவர் பெரிய வியாபாரி. பல நாடுகளுக்குப் பக்கத்து வீட்டுக்குப் போய் வருவது மாதிரி செல்பவர் என்று புரிந்து கொண்டோம்.



திடீரென்று அவர் ''உங்களைப் பார்த்தால் எனக்குப் பாவமாக இருக்கிறது?'' என்றார்.

''ஏன்?'' என்றேன்.

''அழகான இரவு; உற்சாகமான சூழ்நிலை— என்றாலும் உங்களால் எங்களைப் போல் உடனடியாய் அனுபவிக்க முடியாதே என்று நினைத்து வருந்துகிறேன்.''

எனக்கு அவர் பேச்சுப் புரியவில்லை. அவரே தொடர்ந்தார்.


''பம்பாயில் தங்கின போது இரண்டு ஹிந்தி சினிமாக்களைப் பார்த்தேன். அதன் மூலம் உங்கள் நாட்டில் காதலர்களோ தம்பதிகளோ நினைத்த போது காதல் செய்வது கஷ்டம் என்பதைப் புரிந்து கொண்டேன். அடேயப்பா! காதலிப்பது என்றால் உங்கள் தேசத்தில் என்ன பாடுபட வேண்டியிருக்கிறது!'' என்றார்.

அட ராவணா! சினிமாவில் நாயக, நாயகி ஓடி, ஆடி, உருண்டதைக் கண்டதும் இந்தியாவில் இருக்கும் அத்தனை ஆணும், பெண்ணும் இப்படியெல்லாம் செய்த பின்பே உறவு கொள்ள முற்படுவார்கள் என்று அவர் தீர்மானித்து விட்டார் என்பது தெளிவாகவே, என் மனைவிக்கும், எனக்கும் சிரிப்பு அடக்க மாட்டாமல் எழுந்தது.

சொன்னவர்: சந்திரசேகரன்
கேட்டு எழுதியவர்: சந்திரா

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Guindy, Madras-600032. Editor: K. Rajendran

உங்களுடைய கோடைகால விடுமுறை சில மணிகளுக்கப்பாலே தான் உள்ளது!



இந்தியாவின் ஒவ்வொரு பகுதியும் ஆயிரக்கணக்கான வியப்பூட்டும் ஆனந்தத்தை கட்டாயமாக உங்களுக்கு வழங்கும். இவைகளை சில மணி நேரங்களிலேயே அடைந்து விடாலம்—விமான மூலம்.

வடக்கு

கஷ்மீர் : உண்மையிலேயே ஒரு விந்தையுலகம். படகு வீடுகள், நீர் சருக்கு விளையாட்டுகள். மேலும், ஹிமாலய மலைகள். அருகிலுள்ள விமான நிலையம்: ஸ்ரீநகர்.

டல்ஹவுசி : இமாலய அடிவார குன்றுகளின் மேல் அமைந்துள்ளது. குளுமையான, அமைதியான விடுமுறைக்கு உகந்தது. அருகிலுள்ள விமான நிலையம் : ஜம்மு.

மசூரி : அமைதியான விடுமுறைக்கு ஏற்ற இடம், உத்திரப் பிரதேச குன்றுகளின் மீது அமைந்துள்ளது. இங்கே நீண்ட தூரம் காலார நடந்து செல்லலாம். அதிக உயரத்திலுள்ள இடங்களை அடைய "ரோப்வே" வசதியும் உள்ளது. அருகிலுள்ள விமான நிலையம் : டெல்லி.

தெற்கு

உதகமண்டலம் : யூகாலிப்டஸ் மரங்களுள்ள ரம்மியமான மலை விடுமுறை ஸ்தலம் நீலகிரியிலுள்ளது. அருகிலுள்ள விமான நிலையம்: கோயம்பத்தூர்.

பங்களூர் : 900 மீட்டர் உயரத்திலுள்ள பூங்காவன நகரம். கர்நாடகத்தை சுற்றிப் பார்க்கவும், ஜோக் நீர்வீழ்ச்சிகளை அடையவும், அல்லது உதகமண்டலத்திற்கு கூட செல்லவும், பங்களூர் ஒரு உன்னதமான மைய இடமாகும். இந்தியாவின் மற்ற பகுதிகளுடன் இணைக்கும் விமான நிலையம்.

ஹார்ஸ்லி ஹில்ஸ் : சிவப்பு நிற சந்தனக்கட்டை மற்றும் யூகாலிப்டஸ் மரங்களுள்ள தோப்புகள் நிறைந்த அமைதியான விடுமுறை ஸ்தலம். விமான நிலையம்: பங்களூர் அல்லது திருப்பதி.

கிழக்கு

டார்ஜிலிங் : அமைதியான விடுமுறை ஸ்தலம். இங்கே ஹிமாலயத்தின் கண்கொள்ளா காட்சியைக் காணலாம். காலிம்போங் மற்றும் சிக்கிம் போன்றவற்றிற்கு நுழைவாயில். அருகிலுள்ள விமான நிலையம்: பாக்டோக்ரா.

ஷில்லாங் : தேவதாரு மரங்களின் நறுமணத்தை நுகர்ந்து கொண்டு காலார நடக்கலாம். கோல்ஃப் மைதானங்களுக்கும், இயற்கை காட்சிகளுக்கும் புகழ்பெற்றது. அருகிலுள்ள விமான நிலையம்: கௌஹாத்தி.

இம்பால் : காடுகள் நிறைந்த குன்றுகள் மற்றும் ஏரிகளின் மத்தியிலுள்ள பசுமையான பள்ளத்தாக்கு. "போலோ" விளையாட்டு, கிராமிய நடனங்கள் போன்றவற்றை கண்டு களிக்கலாம் : இங்கிருந்து இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கு எளிதில் செல்ல விமான நிலையமும் உள்ளது.

மேற்கு

சபுதாரா : 1000 மீட்டர் உயரத்திலுள்ள ரம்மியமான சீதோஷ்ணத்தையும், வசீகரமான இயற்கை காட்சிகளையும் கொண்ட மலை விடுமுறை ஸ்தலம். அருகிலுள்ள விமான நிலையம் : அகமதாபாத்.

மஹாபலீஷ்வர் : மராத்தா கோட்டை, கற்கோவில்கள் மற்றும் வசீகரமான சீதோஷ்ணத்தையும் கொண்ட 1500 மீட்டம் உயரத்திலுள்ள இடம். அருகிலுள்ள விமான நிலையம் : பம்பாய்.

மவுண்ட் அபு : நாக்கி ஏரி கௌமுக், மற்றும் சூரியன் அஸ்தமனமாகும் முனை ஆகிய அமைதியான இடங்கள் கொண்டது. அருகிலுள்ள விமான நிலையம்: அகமதாபாத்.

எங்கிருந்தாலும் குறைந்த காலத்தில் சென்றுவிடலாம்.

நவீன விரை வேக விமானங்கள் மூலம் இந்தியன் ஏர்லைன்ஸ் இந்தியாவின் மூலைமுடுக்கிற்கெல்லாம் இட்டுச் செல்லும்.

எல்லா ஏற்பாடுகளுக்கும் உங்கள் பயண ஏஜெண்ட் உதவி செய்வார்.

பல இடங்களுக்கும் செல்லுங்கள்
மூலம் பறந்து
இந்தியன் ஏர்லைன்ஸ்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 60 மலேசியக் காசு